Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

ஜூலை- 2023
நாடார் :13
முரசு :7



# இந்தியன் நாடார் முரசு
INDIAN NADAR MURASU

விலை ரூ.15/-

ஒன்று படுவோம்..!



வென்று காட்டுவோம்..!!

## இந்திய நாடார்கள் பேரமைப்பு

INP

15 ஜூலை 2023



## முப்பெரும் விழா
2023

பெருந்தலைவர் பிறந்தநாள் விழா ● பேரமைப்பின் துவக்கநாள் விழா
புகழாளர்களுக்கு விருது வழங்கும் விழா

பட்டிதொட்டி எங்கும் பள்ளிகள் தந்த கல்வி வள்ளல்
வறியவர் வாழ்வில் ஒளியேற்றிய கலங்கரை விளக்கம்
உலகம் போற்றும் உத்தம தலைவர்

# ஐயா காமராஜர்

அவர்களின் பிறந்த நாளில்
அவர் வழி நடக்க உறுதியேற்போம்...

**ராகம்.சௌந்தரபாண்டியன் B.A.,**
நிறுவனர் – தலைவர்



இந்திய நாடார்கள் பேரமைப்பின் முப்பெரும் விழா - 2023 இந்த ஆண்டு கல்வி பெருவிழாவாக நடைபெறவிருக்கிறது. இந்த விழாவில் 10 மற்றும் 12 வகுப்பில் இந்த ஆண்டு முதல் மதிப்பெண்கள் பெற்ற பல்வேறு மாவட்டங்களில் இயங்கி வருகின்ற நமது நாடார் உறவின்முறை உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகையும் பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும்.

**விண்ணப்ப விபரங்களுக்கு : 044 48644448 , 80562 95448**

நிர்வாக அலுவலகம் : பொன்மாரி இல்லம், எண் : 23, திருநகர், 29-வது தெரு, வில்லிவாக்கம், சென்னை - 600 049.
அலைபேசி : 80562 95448 | தொலைபேசி : 044 - 48644448 | Web : Inporg.com mail: INP.NADAR@gmail.com


A Complete Solution for your bathrooms........
Rays® TAPS & VALVES
Rapidflow® Bathroom Accessories
CRYSTAL TAP
WASHING MACHINE TAP
CRYSTAL PILLAR COCK
FOAM FLOW
FLUSHING CISTERN
CRYSTAL SINK COCK GIRAFFE NECK
CRYSTAL 1/4 TURN TAP
CRYSTAL TWO WAY TAP
CLASSIC
SEAT & COVERS
UNIVERSAL
Manufactured by:
Rays TAPS & VALVES
RAY-TECH PLASTICS
6/34, Muthuramalingam Street, Gandhi Nagar, Ekkaduthangal, Chennai - 600 032.
Customer Care No. : 044-2225 3652
Email : raytechplastics@gmail.com
Manufactured & Marketed by :
PRECI-TECH PLASTICS
2, Balavinayagar Koil Street, Ganapaty Nagar, Ekkaduthangal, Chennai - 600 032.
Tel: 044-2225 2586, 044-2225 2871, Tele Fax: 044-2225 4955,
Customer Care No.: +91-99400 12761
E-mail: precitechplastics@gmail.com
Website: www.precitechplastics.com
Rays® Group of Companies
RAINI INDUSTRIES INDIA PVT LTD
Leading tool makers for thin walled containers in South India and manufacturers of plastic, sheet metal, rubber components & dies.
MACHINED PARTS
AUTOMOBILE COMPONENTS
BUS BARS
ELECTRICAL COMPONENTS
ENGINEERING PLASTIC COMPONENTS
ELEVATOR COMPONENTS
Thin Walled Containers
RAINI INDUSTRIES
Office & Tool Room :
No. 6, Nehru Street, Sardar Colony, Ekkattuthangal, Chennai - 600 032.
Ph : 044 - 2225 0894 / +91 - 99400 12762
Factory : No.139, SIDCO Industrial Estate, Thirumudivakkam, Chennai - 600 044.
Ph : 044 - 4285 2096 / +91 - 99407 97667 / Website : www.rainiindustries.com
E-mail : maryadmin@rainiindustries.com / karthinidevi@rainiindustries.com
RAYMART
SUPERSTORE
Provisions
Fruits
Vegetables
Textiles
Stationery
Foot wears
Gift Articles
Soft Toys
Hand Bags
School Bags
Helmets
Watches
Gold Covering
Silver Jewellery
RAY MART
SUPER MARKET & TEXTILES
ALL ITEMS UNDER ONE ROOF
மெயின் ஸ்டோர் : எண்.9, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32. போன்: 044-22250645 E-mail : raymartchennai@gmail.com
கிளைகள் : 73/3, மேற்கு ஜோன்ஸ் ரோடு [பழைய ஜெயராஜ் திரையரங்கம் எதிரில்], சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 044-24891476
எண்: 1, கங்கையம்மன் கோயில் தெரு, ஜாஃபர்கான்பேட்டை, சென்னை - 600 083. போன்: 044-24891942
2

80வயதில் இலக்கிய உலகிற்கு 85 மரபு மீறா கவிதை நூல்கள் வெளியிட்டு சாதனைபுரிந்த, ஆன்மிக கவி

எனது தந்தை

அருப்புக்கோட்டை அருட்கவிஞர்.அ.காசி அவர்களின்

# ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:06.07.1936 **28.7.2023** மறைவு:28.07.2016



என்றும் அவரது நினைவில் வாழும் அன்பு மகன் மற்றும் குடும்பத்தினர்

முனைவர்.கா.சுதாகரன்

(பணி நிறைவு)

முதல்வர், எஸ்.பி.கே.கல்லூரி, அருப்புக்கோட்டை.

# ANNAI VEILANKANNI'S
## GROUP OF EDUCATIONAL INSTITUTIONS



### Courses Offered

### COLLEGE FOR WOMEN (Arts & Science)
Affiliated to University of Madras | Accredited by NAAC

**UG Courses**

- **B.Com.**
  - General
  - Accounting & Finance
  - Computer Applications
  - Information Systems Management
  - Corporate Secretaryship
- **B.A.**
  - English Literature
- **B.B.A.**
- **B.C.A.**
- **B.Sc.**
  - Bio-Chemistry
  - Mathematics
  - Computer Science

**PG Courses**

- M.Com. • MHRM • M.Sc. • Comp. Science • Bio-Chemistry

### COLLEGE OF ENGINEERING
Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai

**B.E.**

- Civil • Mechanical • EEE
- ECE • Computer Science

SC / ST / SCA / BCC மாணவர்களுக்கு கல்வி மற்றும் பேருந்து கட்டணம் கிடையாது

DIRECT SECOND YEAR LATERAL ENTRY SEATS AVAILABLE

**ANNA UNIVERSITY COUNSELING CODE:**
**1133**

### Other Professional Courses

- B.Ed. • D.T.Ed.
- B.Pharmacy • M.Pharmacy
- B.Sc. Nursing
- Diploma in Nursing (GNM)









Dr. S. Devaraj
Chairman



Dr. D. Dev Anand
Secretary



Dr. D. Johny Christopher
Director

#81, VGP Salai, West Saidapet, Chennai-600 015
Tel.: 044-43523712, 24710820

#33, Gandhi Road, Near Perungalathur Railway Station
Nedungundram, Chennai-127
Tel.: 044-22794192, 22794155, 22794064

Helpline : 9282144444 | Email : mail4avc@gmail.com | www.annaiveilankannis.com

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்



கௌரவ ஆசிரியர்: **விஜய்வசந்தகுமார்.**

பேராசிரியர்: **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.*அர்னால்ட் அரசு ஜூலியன்*

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA

டாக்டர்.S.தேவராஜ் Chairman

Annai Veilankanni's Group of Educational Institutions

R.K.காளிதாஸ் தலைவர்.தெக்ஷணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார்

தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

போரூர் ஆனந்தராஜ்

தலைவர் நெ.து.நா.மகமை பரிபாலன சங்கம்.



தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:

**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**



இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர்
டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுருஷோத்தமன்,M.A.,B.Ed



ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY.
NOTHING INDIA NADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FATH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.



விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100
ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.
மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,
தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு
ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர்,$100
ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:
The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian
IFSC Code: KVBL0001651.

A/c **No: 1651173000000900**

**Google Pay : 9382172884 paytm 9382172884**


# ஆசிரியர் உரை

## சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!!!

சேர, சோழ, பாண்டியர் வழியில் வந்த நாடார்களே,

நாடார் முரசில் நம் வளர்ச்சி குறித்து பல செய்திகளை படித்து கொண்டு உள்ளோம். நம் எழுச்சி மூலம், நாம் இடைவிடாத முயற்சிகளை பற்றி நாம் அறிய வேண்டும்.

எப்போதும் நாம் எதையும் எதிர்பாராமல் உழைப்பால் உயர்ந்த சமுதாயம்.

மதுரை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் ஆண்டவர்கள் நாம். அப்பொழுது அன்றைய அரசர்கள் பக்கத்தில் ஆளும் அரசர்களை வென்று நாம் ஆட்சி ஆள வேண்டும் என்ற எண்ணம் மிக்கவர்கள்.

நமக்கும் 63வது திருமலைநாயக்கர்க்கும் போர் நடந்து நாம் தோற்றோம். மீண்டும் நம்படைகளை ஒன்று சேர்த்து போர் தொடுத்து திருமலைநாயக்கரை விரட்ட வேண்டும் என்ற முயற்சியை நாம் செய்தபோது, திருமலை நாயக்கர் நம்மை ஊரை விட்டு விலக்கி வைத்தனர். ஊர் கடைகளில் நமக்கு தேவையான பொருட்கள் கொடுக்க கூடாது, சலவை தொழிலாளர்கள் சலவை செய்து கொடுக்க கூடாது, அழகு நிலையத்தார் நமக்கு பணி செய்ய கூடாது, கோயில்களுக்குள் நுழைய கூடாது என சட்டம் போட்டார். வேறு வழியின்றி ஊரைவிட்டு வெளியில் வந்தபோது மீண்டும் திருமலை நாயக்கர் படைகள் நம்மை விரட்டியது. பலர் இறந்தனர். நாம் ஓடினோம், ஓடினோம். நமக்கு பாதுகாப்பு கொடுத்தது தேரி காடுகள்.

தேரிகளில் உள்ள மணலை அள்ளி எடுத்து நாம் நம்மை துரத்தி வந்தவர்களை ஓடஓட விரட்டினோம். தேரி காடுகள் நமக்கு பாதுகாப்பு அளித்தது என்றால் மிகையாகாது. தேரி காடுகளில் இருந்த பனை மரம் நமக்கு வாழ்வளித்தது. நாம் யாரிடமும் கையேந்தி நின்றவர்கள் இல்லை.

பனை மரத்தில் இருந்து தயாரித்த பொருட்களை எடுத்து விற்பனைக்கு எடுத்து சென்றால் எந்த பெரிய ஊர்களுக்கு உள்ளேயும் நாம் செல்ல முடியாது ஊருக்கு வெளியே நின்று விற்பனை செய்ய வேண்டும். பாதுகாப்பு இல்லை, இரவில் வெட்டவெளி பகுதியில் படுக்க வேண்டும் என்ற நிலை, நாம் விற்பனைக்காக கொண்டு சென்ற பொருட்களுக்கு நாமே வரிவிதித்து அந்த பணத்தில் பெரிய ஊர்களுக்கு வெளியில் இடங்கள் வாங்கி நாம் நமக்குள் பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கினோம். அந்த இடம் வண்டிபேட்டை என இன்றும் திகழ்கிறது.

இராஜாஜி அவர்கள் பொறுப்பேற்றபோது வருமானமே இல்லாமல் எப்படி நாட்டை ஆள்வது என்று தவித்தபோது நாம் நமக்குள் வரி வசூல் செய்து உயர்ந்து நிற்பதை அதிகாரிகள் சொல்லி வரி போடவைத்தார்கள் நாட்டுக்கே முன் உதாரணமாக திகழ்ந்தவர்கள் நாம்.

நம் சமுதாயம் என்றும் எதையும் எதிர்பார்த்து யாரிடமும் கையேந்தி நின்றது இல்லை. நாம் அரசர் வம்சம் என்பதை மாண்புமிகு முன்னாள் முதல்வர் திருமதி.ஜெயலலிதா அவர்கள் கூறியது நமக்கு பெருமை. நம் சமுதாயம் மேலும் மேலும் முன்னேற வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு செயல்படும் நம் பத்திரிகை ஆசிரியர் திரு.ஜூலியன் நாடாரின் விடாமுயற்சி நம் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக அமையும்! அமைய வேண்டும்.

இவண்.த.பத்மநாபன், பெரம்பூர்.




எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை

## அடையார் ஆனந்த விநாயகர் காய்கனி & பழங்கள் அங்காடி

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

## அடையார் முருகன் டிராவல்ஸ்

உரிமையாளர்: த.பரமசிவன்

24 மணி நேர சேவை

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார், சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,

P.R. Dinakaran ஸ்ரீவனங்காத்த பார்வதி அம்மன் துணை Ph: 044-2440 1255 Mobile: 9884447771



## THIYAGARAJAN Bros

Waste Paper & LED, LCD T.V, Lap Top, All Computer Items, Mobile Phones, A/C.Refrigrator, Washing Machine, All Metals & All kinds of Scrap Dealers

New No:20, 2nd Cross Street, Kasthuribai Nagar, Adyar, Chennai-20.



உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813

## பேபி. புரோட்டீன்ஸ்

**WHOLESALE & RETAIL**

**2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.**

ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் துணை.

G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்

## ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி

9789427171
7397152711

## வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்

கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.

## ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை

எங்களிடம்: பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.

நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.



## REVATHI LABEL PRINTERS

**R.DHEVI 98414 41111, 99415 51111**

**Barcode Sticker, Multi Colour Sticker, Trolley Tags, Thermal Ribbons, Barcode Printers, Consumables, & Software Support.**

2/645, Habeeba Street, Chinna Neelangarai, Chennai-115.
Emaill: dhevi_rlp@yahoo.co.in




ஆர்.சித்தர்ராஜ் நாடார்
குட்வில் ரியல் எஸ்டேட்
136, ஆநீகாடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677
7200506699.



JEHOVAH
GROUP OF COMPANIES



•Lab Ezuipments Manufacturing •Industrial Lunricant Distributor
•Automotive Lubricant Distributor •Industrial Equipments & Spares
E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com
No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125

C.மதியழகன்
செல்:9789095625.
வாழ்க வளமுடன்
ஸ்ரீ கணேஷ் பவன்
SGB



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு
தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.

எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.




# ஒன்பதாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**தோற்றம்**
**02.05.1989**

**மறைவு**
**10.07.2014**

## திரு.P.**மகாராஜன்** Msc. B.L

**"பூவுலகில் சட்டம் பயின்று**
**வானுலகில் வாதாடச் சென்றவரே**
**நீ வரும் வரை காத்திருக்கும் உறவு"....**

**அம்மா , அப்பா, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.**

R.**பிச்சைகனி**
**ஸ்ரீ முருகன் பிளாஸ்டிக் பேப்பர்.**
**வேஸ்டேஜ் கடை**
**2/190, சரஸ்வதி நகர், 12வது தெரு, கைத்தறி நகர் நிலையூர், மதுரை-625005.**

# 7 லட்சம் திருமணங்களை இனிதே நிறைவேற்றிய

# வெற்றி திருமண மையம்

## பதிவு கட்டணம் இலவசம்

**காலை 10 to இரவு 8 மணிவரை**
**எல்லா நாட்களும்**

அனைத்து இனத்தவருக்கும்
லட்சகணக்கான வரன்கள் உள்ளன

**புரோக்கர் கமிஷன் கிடையாது**

**இலவச ONLINE பதிவிற்கு**
**www.vetrimatrimony.com**

**பிளாட் நம்பர் 5, லேக் ஏரியா,**
**மாட்டுத்தாவணி பஸ் நிலையம் அருகில்,**
**மதுரை - 625 107.**

**73971 13833, 73970 43396**
**73970 94709, 73971 52597**



செல்: 98405 57997, 98415 49955

V.S.குமார் ரியல் எஸ்டேட்

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87

# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

## மகளிர் நலம்

**கேள்வி:**
பெண்கள் தாம் நம் நாட்டில் அதிக நாட்கள் வாழ்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அது உண்மையா? அதற்கு என்ன காரணம் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**பதில்:**
நீங்கள் கூறியது உண்மைதான். நம் நாட்டில் மட்டுமல்ல உலகளவிலும் பெண்கள்தான் ஆண்களைவிட அதிக நாட்கள் வாழ்கிறார்கள்.

**காரணங்கள்:**

❖ மாரடைப்பு, உயர் ரத்த அழுத்தம் மற்றும் ரத்தக் குழாய் சார்ந்த நோய்கள் ஆண்களையே அதிகம் பாதிக்கின்றன.

❖ விபத்தில் மரணம் அடைபவர்களில் பெண்களை விட ஆண்கள் அதிகம் உ.ம்:-தொழிற்சாலை, சாலை விபத்து.

❖ மன இறுக்கம் போன்ற மனநோய்கள் (Stress and Strain) ஆண்களுக்கு அதிகம். அதனால் உடல்நலம் பாதிப்படைகிறது.

❖ மது அருந்துதல், புகைபிடிப்பது மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையாகுதல் போன்ற தீய பழக்கங்கள் ஆண்களின் ஆயுட்காலத்தை வெகுவாகக் குறைக்கின்றன.

❖ சமீப காலத்தில் அச்சுறுத்தி வரும் எய்ட்ஸ் நோய் ஆண்களை அதிகம் பாதித்து மரணத்தை விளைவிக்கிறது.

❖ பெண்களின் ஆயுட்காலம் நீடிப்பதற்கு அவர்களுடைய ஈஸ்ட்ரோஜன் ஹார்மோனும் ஒரு முக்கிய காரணமாகும்.

**கேள்வி:**
எனக்கு 44வயதுதான் ஆகிறது. கடந்த இரண்டு வருடங்களாக எனது நெஞ்சில் அடிக்கடி படபடப்பு வருகிறது. அப்பொழுது மனதில் ஒருவிதப் பயம் ஏற்படுகிறது. ஆனால், ஒரு சில நிமிடத்திலேயே அது சரியாகிவிடுகிறது. பி.பி., சுகர் எதுவும் இல்லை. இது எதனால் வருகிறது? அதற்கு என்ன சிகிச்சை செய்து கொள்வது?

**பதில்:**
பதற்றம், பயம், மன உளைச்சல், அதிகமான காபி, மது, காய்ச்சல், கடுமையான உடற்பயிற்சி, தைராய்டு தொல்லை, ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் தொல்லை, ரத்தத்தில் தாழ்நிலை சர்க்கரை, ரத்த சோகை, குறைவான ரத்த அழுத்தம், ஆஸ்துமாவிற்கு உபயோகிக்கும் இன்ஹேலர், இப்படி படபடப்புக்கு பல காரணங்கள் உள்ளன. அனேகமாக நீங்கள் இறுதி மாதவிடாய் நெருங்கும் கட்டத்தில் உள்ளீர்கள் என்று நினைக்கிறேன். இது ஈஸ்ட்ரோஜன் ஹார்மோனின் விளைவாகக் கூட இருக்கலாம். இதை எளிதில் குணப்படுத்த முடியும். நீங்கள் பெண் சிறப்பு மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றால் படபடப்பு நீங்கி நலமடைவீர்கள்.

**கேள்வி:**
மிகவும் களைப்பாக இருப்பதாக ஒரு லேடி டாக்டரிடம் போனேன் அவர் ரத்தப் பரிசோதனை செய்துவிட்டு, உடலில் ரத்தசோகை இருப்பதாக அயன் டானிக் எழுதிக் கொடுத்தார். அது எனக்கு ஏற்றுக்கொள்ளவில்லை அது எனது பசியைக் குறைக்கிறது, மலம் சிக்கலாவதோடு, கருப்பாகவும் போகிறது. ஆகையால் நான் டானிக்கை நிறுத்திவிட்டேன். ரத்தசோகைக்கு மாத்திரையில்லாமல் வேறு வழி ஏதாவது உண்டா?

**பதில்:**
உணவைப் பற்றிய ஒரு பட்டியலையே தருகிறேன். முடிந்தளவிற்கு தொடர்ந்து சாப்பிட்டு வாருங்கள். நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும். தினமும் இரும்புச் சத்து அதிகமுள்ள கீரை, கோதுமை மாவு, வெல்லம், தேன், பேரீச்சம் பழம், ராகி, சிகப்பு அவல், மாதுளம் பழம், உலர் அத்தி, வேர்க்கடலை உருண்டை, முட்டை, பிரவுன் அரிசி, உலர் திராட்சை, மீன், கேரட் ஜூஸ், பீட்ரூட் ஜூஸ், அருகம்புல் சாறு போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**கேள்வி:**
சமீபகாலமாக எனக்கு பசி அதிகமாக எடுக்கிறது. அதனால் நிறைய சாப்பிடுகிறேன். ஆனால், உடம்பு இளைத்துக் கொண்டே போகிறது. சுகர் கிடையாது. அடிக்கடி படபடப்பு வருகிறது. அதிகமாக வியர்த்துக் கொட்டுகிறது. எப்பொழுதும் ஒருவித பதற்றத்துடனேயே இருக்கிறேன். இது எதனால் ஏற்படுகிறது டாக்டர்?

**பதில்:**
அனேகமாக உங்களுக்கு தைராய்டு சுரப்பி அதிகமாக தைராக்சின் ஹார்மோன் சுரப்பதால் ஏற்படும் "தைரோடாக்கி கோஸிஸ்" எனும் தொல்லையாக இருக்கலாம். தைராய்டு சுரப்பி கழுத்தின் முன் பகுதியில் உள்ளது. இது ஒரு நாளமில்லா சுரப்பி. இது தைராக்சின் எனும் ஹார்மோனை சுரக்கிறது. இதை உறுதி செய்ய ரத்தப் பரிசோதனை மற்றும் தைராய்டு சுரப்பி உள்ள கழுத்துப் பகுதியை அல்ட்ராசவுண்டு பரிசோதனையும் செய்ய வேண்டியிருக்கும். நோயின் தன்மையைப் பொறுத்து மாத்திரை அல்லது அறுவை சிகிச்சை முறையை பரிந்துரைப்பார்கள். இது முழுமையாக குணப்படுத்தக்கூடிய நோய்தான். கவலையை விடுங்கள்.

**தொகுப்பு: - எல்மாமதி..**

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின்121வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!



Ph:28440171. 28442494.

E.D.THANGARAJAN & SONS

Authorised Stockist in: Indian Cement Ltd. & Zuari Cement Steel, Firewood, Charcoal, Bricks, Sand, Blue Metals etc..,

New No:14, (OldNo:10), Ganapathy Mudali Street, Triplicane, Chennai-5. (Near Parthasarathy Swamy Temple)

Cell:9884687675, 9488491671.

SSS

அய்யா துணை

திருமண தகவல் மையம்

அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.

பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.



Velan Kraft House (P) Ltd.

Raw Material Suppliers To Paper Mills - Since 1972

R.Santhana Krishnan Director

Ad.off:2-C, First Main Road, Shastri Nagar, Adyar, Chennai-600 02

Mobile: 9840817442, 99625 17442, 80123 17442 E-mail:Velankraft@yahoo.com Web:www.velankraft.com





காமராஜர் புகழ் வாழ்க! கோட்டூர் வியாபாரிகள் சங்கம் நாடார் குலம் வளர்க!

கோட்டூர் சென்னை-85.

செயலாளர் ஆர்.பாஸ்கரன், செல்:9384875525



# நாடார் மறுமலர்ச்சி

## நாடார்களுக்கு எதிரான கலவரங்கள்

### சிவகாசிக் கொள்ளையின் பின்னணி

இந்தியாவில் மட்டுமின்றி உலகத்திலேயே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது, சிவகாசிக் கொள்ளை. ஒடுக்கப்பட்ட நாடார்கள் வணிகத்தில் முன்னேறுவதைக் காணப் பொறுக்காத ஏனைய ஜாதியினர் கொள்ளையிட்டு அழித்து பாழ்படுத்திய சிவகாசி இன்று ஒரு குட்டி ஜப்பானாக, தீப்பெட்டி மற்றும் அச்சுத் தொழிலில் உலகப் பிரசித்து பெற்றிருக்கிறது. நாடார்களின் உழைப்புக்கும், திறமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் இந்நகரின் சரித்திரம், நெஞ்சை நெகிழ வைக்கக் கூடியது.

கோர்ட் தடை உத்திரவையும் போலிஸையும் மீறி நாடார்கள், சிவகாசி விஸ்வநாதசாமி கோவிலுக்குள், 1898 செப்டம்பர் 7இல் நுழைந்தனர். இந்த தீட்டைத் தூய்மைப்படுத்தாமல் 1899 ஜூன் 6 வரை அக்கோவில் மூடியிருந்தது. சிவகாசி நாடார்களின் மாரியம்மன் கோவிலுக்குள் பூநூல் அணிந்து சென்று கலகம் செய்யும்படி தாழ்த்தப்பட்டவர்களை மறவர் தூண்டினர். 1899 ஏப்ரல் 26ல் வடக்கு சிவகாசியிலிருந்த மறவர் வீடுகளை எரித்து, 400 நாடார்களும் 200 மறவர்களும் அரிவாள், கத்தி, கம்புகளுடன் கலகம் செய்தனர். 40 மறவர் வீடுகளும், நாடார் ஷெட்டும் எரிந்தன, உயிர்ச்சேதமில்லை. போலீஸார் கலகத்தை அடக்கினர். நாடாருக்கு எதிரான பகை உணர்வு வளர்ந்தது.

கட்டினார்பட்டி, சங்கரலிங்கபுரம் ஆகிய கிராமங்களில் நாடார்களுக்கு ஊழியம் செய்ய வண்ணார்களைத் தடுப்பதுடன், நாடார்களைக் கொள்ளையடிக்கத் திட்டமிடுவதாக 1899 மே 16இல் மாவட்ட மாஜிஸ்ரேட்டுக்குப் புகார் வந்தது. சிவகாசி மறவர்களும், பிள்ளைமார்களும், நாடார்களை கொள்ளையடிக்க 2000 ஆட்களைத் திரட்டியிருப்பதாக மே 18இல் புகார் வந்தது. மே 23இல் நத்தம்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய ஊர்களில் 125 நாடார் வீடுகளைக் கொள்ளையிட்டு ரூ.5000 மதிப்புள்ள பொருட்களை மறவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், ஆசாரியார்களும் எடுத்துச் சென்றனர். சிவகாசியைச் சுற்றியுள்ள ஊர்களின் 2000 மறவர்கள், கிருஷ்ணப்பேரி கிராம நாடார்களை சீண்டுவதாகவும் பேட்டக்குளம் நாடார்களைக் கொள்ளையடித்ததாகவும் மே 23இல் புகார் கூறி, பாதுகாப்பு வேண்டினர். விருதுநகர் துணை மாஜிஸ்ரேட், நாடார்களுக்கு எதிராக ஏனைய ஜாதியினர் செய்யும் அநீதி, கலவரம், அழிமானம் ஆகியவற்றை எடுத்துக்கூறி, கலகம் சிவகாசி மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்குப் பரவும் அபாயம் இருப்பதை மே 22இல் சுட்டிக் காட்டினார். நாடார் வாழும் கிராமங்களில் இரண்டிரண்டு போலீஸை நிறுத்தலாம் என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் கருத்து தெரிவித்தார். ஆனால் அப்படிப்பட்ட கிராமங்கள் நிறைய இருந்ததால், இது சாத்தியப்படவில்லை. கிராம நாடார்கள் தம் நகைகளை சிவகாசியில் தங்கள் உறவினரிடம் கொடுத்து வைத்தனர். பலர் சிவகாசி நாடார் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

### கட்டவிழ்த்துவிடப்பட்ட கொள்ளையர்கள்

நாடார்களின் வீடுகளையும், நிலங்களையும் திட்டமிட்டு கூட்டம் கூட்டமாக வந்து மற்ற ஜாதியினர் கொள்ளையிட்டுச் செல்வதை நாடார்கள் மாஜிஸ்ரேட்டிடம் தினமும் புகார் கொடுத்த வண்ணம் இருந்தனர். சில தினங்களில், பல கொள்ளைகளைப் பற்றிய புகார்கள் கூட வந்தன. கொள்ளையற்ற நாள் என்பது அந்த காலக்கட்டத்தில் இல்லை. ஆங்கிலேய அரசும், நீதித்துறையும் நாடார்கள் கொள்ளையிடப்படுவதை நன்கு தெரிந்திருந்தன. பாதுகாப்பு தர உத்திரவிட்டன. ஆனால், அதை நிறைவேற்றும் அதிகாரிகள், நாடார்களுக்கு எதிரான சமூகத்தினர்களாதலால் கொள்ளையர்களைக் கட்டவிழ்த்து விட்டனர். ஒரு சில பெரிய அங்கிலேய அதிகாரிகள் கூட, தமக்குக் கீழ் வேலை செய்யும் மற்ற ஜாதி அதிகாரிகளின் சொல் கேட்டு, நிலைமையை மெத்தனமாக எடுத்துக் கொண்டனர். போதிய பாதுகாப்பு உரிய நேரத்தில் கிடைக்காததால் நாடார்கள், தொடர்ந்து அழிவுக்குள்ளாயினர்.

மே 31இல், தேவர் தலைமையில் 3000 பேர் ஸ்ரீவில்லிபுத்தூர் அய்யம்பட்டி மங்கலத்தில் தங்களுடைய வீடுகளைக் கொள்ளையிட்டு தீயிட்டு தங்களைக் காயப்படுத்தியதாக நாடார்கள் தந்தி கொடுத்தனர். அடுத்த நாள், வத்தராயிருப்பு, கூனூர் கிராமங்களில் 26 நாடார் வீடுகளை தேவர், தாழ்த்தப்பட்டோர், வேளாளர், முதலியார் எரித்தனர். அதே நாளில், கரிசல் குளத்தில் நாடார்களைப் புறக்கணித்து, அவர்களின் சொத்துக்களை அழிக்க 2000 பேரை நியமித்தனர். (தொடரும்)

# முதுமையில்.....இனிமை.................

புதிய தொடர்கதை.

நாடார் வரலாறு என்பது அமிழ்தம் போன்றது. அப்படிப்பட்ட வரலாற்றை நாடார் சமூகம் சரியான முறையில் அடுத்த தலைமுறைக்கு கடத்துதல் என்பது மிக முக்கியப் பணியாகும். ஆனால், நம் சமுதாயத்தில் ஒரு சிலரே சமுதாய வரலாற்றை படிப்பதிலும், அதை சேகரித்து அடுத்த தலைமுறைக்கு கடத்துவதிலும் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதிகமான பெருமைமிகு வரலாறுகள் இருப்பதால் என்னவோ சொந்த சமுதாயத்தினருக்கே அதன் அருமை தெரிவதில்லை. நாடார் சமூகத்தின் வரலாறுகளை ஆவணப்படுத்தும் வரலாற்று ஆய்வாளர்களும் நம் சமூகத்தில் மிக குறைவு தான். அப்படியான சிற்சில வரலாற்று ஆய்வாளர்களும் அவர்கள் எழுதிய வரலாறுகளும் கூட எளிதில் மறக்கப்படுவது வருத்தமான ஒன்றுதான். அப்படி மறக்கப்பட்ட ஒரு நாடார் சமுதாயம் பற்றாளரும் வரலாற்று ஆய்வாளருமான புலவர் சண்முகம் அவர்கள் பற்றி அண்மையில் கேள்விப்பட நேர்ந்தது. அவரது இனிமையான வாழ்க்கைப் பயணங்களையும் அவர் நாடார் சமுதாயத்திற்கு ஆற்றிய சில அரும்பணிகளையும் சற்றுத் திரும்பிப் பார்க்கலாம். புலவர் இரா.சண்முகம் அவர்கள் இயற்கை எழில் கொஞ்சும் கன்னியாகுமரி மாவட்டத்தில் காரங்காடு எனும் ஊரின் அருகே நெட்டாங்கோடு என்ற கிராமத்தில் 21.2.1937ஆம் தேதி இராமசாமி நாடார் - நாடாச்சி அம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் பி.லிட் வரை படித்தார். படிப்பை முடித்த பின் நூல் கம்பெனி ஒன்றில் சில காலம் பணியாற்றினார். பின்னர் சில வருடங்களாக தனியார் வங்கி ஒன்றில் வேலை செய்து வந்தார். அதன்பின், 1960 காலகட்டத்தில் மதுரையில் நாடார் மகாஜன சங்கம் நடத்திய "மஹாஜனம்" பத்திரிக்கையில் எழுத்தாளராக பணியில் சேர்ந்தார். படிப்பை முடித்த பின் நூல் கம்பெனி ஒன்றில் சில காலம் பணியாற்றினார். பின்னர் சில வருடங்களாக தனியார் வங்கி ஒன்றில் வேலை செய்துவந்தார். அதன்பின், 1960காலகட்டத்தில் மதுரையில் நாடார் மகாஜன சங்கம் நடத்திய "மஹாஜனம்" பத்திரிகையில் எழுத்தாளராக பணியில் சேர்ந்தார். இவர் இயற்கையிலேயே நல்ல தமிழ்ப் புலமை பெற்றிருந்ததின் காரணமாக இவர் எழுதிய செய்திகள் மஹாஜனப் பத்திரிகையில் இவருக்கு நன்மதிப்பைப் பெற்றுத் தந்தது. இந்த தொடர்பின் காரணமாக 1970களில் சண்முகம் அவர்கள் நாடார் மகாஜன சங்கத்தின் தூதுவராக கொங்கு பகுதிகளுக்கு நியமிக்கப்பட்டார். இந்தக் காலகட்டங்களில் கொங்குப் பகுதியில் குறிப்பாக ஈரோடு மாவட்டத்தில் கிராமம் கிராமமாக அலைந்து பல நபர்களை நாடார் மகாஜன சங்கத்தின் உறுப்பினர்களாக உருவாக்கி அங்கு வாழ்ந்த நாடார்களின் மத்தியில் புதிய எழுச்சியினை உருவாக்கினார். அந்த சமயத்தில் பல கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் கூட சரியாக கிடையாது. அப்படிப்பட்ட சமயத்திலும் கூட பலரை உறுப்பினர்களாக சேர்த்ததோடு கொங்கு மண்ணில் பல சங்க கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி காட்டினார். சில ஊர்களில் கூட்டம் நடத்த வேண்டி முந்தைய நாள் இரவே அங்கு சென்றடைந்து கிடைத்த இடத்தில் ஓய்வெடுத்து விட்டு அப்பகுதியில் உள்ள நம் சமுதாயத்தினர் கொடுக்கும் உணவை மட்டும் சாப்பிட்டுவிட்டு தன்னை மறந்து சமுதாயப்பணி ஆற்றி வந்துள்ளார். கொங்குப் பகுதிகளில் உள்ள மக்களை ஒன்றிணைத்ததின் காரணமாக 1980களில் அப்பகுதிகளில் வாழ்ந்த நாடார் சமுதாய மக்கள் சமூக ரீதியில் மிகப்பெரிய விழிப்படைந்தனர். சங்கத்தின் ஆலோசனைப் பெற்று கல்வி கற்று மேம்பட தொடங்கி பின் தங்களுக்கான உரிமைகளை அரசாங்கத்திடம் ஒன்றுபட்டு கேட்க ஆரம்பித்தனர். இவர் ஆற்றிய சமுதாயப்பணியின் காரணமாகவே இன்றளவும் கொங்குப்பகுதியில் மகாஜன சங்கத்தில் அதிகளவு உறுப்பினர்கள் உள்ளதாக சொல்லப்படுகிறது. இவரது முயற்சியால் கொங்குப் பகுதிகளில் 300க்கும் மேற்பட்ட நாடார் மகாஜன சங்க கிளை சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நாடார் மகாஜன சங்கத்தின் கிளைகள் அதிகரித்த காரணத்தால் சங்கத்தை பயன்படுத்தி பலர் கல்வி உதவியைப் பெற்றனர். இதற்கு சண்முகமே ஒரு கருவியாக இருந்தார். தூதுவராக இருந்த காலத்தில் குடும்ப வறுமையின் காரணமாக பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்த போதும் அயராது சமுதாயப்பணியை தொடர்ந்தார். சங்க கூட்டங்கள் நடத்தும்போது மேடையிலே நாட்டுப்புற பாடல்கள், காமராஜர் பற்றிக் கவிதைகள் பாடி அசத்துவார். இதோடு, இப்படி கூட்டங்கள் நடத்தும்போது அந்தந்த கிராமங்களில் உள்ள படித்த இளைஞர்களை மேடை ஏற்றி பேச வைத்து பல ஆளுமைகளை உருவாக்கியப் பெருமை இவருக்கு உண்டு. இதன் காரணமாக அங்குள்ள மக்கள் இவர் மீது மிகுந்த மரியாதையோடும் பாசத்தோடும் இருந்துள்ளனர். பின், சில கருத்து வேறுபாடுகள் காரணமாக மகாஜன சங்கத்தின் தூதுவர் பதவியிலிருந்து தன்னை விலக்கி கொண்டார்.

பின்னர், 1983 ஆம் ஆண்டு "நாடார் குல தீபம்" என்ற பத்திரிக்கையை தொடங்கினார். இதன் மூலம் இடைவிடாது சமுதாயப் பணியை தொடர்ந்ததோடு கொங்கு மண்ணில் மீண்டும் தனி ஆளாக காலைப் பதித்தார். இவரது எழுத்துக்கள் மிகுந்த புலமை வாய்ந்ததாகவும் யாவரையும் கவரக் கூடியதாக இருந்ததாலும் நாடார் குல தீபம் பத்திரிகை இந்த பத்திரிகை கொங்கு மண்ணிலே வெற்றி நடைப்போட்டது. இந்த பத்திரிகை தமிழகம் முழுவதும் 2019ஆம் ஆண்டு வரை மாத இதழாக வெளிவந்துள்ளது. 430 இதழ்கள் வரை வெளியான நாடார் குல தீபம், இரா.சண்முகம் அவர்களின் வயது முதிர்வு காரணமாக 2019முதல் கைவிடப்பட்டது. கொங்கு மண்ணிலே இவருக்கு மிக நெருக்கமாக இருந்தவர்களில் நாடார் சமுதாயம் பட்டக்காரர் ஈரோடு ராக்சம்பாளையத்தை சேர்ந்த பெருமாள் நாடார், வக்கீல் நாச்சிமுத்து, திருக்குறள் புகழ் தென்னிலை கோவிந்தன் ஆகியோர் ஆவர். அடுத்த இதழில் தொடரும்......


## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**தோற்றம்**
**26.10.1934**



**மறைவு**
**30.6.2021**

**உவரி திரு.V.N.S.துரைப்பாண்டியன், M.A.,M.Ed., அவர்கள்**

முன்னாள் தலைமை ஆசிரியர்,
இந்து நடுநிலைப்பள்ளி, ஆறுமுகநேரி மற்றும்
கா.ஆ.மேல்நிலைப்பள்ளி, பேயன்விளை, ஆறுமுகநேரி.

கடந்த 2021ஆம் ஆண்டு இதே நாளில் (30.6.2021)எங்களை விட்டு மறைந்தாலும் என்றும் எங்கள் நினைவில் வாழ்ந்து வழிகாட்டி வரும் ஒளிவிளக்கிற்கு எங்கள் இதய அஞ்சலி.

**பிரிவால் வாடும்**

**மனைவி:-D.ஜெயஜானகி,M.A.,M.Ed**

முதுநிலை ஆசிரியர் (ஓய்வு),
கா.ஆ.மேல்நிலைப்பள்ளி, ஆறுமுகநேரி
மகன்கள், மகள்கள், மறுமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார் உறவினர்கள்.
பேயன்விளை, ஆறுமுகநேரி, தூத்துக்குடி
மாவட்டம்.
தொலைபேசி:9629440222, 6382199206.



அம்பத்தூர்: 9840287570
திருமுல்லைவாயில்: 9840948727

# அமிர்தகனி திருமண தகவல் மையம்

(நாடார் சமூகத்திற்கு மட்டும்)

எண்:5, 3வது தெரு, வள்ளலார் நகர், திருமுல்லைவாயில், சென்னை-62.



உவரி ஸ்ரீ சுயம்புலிங்க சுவாமி துணை

## ஸ்ரீ மகாலட்சுமி ஜோதிட நிலையம்

**நாடார் திருமண தகவல் மையம்.**

எண்:17, டாக்டர் அம்பேத்கர் சாலை, பெரியார் நகர் விரிவு, மடிப்பாக்கம், சென்னை-91.
நெல்லை எம்.ஆர்.இராமச்சந்திரன்நாடார்.,M.Sc., Astrology.
E-mail:yogamaster.chandran@gmail.com Ph:9786722267. 9444062989.
வாட்சஆப்பில் தொடர்பு கொள்ளவும்.

**இல்லத்தரிசிகளின் இனிய தேர்வு........**

SURIYAN

SPICES-MASALA-OIL

CHENNAI

CUSTOMER CARE

Ph-9361999639

**நாட்டு சர்க்கரை, SURIYAN விளக்கு ஏற்றும் எண்ணெய்-200ml500ml மற்றும்1litter**

**Wanted Distributoes : 9361999639 . suriyanmasala@gmail.com**

# 36வது கல்வி ஆண்டில் அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள்



Chairman
Dr. S. Devaraj

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம் பாரம்பரிய புகழ்மிக்க பாலூர் ஆசான் குடும்பத்தில் திரு.சபரியானந்தம் ஆசான்-திருமதி.மரியதங்கம் அம்மாள் தம்பதியரின் மூன்றாவது திருக்குமாரராக 1953ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 6ஆம் தேதி ச.தேவராஜ் பிறந்தார்.

**இளமையும் கல்வியும்:**

சிறு வயதிலிருந்தே சுறுசுறுப்பாகவும், நற்பண்புகள், ஒழுக்கம், அறிவுக்கூர்மை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, இறைபக்தி ஆகியவற்றில் சிறந்து விளங்கி பெற்றோருக்கும், உற்றோருக்கும் உள்ளம் மகிழ வைக்கும் பிள்ளையாக உறுதுணையாக இருந்தார். "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்பதற்கு ஏற்ப ஆரம்ப பள்ளிபருவத்திலேயே அறிவுச்சுடர் மிகும் மாணவராக விளங்கினார். கருங்கல் அரசு உயர்நிலைப்பள்ளியில் பள்ளி படிப்பையும், மார்த்தாண்டத்தில் உள்ள நேசமணி நினைவு கிறித்தவக் கல்லூரியில் கல்லூரி படிப்பையும் நிறைவு செய்தார்.

**சென்னையின் பயணம்:**

1973ஆம் ஆண்டில் தனது இருபதாம் வயதில் சென்னைக்கு வந்தார். நல்லதொரு வேலையில் அமர்வது அவரது நோக்கமாக இருந்தது. விடாமுயற்சி, கடின உழைப்பின் மூலம் 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் (Employees Provident Fund Organization) வேலை கிடைத்தது. நிரந்தர அரசு வேலை கிடைத்த போதும், தன் முயற்சிகளை கைவிடாமல் சுய தொழிலிலும் ஆர்வம் காட்டி படிபடியாக வாழ்வில் முன்னுக்கு வந்தார்.

9.7.1980 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் வில்லுக்குறி அருகில் உள்ள மாடத்தட்டுவிளையைச் சேர்ந்த திரு.மரியமிக்கேல்தாஸ்-ஏசுவடியாள் தம்பதியினரின் செல்வமகளான டெல்பினை திருமணம் செய்தார். வெற்றி பெறும் ஒவ்வொரு ஆண்மகனுக்கும் பின் ஒரு பெண்மணி இருக்கிறார் என்ற வாக்கை நிரூபிக்கும் வகையில் திருமதி.டெல்பின் அவர்கள் விளங்கினார். இத்தம்பதியர்களின் மூன்று குழந்தைகளில் மகள்-ஷகிலா ஜாஸ்மின் அமெரிக்காவில் தகவல் தொழில்நுட்ப துறையில் மேலாளராகவும் பணிபுரிந்து வருகிறார். மகன்கள்: முனைவர். D.தேவ்ஆனந்த் அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களின் செயலாளராகவும், மருத்துவர். D.ஜானி கிறிஸ்டோபர் இயக்குனராகவும், திருமதி.டெல்பின் தேவராஜ் அவர்கள் கணவரின் காரியங்கள்யாவிலும் கைகொடுத்து ஊக்கமூட்டும் மனைவியாக இருந்து வருகிறார். திரு.ச.தேவராஜின் திருமண வாழ்க்கை உண்மையான திருப்புமுனையாக இருந்தது. ஸ்டார் ரியல் எஸ்டேட் தொழில் திரு.ச.தேவராஜ் அவர்களுக்கு மன நிறைவளிக்கும் தொழில்களில் ஒன்று.

**கல்வி பணி:** திரு.ச.தேவராஜ் அவர்களின் தந்தை திரு.சபரியானந்தம் ஆசான் கல்விப் பணியில் நற்புகழ் பெற்றிருந்தவர். எனவே கல்வித்துறையும் திரு.தேவராஜ் அவர்களின் மனங்கவர்ந்த துறையாக எப்போதும் இருந்து வந்தது. சென்னை மேற்கு சைதாப்பேட்டை வி.ஜி.பி சாலையில் ஒரு பள்ளி ஆரம்பித்தால் சிறப்பாக இருக்கும் என்ற எண்ணம் அழுத்தமாக ஏற்பட்டது. அன்னை வேளாங்கண்ணி மெட்ரிக் பள்ளி தொடங்கப்பட்டு திரு.ச.தேவராஜ் அவர்களின் நெடுநாள் கனவு நனவானது. கடும் உழைப்பின் பலனாக அன்னை வேளாங்கண்ணி மெட்ரிக் பள்ளிக்கூடத்திற்கான கட்டடம் எழும்பியது. இறைவனின் ஆசீர்வாதத்துடன், 6.9.1988 அன்று காலை மங்களகரமாக பள்ளி தொடங்கப்பட்டது.

கலைமாமணி.திரு.வி.ஜி.சந்தோஷம் குத்துவிளக்கேற்றி பள்ளியைத் தொடங்கி வைத்தார். அந்த சிறிய தொடக்கம் அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள் எதிர்காலத்தில் பரந்து விரியப்போகும் ஓர் ஆலமரத்துக்கு ஊன்றப்பட்ட வித்து என்று கூறலாம். சிறப்பான நோக்கத்துடனும், சீரிய லட்சியத்துடனும் நடைபோடும் ஒரு கல்வி நிறுவனம் விரைந்த வளர்ச்சியைப் பெறும் என்பதற்கு உதாரணமாக அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள் திகழ்ந்து வருகிறது.

**விருதுகள்:**

திரு.ச.தேவராஜ் அவர்களின் கல்வி சேவையைப் பாராட்டி, வி.ஜி.பி.உலகத் தமிழ்ச் சங்கம் இலக்கிய விருது வழங்கி சிறப்பித்துள்ளது. குறிஞ்சிக் கபிலர் தமிழ்ச்சங்கம் கல்வி அறிவாலயம் விருது வழங்கி சிறப்பித்துள்ளளது. புனிதர் மதர்ஸ் தெரசா அமைப்பு புனிதர் அன்னை தெரசா விருது வழங்கி சிறப்பித்துள்ளது. Indian Red Cross Society பாராட்டு விருது-2014 வழங்கிச் சிறப்பித்துள்ளளது. பாரதப்பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்தநாளையொட்டி வழங்கப்படும் ராஷ்ட்ரிய ரத்தன் விருது 22.08.2004 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் அன்றைய கோவா கவர்னர் திரு.ச.தேவராஜ் அவர்களுக்கு விருதினை வழங்கி சிறப்பித்தார்.தரமான கல்வி, நல்ல ஆளுமை, நல்லொழுக்கம், நற்பண்புகளை மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என்ற உயரிய கொள்கையுடன் நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது.

**சமுதாயப் பணி:**

கல்விப் பணியோடு சிறந்த சமுதாயப் பணியும் செய்து வருகிறார். நெடுங்குன்றம் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு வடிகால் அமைத்தல், நிலத்தடி நீரை மேம்படுத்த பனை விதைகளை விதைத்தல், மரக்கன்றுகள் நடுதல், ஏரியில் தூர் வாருதல், லயன்ஸ் கிளப் ரோட்டரி கிளப் போன்ற அமைப்போடு இணைந்து இரத்ததான முகாம், இலவசப் பொது மருத்துவ முகாம், கண் மருத்துவ முகாம், பல் மருத்துவ முகாம், போன்ற பல நிகழ்வுகளைப் பொது மக்களுக்கும் சமுதாயத்திற்கும் செய்து வருகிறார். இவரது உந்துதலின் காரணமாகவும் வழிகாட்டுதல் காரணமாகவும் கல்லூரி நாட்டுநலப்பணித் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சென்னைப்பல்கலைக்கழகம் கல்லூரி நாட்டுநலப்பணித்திட்ட பணியைப் பாராட்டி ரூபாய் ஐம்பதாயிரம் மற்றும் NYLP AWARD (NATIONAL YOUNG LEADERS PROGRAMME AWARD) வழங்கி சிறப்பித்தது. அன்னை தெரசா அறக்கட்டளை, குமரி நற்பணிமன்றம் போன்ற அமைப்புகளோடு இணைந்தும் சமுதாயப் பணி செய்து வருகிறார்.

**கல்வி சேவை:**

ஏழை, எளிய மாணவர்களுக்கு பல்வேறு திறன்களை ஊக்குவிக்கும் பள்ளிகள், கல்லூரிகளாக அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள் திகழ்ந்து வருகிறது. படிப்பில் அதிக மதிப்பெண் பெற்று உயர்கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரியில் பயில வாய்ப்பளிக்கப்படுகிறது. முக்கியமாக விளையாட்டுகள், மென்திறன்கள் மற்றும் செய்முறை பயிற்சி ஆகியவற்றில் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். கல்வியின் மீது நிறுவனர் கொண்டிருந்த ஆர்வத்தை அவர் ஆரம்பித்த கல்வி நிறுவனங்களே பறைசாற்றும். மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் வேலைவாய்ப்புகளை வழங்கும் படிப்புகளை வழங்குவதில் அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனம் அக்கறை செலுத்தி வருகிறது. இந்தக் கல்வி நிறுவனங்களில் படித்த மாணவ-மாணவியர்கள் வெளிநாடு, உள்நாடுகளில் உயர்ந்த பொறுப்பு மற்றும் அரசு பதவிகளில் உள்ளனர்.

அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களின் நிறுவனர் நல்ல தரமான கல்வியை வழங்கி பொது சேவைகளையும் ஆற்றி வருகிறார். நிறுவனர் அவர்களின் வழிகாட்டுதல், செயல்பாடுகளால் கல்வி நிறுவனங்கள் தரமான கல்வியை வழங்கி வருவதோடு சீரிய நற்பண்புகளையும் மாணவர்களிடையே வளர்த்து வருகிறது. அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களில் பயின் மாணவ-மாணவிகள் வெளிநாடு, வெளியூர்களில் பல்வேறு துறைகளில் உயர்ந்த பொறுப்பில் சிறந்து விளங்குகிறார்கள். முனைவர்.ச.தேவராஜ் அவர்களின் கல்விப் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள். சென்னையில் பிரபலமாக இயங்கக் கூடிய கல்வி நிறுவனங்களில் ஒன்று



**அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள்:**

Annai Veilankanni's Matric.Hr.Sec.School
Annai Veilankanni's Pharmacy College
Annai Veilankanni's College for Women
Annai Veilankanni's Teaher Training Institute
Annai Veilankanni's School of Nursing
Annai Veilankanni's College of Education
Annai Veilankanni's College of Nursing
Annai Veilankanni's College of Engineering
Annai Veilankanni's CBSE School,
Annai Veilankanni's Hospital.
Chennai West Saidapet, Nedungundram, Potheri.

**என்றும் கல்விப் பணியில் Dr.தே.தேவ்ஆனந்த்** MBA.,M.Com.,MHRM.,MSW.,M.L(Labour & Admn, Law), Ph.D.,
**செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.**
**www.annaiveilankannis.com E-mail:devanand222@gmail.com Help line:9282144444. 044-43523712.**






கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் - நீதி:28:25

காமராஜர் அவர்களின் 121வது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்!

உரிமையாளர்: பழக்கடை.ஏ.பால்ராஜ், செல்:9444453620.

# P.கிளிண்டன் டிரான்ஸ்போர்ட்

## TATA AC & ASHOK LEYLAND

வாடகைக்கு கிடைக்கும் தொடர்புக்கு:9444059405, 9445644551.

நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். (ஆதி 12:2)

போன்: 26374551, 9444453620, 9941964181.

# A.பால்ராஜ் பழக்கடை.

மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும். பெரியார் தெரு, ஆவடி,சென்னை-54, (அய்யா ஓட்டல் பின்புறம்.)
கிளைகள்:காமராஜ்நகர்(மெயின்ரோடு)9710932888, அண்ணாசிலை 9710717188, ராமரத்னா 9941496991.



# SVS நாடார் திருமண தகவல் நிலையம்

(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)

No.105, நல்ல தம்பி சாலை அண்ணாநகர், பம்மல், சென்னை-75.

எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு

**தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424 E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com**

# உலகம் சுற்றினோம் சந்திரிகா ராஜமோகன்.

## 5.எகிப்து சுற்றுலா

கேட்டா கோம்பஸ் கல்லறை பார்த்தோம். Porhpais பில்லர் பார்த்தோம். இது ரோஸ் நிற கருங்கல் கொண்டு ஒரே கல்லால் ஆனது. 26.8 மீட்டர் உயரம் உள்ளது. அஸ்வான் பகுதியில் இருந்து கொண்டு வந்துள்ளனர். மூன்று கப்பல்களை வரிசையாக நிறுத்தி இத்தொட்டியைக் குறுக்கே வைத்து நைல் நதியில் ஒரு மே மாதத்தில் இங்கே கொண்டு வந்து சேர்த்துள்ளனர். சிறந்த மன்னனாக விளங்கிய Timitreem மன்னனுக்கு கட்டப்பட்ட சமாதி (Tomb) இது. பொம்பயஸ் கல்லறை அல்ல இது என்று வழிகாட்டி கூறினார். பின்னர் அலெக்சாண்ட்ரியாவில் ரோமானியர் கால தியேட்டர் ஒன்றைக் கண்டோம். 250 AD-யைச் சேர்ந்ததாம். நாடகம் பார்க்க அருமையாக அமைக்கப்பட்ட அரங்கம் இது. மணல் பரப்பே இல்லாத அழகான கடற்கரை அலெக்சாண்ட்ரியா கடற்கரை. அலை வேகம் தடுக்க கற்கள் போடப்பட்டுள்ளது. மக்கள் அமர சிமெண்ட் பூசி அந்த இடம் செம்மையாக வைக்கப்பட்டுள்ளது.

கேட்டா கோம்பஸ் டூம்ப் (சுரங்க சுடுகாடு) கிணறு போல இருந்தது. நூற்றுக்கணக்கான படிகள் கீழே இறங்கிச் சென்றோம். உள்ளே 360 பேரை புதைக்கக் கூடிய மூன்று அடுக்கு கல்லறைப் பகுதி இருந்தது. சாதாரண மக்களுக்கும் அரச குடும்பத்தினருக்கும் என இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. கிணற்றில் நீர் இறைப்பது போல பிணங்களை குழிக்குள் இறக்கும் வசதி அங்கு உள்ளது. அங்கேயும் சில இடங்களில் எகிப்திய புராணங்கள், தெய்வங்களின் உருவங்களும், பாம்பு, நரிகளின் உருவங்களும் இருந்தன. கடவுள் உருவங்கள் ஓவியங்களாகவும், புடைப்போவியங்களாகவும் உள்ளன. தற்போது சென்னை கீழ்பாக்கம் கிறிஸ்துவ கல்லறையில் இது போன்று கிணற்று கல்லறை அமைக்க இருக்கிறார்கள்.

அலெக்சாண்டிரியாவில் எகிப்திய, கிரேக்க, ரோமானிய நாகரிகங்கள் கலந்து நிற்கின்றன. இங்கே ஒன்றாய் அமர்ந்து சாப்பிடம் பெரிய ஹால் இருந்ததாம். இந்த ஹால் 4 ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

பின்னர் மாலை 6மணிக்கு மேல் புறப்பட்டு ஹோட்டல் வந்து சேர்ந்தோம். எகிப்து சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு கெய்ரோ விமான நிலையத்தில் இருந்து துபாய்க்கு வந்து சேர்ந்தோம். துபாயில் கட்டுப்பாடுகள் அதிகம். துபாய் பாலைவனப் பகுதியாக இருந்தது. தண்ணீர் அங்கு கிடையாது. மழை பெய்யாது. கடல் நீரைக் குடிநீராக்கி நகரம் முழுமைக்கும் வழங்குகிறார்கள். அதே நீரை மரம் செடி, கொடி, புல் ஆகியவற்றை வளர்ப்பதற்கும் பயன்படுத்துகிறார்கள். சொட்டு நீர்ப் பாசன முறை கடைபிடிக்கப்படுகிறது. வீதிகளின் இருபுறமும் ஒரே இன மரங்கள் சீராக வெட்டிவிடப்பட்டு அழகுறக் காட்சி தருகின்றன. பேரீச்சம் மரங்கள் வெட்டி விடப்படுவதில்லை. சாலையின் மத்தில் இவை வளர்க்கப்படுகின்றன.




காரில் கடலுக்கடியில் செல்லும் பாதை, கடல் மேல் செல்லும் சாலைகளில் பயணித்தோம். பிரம்மாண்டமான சூப்பர் மார்க்கெட் சென்று வந்தோம் துபாய்-ஐ சுற்றிப் பார்ப்பதில் தமிழக சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் அசன் அலி மைமூன் குடும்பத்தார் துப்பாயை சுற்றிப் பார்க்க உதவி செய்தார்கள். (5 நகைக் கடைக்க உரிமையாளர்) பெரும் உதவி செய்தார். மறுநாய் சென்னை வந்தடைந்தோம்.

- தொடரும்............



அரிசி மொத்த வியாபாரம்.

செல்:9840994451, 26380752 / 73.

சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்

286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.



செல்வராஜ் சூப்பர் மார்கெட்

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com



ஜெயம் ரியல் எஸ்டேட்& ஜெயம் ஸ்வீட் ஸ்டால்

வீடு மனை வாங்க விற்க அணுகவும்.

கே.கே.நகர் அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் பதிவு எண்:473

செயல் தலைவர்.

கே.கே.நகர். எஸ்.தேவதாஸ்

நெ.20/1, திரு.ராமசாமி ரோடு, கே.கே.நகர், சென்னை-78. செல்:9840369569. 9600005458

# காமராஜர் ஒரு சகாப்தம்

**வரலாற்றில் விருதுபட்டி**

கோயில் நிர்வாகம், படிப்பு, ஊர் சொத்து பராமரிப்பு குறித்துப் பொதுவாக மகமைக் கூட்டம் நடைபெறும். விருதுபட்டி பஞ்சாயத்து போர்டு உறுப்பினரும் முத்துராம்பட்டியின் கிராம முன்சீபும் (மணியக்காரர்) பக்திமானும் சொல்வன்மை மிக்கவருமான சுலோசன நாடார் நாட்டாண்மைக்காரராக இருந்தார். நாட்டாண்மை சுலோசன நாடார் நிர்வாகத்தில், அதிகாரத் தோரணை மிகுந்திருக்கும். அவருக்குப்பின் பொறுப்புக்கு வந்த அவர் மகன் கருப்பையா நாடார், உரக்கப் பேசாதவர்; சாந்தம் நிறைந்தவர்; ஆனால், நீதியைப் பாதுகாப்பதில் கண்டிப்பானவர். ஊரில் பல்வேறு மகமைகள் இருந்தாலும், ஊர் முழுவதற்குமான பொதுக்காரியங்கள் குறித்து ஊர்க் கூட்டத்தில்தான் முடிவு எடுப்பார்கள். அக்கூட்டத்திற்குத் 'தலைக்கட்டுக்கு ஒருவர் வர வேண்டும்' என்பது நடைமுறைக் கட்டாயம்.

விருதுநகரின் தெப்பக்குளத்திற்கு மேற்கே சென்றால் வரும் தெருவில்தான் (இன்றைய சுலோசன நாடார் தெரு), நாட்டாண்மைக்கார சுலோசன நாடார் வீடு. நாட்டாண்மை வகையறா சுலோசன நாடார் தங்கை பார்வதியை, மேகவர்ணம் வகையறா சின்னப்ப நாடார் மணந்தார். பிள்ளைப்பேறு இல்லாத காரணத்தால், மேகவர்ணம் வகையறாவைச் சேர்ந்த குமாரசாமியைத் தம்பதியர் தத்து எடுத்துக் கொண்டார்.

தத்து மகன் குமாரசாமிக்குப் பார்வதியம்மாள், தம் அண்ணன் மகள் சிவகாமியைத் திருமணம் செய்து வைத்தார். இவர்களுக்கு 1903ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் நாளன்று ஆண்மகவு பிறந்தது. பார்வதியம்மாள் தம் பேரனுக்கு, தங்கள் வழிபடு தெய்வமான அம்மன் நினைவாகக் 'காமாட்சி' எனப் பெயர் சூட்டினார். எல்லாரும் குழந்தையைக் 'காமாட்சி' என்றே கூப்பிட்டார்கள். தாயார் சிவகாமி மட்டும் 'ராஜா' என்றே அழைத்தார். ஆகவே, தந்தை குமாரசாமி தம் மகனுக்குக் குலதெய்வத்தின் பெயரையும் இணைத்துக் 'காமாட்சி ராஜா' எனப் பெயர் சூட்டினார். காலப் போக்கில் காமாட்சி ராஜா, 'காமராஜ்' என அழைக்கப்பட்டான். நான்கு ஆண்டுகளுக்குப் பின் தங்கை நாகம்மாள் பிறந்தாள்.

ஐந்து வயது முடிந்ததும் அந்தக் கால முறைப்படி, சரஸ்வதி பூஜைக்கு மறுநாள் விஜயதசமி அன்று, வேட்டி கட்டி, கோட்டு போட்டு, உறவும் சுற்றமும் சூழக் குடும்பத்தவர் திரண்டு சென்று, காமராஜை வேலாயுதம் வாத்தியார் நடத்தி வந்த (நொண்டி வாத்தியார்) திண்ணைப் பள்ளியில் சேர்த்தனர். அங்கு அரிச்சுவடியும் ஏட்டுக் கணக்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டு, கல்விக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது. பின்னர் காசிக்கடைத் தெருவின் முருகையா நடத்தி வந்த 'ஏனாதி நாயனார் வித்தியா சாலா'வில் சேர்த்தனர். அங்குக் காமராஜ் தமிழ் மொழியை எழுதவும் படிக்கவும் கற்றான். அடுத்த ஆண்டு விருதுபட்டியில் இருந்த ஒரே உயர்நிலைப் பள்ளியான 'க்ஷத்திரிய வித்தியா சாலா'வில் சேர்த்தனர்.

'பிடி அரிசி பள்ளி' என்ற பெயரையுடையதும் 1885ஆம் ஆண்டு 'மகமை' மூலம் தொடங்கப்பட்டதுமான இப்பள்ளி முற்றிலும் வித்தியாசமானது எனலாம். தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே இப்பள்ளி ஜாதி மத வேறுபாடு இல்லாமல், அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வியை இன்றளவும் வழங்கி வருகிறது. 'சமுதாய மக்கள் ஒன்றுசேர்ந்து செயல்பட்டால் சாதனை படைக்கலாம்' என்பதற்கு இப்பள்ளி சிறந்த எடுத்துக்காட்டு. இந்தப் பள்ளியில் படித்த காமராஜ் தான், தமிழ்நாட்டின் முதலமைச்சரானபோது, தமிழ்நாட்டில் பள்ளி இறுதி வகுப்புவரை இலவசக் கல்வி தரச் சட்டம் வகுத்துச் செயல்படுத்தியதை நினைவில் கொள்ள வேண்டும்.

க்ஷத்திரிய வித்தியா சாலாவில் பிள்ளையார் சதுர்த்தி விசேஷ பூஜையாகக் கொண்டாடப்படும். மாணவர்கள் அந்தப் பூஜைக்கு ஒன்றரை அணா (இன்றைய 9 பைசா) கொடுக்க வேண்டும். பூஜை முடிந்ததும் மாணவர்களுக்குப் பிரசாதமாகப் பொரிகடலை, தேங்காய், பழம், பேரிக்காய் முதலானவை கொடுக்கப்படும். காமராஜ் இந்தப் பள்ளியில் சேர்ந்த பிறகு நடைபெற்ற பூஜைக்குத் தன் பங்குக் காசைக் கொடுத்தான். (தொடரும்)




காமராஜர் 121வது
பிறந்த நாள் வாழ்த்து

**Prop.S.Vijayan,**
**Cell: 98403 53031.**
**(0)044/ 26623031.**



# SRI LAKSHMI ENTERPRISES

Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.

# கிட்னி -- துப்புரவு தொழிற்சாலை

*இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் சிறுநீரகங்களின் பணி, வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் சிறுநீரக நோய்கள் பற்றி பிரமிப்பான கட்டுரை*

**-டாக்டர் பி.சௌந்தரராஜன்.**

## 23.சோதனையான பரிசோதனை

"நாள்பட்ட இருமல் இருந்தால் அருகிலுள்ள மருத்துவமனையை அணுகவும். அது காசநோயாக இருக்கலாம்" என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்திருப்பீர்கள். "காசநோய் என்கிற டி.பி. நுரையீரலுடன் மட்டும் தொடர்புடையது" என்றுதான் நினைத்திருப்பீர்கள்.

உலகின் மிகப் பழமையான நோய்களில் ஒன்று டி.பி.எனப்படும் காசநோய். கி.மு.நான்காயிரத்தைச் சேர்ந்த ஒரு மனித எலும்புக்கூட்டை ஆராய்ந்ததில் அதற்கு டி.பி.இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. 1882-ல் தான் டி.பியை உருவாக்குகிற பாசில்லியை ராபர்ட் காக்ஸ் என்பவர் கண்டுபிடித்தார் (அதனால் டி.பி.க்கு காக்ஸ் என்றொரு பெயரும் உண்டு.) அதன்பிறகுதான் சரியான மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டது.

1947 ஆகஸ்ட் சுதந்திரம் வழங்க தீர்மானித்த மவுண்ட் பேட்டன் பிரபு இந்து முஸ்லீம் உறவை பிரிக்க முதலில் ஆகஸ்ட் 14ல் முகமது அலி ஜின்னாவை பகலில் அழைத்து முஸ்லீம்களுக்கு பாக்கிஸ்தான் என பிரித்து சுதந்திரம் வழங்கினார். ஆகஸ்ட் 15 அதிகாலையில் மகாத்மா காந்திஜியை அழைத்து மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கினார் அப்போது நேதாஜி செங்கோட்டையிலே நமது கொடி பறக்கட்டும் என உற்சாகமாக குரல் கொடுத்தார் அப்போது காந்திஜியை போற்றி புகழ்ந்து காமராஜ் ஒரு அறிக்கை விட்டார் அதன் பிறகு தான் காமராஜ் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஆனார். அதன் பிறகு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆனார் பெருந்தலைவர்.

தமிழகத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தமிழக முதல்வராக இருந்தபோது குல தொழில் திட்டத்தை கொண்டு வந்தார் இதற்கு கடும் எதிர்ப்பு வந்தது. இதனால் ராஜாஜி முதல்வர் பதவியில் இருந்து விலகினார் அதன்பிறகு பலர் கூடி பேசி காமராஜரை முதல்வர் ஆக தீர்மானித்தனர் இதை காமராஜ் ஏற்கவில்லை பிறகு நேருஜி வற்புறுத்தியதால் காமராஜ் முதல்வராக ஆக சம்மதித்தார். அதோடு ஒரு நிபந்தனையை வைத்தார் யாரும் மந்திரி பதவி கேட்கக்கூடாது. அரசாங்க நிர்வாகத்தில் யாரும் தலையிட கூடாது முக்கியமாக நீதிதுறை, காவல்துறையில் தலையிட கூடாது சம்மதமா? என கேட்டதும் அனைவரும் உடனே சம்மதம் என்று எம்.எல்.ஏக்கள் கூறியதும் அதன் பிறகு 3.4.1954ல் பெருந்தலைவர் காமராஜ் தமிழக முதல்வராக பதவி ஏற்று 10ஆண்டு பொற்கால ஆட்சி செய்தார்.

நாட்டிலுள்ள எல்லா குழந்தைகளும் கல்வி அறிவு பெற்று பட்டதாரி ஆக்கிட முயற்சி செய்தார் கிராமங்கள் தோறும் பள்ளிக் கூடங்களை திறந்து ஆடு மாடு மேய்க்கும் குழந்தைகளையும் படிக்க வைத்தார் இலவச பாடபுத்தகம் நோட்டு புத்தகம் மதிய உணவு திட்டத்தையும் கொண்டு வந்தார். ஏழை குழந்தை பணக்கார குழந்தை என இல்லாமல் சீருடை திட்டத்தையும் கொண்டு வந்தார். மாவட்டம் தோறும் கல்லூரிகளையும் திறந்தார் ஏழை குழந்தைகளும் பட்டப்படிப்பு படித்து பலர் டாக்டர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். எனக்கு வேண்டிய டாக்டர்கள் சொந்த ஊரில் இலவச மருத்துவ முகாம் நடத்தி இலவசமாக மருந்து மாத்திரைகளை வழங்கி வருகின்றனர் அவர்களை நான் பாராட்டினேன்.

படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க பல தொழிற்சாலைகளை அமைக்க வழி செய்தார். முதலாவது பெரம்பூரில் சுவிட்சர்லாந்து நாட்டு உதவியுடன் ரயில் பெட்டி தொழிற்சாலை 12கோடி செலவில் தொடங்கப்பட்டது. இதனால் 10ஆயிரம் பேருக்கு வேலை கிடைத்தது. இப்போது வெளிநாட்டுக்கும் இங்கிருந்து ரயில் பெட்டிகள் அனுப்பபடுகிறது.நீலகிரியில் 11கோடியில் ஃபிலிம் தொழிற்சாலையும் இந்த தொழிற்சாலைக்காக தொழிற் நுட்ப உதவிகளை பிரான்சு வழங்கியது. சென்னை கிண்டியில் இந்துஸ்தான் டெலிபிரிண்ட் தொழிற்சாலை அமைக்கப்பட்டது தென் ஆற்காடு மாவட்டம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி கிடைக்கும் என்று கண்டறியப்பட்டது இதனால் 1956ல் 160கோடி மதிப்பில் நிலக்கரி கார்ப்பரேசன் அமைக்கப்பட்டது.

சென்னை ஆவடியில் ராணுவ டேங்க் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. மேலும் அறுவை சிகிச்சை கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை ரஷ்யா உதவியுடன் அமைக்கப்பட்டது. திருச்சியை அடுத்து திருவேம்பூரில் 200 ஏக்கர் நிலத்தில் பாய்லர் தொழிற்சாலை பிரமாண்டமாக அமைக்கப்பட்டது. சென்னை கிண்டியில் நடிகர் சத்யராஜ் மாமனார்க்கு சொந்தமாக பல ஏக்கர் நிலத்தில் கீரை பயிரிட்டு ஒருவர் வாழ்ந்து வந்தார் இதை கேள்விபட்ட முதல்வர் காமராஜ் அந்தநிலத்திற்கு சொந்தக் காரரை சந்தித்து உங்கள் நிலத்தில் தொழிற்சாலை கட்டினால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமே என்று கூறியதும் அந்த நில பத்திரத்தை கொண்டு வந்து காமராஜ் வசம் கொடுத்தார் இதற்கு விலை எவ்வளவு என்று கேட்டதும் பத்திரத்தை தாருங்கள் என கேட்டதும் முதல்வர் திகைத்தார் ஐயா நீங்கள் தொழிற்சாலை கட்டினால் ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்றீர்கள் அதனால் பத்திரத்தை தந்தேன் எனக்கு பணம் வேண்டாம் உங்களால் பலருக்கு வேலை கிடைக்கட்டுமே என்று இலவசமாக பத்திரத்தைத் தந்தேன் என்றார் மதுரை, திருச்சி, விருதுநகர் உள்பட 9 நகரங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு பல்லாயிரம் பேர்களுக்கு

வேலை வாய்ப்பு கிடைத்தது. அம்பத்தூரில் 1200 ஏக்கரில் பெரிய தொழிற்பேட்டையும் சிறிய நடுத்தர தொழிற்சாலையும் இங்கு அமைக்கப்பட்டது. இதனால் படித்த படிக்காதவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்தது விழுப்புரம் பகுதியில் 12 சர்க்கரை ஆலை நிறுவ வாய்ப்பு வழங்கினார் இதனால் இங்கும் படித்த படிக்காதவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்தது.

விவசாயத்தை பெருக்க காமராஜ் சாகர் அணை, கிருஷ்ணகிரி அணை, மணிமுத்தாறு அணை, வைகை அணை, தொண்டிபாலம், நெய்யாறு அணை, அமராவதி அணை, மலம்புழா அணை, சாத்தனூர் அணை, பவானி சாகர் அணை, ஆழியாறு

(தொடர்ச்சி-29ம் பக்கம்)

அணை, திருமூர்த்தி அணை இப்படி பல அணைகளை கட்டி விவசாயத்தை பெருக்க வழி செய்தார் காமராஜர். காவேரி அணையை உயர்த்தி கட்டவிடாமல் 1964 வரை பெருந்தலைவர் தடுத்து வந்தார். இப்போது 60ஆண்டாக காவேரி தண்ணீரை திறக்க போராடுகிறார்கள். கர்நாடகா அணையை உயர்த்தி கட்டியதோடு புதிய அணையும் கட்டியது நாட்டு மக்கள் வருங்காலத்தைப் பற்றி கவலைப்படாத இரு கோஷ்டி கட்சிகளால் தமிழக மக்கள் இன்னும் பல தொல்லைகளை அனுபவித்து வருகின்றனர்.



சென்னை மாநகராட்சி 9.10.1961ல் மவுண்ட் ரோட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் காமராஜருக்கு முழு உருவ சிலை அமைத்து நேருஜி திருக்கரங்களால் திறக்க அண்ணா விரும்பினார் அதன்படி பிரதமர் நேருஜி சென்னை வந்து காமராஜ் சிலையை திறந்து வைத்து பேசியது உயிரோடு இருப்பவருக்கு சிலை வைக்க நான் விரும்பமாட்டேன் ஆனால் எல்லாம் துறந்த மாமனிதர் காமராஜர் சிலையை திறப்பதை பெருமையாக நினைக்கிறேன் என்றார் அப்போது நேருஜி பாதம் தொட்டு கூறிய கவியரசர் கண்ணதாசன் வணங்கினார். அந்த காட்சியை 100அடி தூரத்தில் நின்று நான் பார்த்தேன்.

1964ல் பெருந்தலைவர் காமராஜ் அவர்களை நேருஜி நீங்கள் டெல்லி வாருங்கள் எனக்கு உதவியாக இருக்கும் என்று அழைத்ததால் முதல்வர் பதவியை பக்தவச்சலம் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு டெல்லி சென்றார் காமராஜர். நேருஜிக்கு ஆதரவாக செயல்பட்டுவந்தார் 1964 மே 26ல் பணிகளை முடித்து நள்ளிரவில் நேருஜி தூங்க சென்றார், மறுநாள் மே 27 நேருஜி கண்விழிக்காமல் தூக்கத்திலே உயிர் பிரிந்தது. உலக நாட்டு மக்களும் கண்ணீர் சிந்தினர். அதன் பிறகு குடிசை வீட்டில் வாழ்ந்த லால் பகதூர் ஸ்சாஸ்த்திரியை இந்திய பிரதமராக அறிவித்தார் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் மறுவருடம் தாஸ்கண்ட் ஒப்பந்தத்தில் கை எழுத்து போட்ட பிறகு குடிக்க தண்ணீர் கேட்டார் தண்ணீர் அருந்திய சில நிமிடத்தில் லால்பகதூர் சாஸ்த்திரி காலமாகிவிட்டார் 58ஆண்டு ஆகியும் அவர் மரணத்திற்கு விடை கிடைக்கவில்லை. அதன் பிறகு பிரதமர் பதவிக்கு மொரார்ஜி தேசாய் இந்திராகாந்தியும் போட்டியிட்டனர் பெருந்தலைவர் காமராஜர் ஆதரவால் இந்திரா காந்தி பிரதமர் ஆனார். அடுத்து ஜனாதிபதி தேர்தல் வந்தது காமராஜ் நீலம் சஞ்சீவி ரெட்டியை ஆதரித்தார் இந்திராகாந்தி, வி.வி.கிரியை நிறுத்தி ஆதரித்தார் வி.வி.கிரி வெற்றி பெற்று ஜனாதிபதி ஆனார் இதனால் இந்திரா காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ் என இரு பிரிவாக செயல்பட்டனர் அதன் பிறகு மிசா சட்டத்தை கொண்டு வந்து தேசிய தலைவர்களை சிறையில் அடைத்தார் சுப்பிரமணியம் சுவாமி நாடாளுமன்றம் போய் கையெழுத்து போட்டுவிட்டு தலைமறைவாகி விடுவார் இவரை கைது செய்ய முடியவில்லை. 1976ல் சிறைச்சாலையில் உதயமானது ஜனதா கட்சி 1977 மார்ச் 19ல் ஜனதா கட்சி ஆட்சியை பிடித்தது. மார்ச் 21 மொரார்ஜி தேசாய் பிரதமர் ஆனார் சென்னை மத்திய சென்னையில் போட்டியிட்ட தலைவர் பேராசிரியர் பா.ராமச்சந்திரன் மத்திய அமைச்சர் ஆனார் இவர் சென்னை திரும்பியதும் என் ஆலோசனைபடி காமராஜர் நினைவு மண்டபம் தி.நகர் காமராஜர் இல்லம் பிறகு சத்தியமூர்த்தி பவன் போன பிறகு அடையார் வீட்டிற்கு போக சொல்லி கடிதம் எழுதினேன் அதன்படி தலைவர் செயல்பட்டு எனக்கு பாராட்டை தெரிவித்தார் 1977ல் மத்திய சென்னை உருவாகி பா.ராமச்சந்திரன் அவர்கள் வெற்றிக்கு பாடுபட்டவன் நான் இதை தலைவர் பா.ராமச்சந்திரன் பாராட்டியதை படம் பிடித்து அந்த படம் எங்கள் ஊரில் எமது வீட்டில் உள்ளது.

மிசா சட்டத்தை கொண்டு வந்து முக்கிய தலைவர்களை சிறையில் அடைத்ததால் பெருந்தலைவர் உடல்நிலை பாதித்தது அக்டோபர் 1ம் தேதி நடிகர் சிவாஜிகணேசன் வாழ்த்தி வந்தவர் மறுநாள் காந்திஜி பிறந்தநாளில் அவர் படத்திற்கு மாலை அணிவித்து கட்சி நிர்வாகிகள் மாணவர்களையும் அழைத்து பேசிய பின் நான் ஒய்வு எடுக்க வேண்டுமென்று கூறிவிட்டு படுக்க சென்றவர் வைரவா எனக்கு ஒரு மாதிரி இருக்கு டாக்டருக்கு போன் போடு வரசொல் என்றார் அதன்படி டாக்டர் சவுரிராஜனுக்கு போன் போட்டார் அவர் இல்லை என்றதும் ஜெயராமனுக்கு போன் போடு என்றார் அவர் வருவதாக கூறினார் அதற்குள் ஐயா வீட்டில் இருந்து போன் வந்ததும் சவுரிராஜன் அவசரமாக வந்தார் ஐயா உடலை பரிசோதித்துவிட்டு தரையில் உருண்டு கதரி அழுதுவிட்டு ஐயா நம்மை விட்டு போய்விட்டாரே என்ற செய்தி காட்டு தீயாக பரவியது முதல்வர் கருணாநிதி சில நிமிடத்தில் வந்துவிட்டார் பஸ்-ரயில்களில் கூட்டம் அதிகரிபால் சென்னை ஸ்தம்பித்துவிட்டது. பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் உள்பட பல தலைவர்களும் விமானம் மூலம் சென்னை வந்தனர் அவர் உடல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு லட்சகணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர் அன்று வானம் சிந்திய கண்ணீரை மறக்க முடியாது முதல்வர் கலைஞர் அவர்கள் கிண்டி காந்திமண்டபம் அருகில் காமராஜருக்கு மண்டபம் கட்ட தீர்மானித்து மழையில் நனைந்து வேஷ்டியை மடித்துகட்டி கலைஞர்கருணாநிதி அவர்கள் செயல்பட்டதை என்றும் மறக்க முடியாது. 1967 தேர்தலில் பொய்யான குற்றச்சாட்டை கூறினாலும் அதைப்பற்றி காமராஜர் கவலைபடவில்லை. அண்ணா, எம்.ஜி.ஆர். இருவரும் பெருந்தலைவர் மீது நம்பிக்கை ஆனவர்கள். பெருந்தலைவர் உடலுக்கு கொள்ளி வைத்தவர் தங்கை பேரன் கனகவேல் 1991க்கு பிறகு நெல்லை ராஜகோபால் மூலம் அறிமுகம் ஆனார் அதன் பிறகு இவர் பெயர் கனகவேல் காமராஜ் என நான் போஸ்டரில் அவர் பெயரை குறிப்பிடுவேன். என் மூத்தமகள் திருமணத்தையும் கூட இருந்து கவனித்தவர் கனகவேல் காமராஜ் பெருந்தலைவருக்கு விருதுநகரில் உள்ள பூர்வீக சிறிய வீடு மட்டுமே சொந்தம் இறுதியில் அவர் கையில் இருந்தது 124 ரூபாய் மட்டுமே, ஒருஜோடி பழைய செருப்பு, 4-வேஷ்டி, 4-சட்டை, 1-போனா, 2-தட்டு, 2-டம்ளர், 2-துண்டு, வீடு வாடகை வீடு மாதம் 50ரூபாய் இருந்து படிப்படியாக கூடி முதல்வர் ஆனதும் 250ரூபாய் கொடுத்து வந்தார். பெருந்தலைவர் மறைவுக்கு பிறகு விருதுபட்டியில் பிறந்த வீடும் சென்னை திருமலை பிள்ளைசாலை வாடகை வீட்டையும் 1978 ஜூலை 15ம் தேதி முதல்வர் எம்.ஜி.ஆர்.நினைவு இல்லமாக மாற்றினார் 1976ல் பாரத ரத்னா விருதும் வழங்கப்பட்டது. 1977 ஆகஸ்ட் 15ல் தமிழ்நாடு சட்டபேரவை காமராஜ் திருஉருவ படத்தை திறந்து வைத்தார் பெருந்தலைவர் சந்தித்த உலக நாட்டு தலைவர்களுடன் எடுத்த படங்கள் அவர் படித்த நூல்கள் அனைத்தும் தி.நகர் திருமலை பிள்ளை சாலையில் உள்ள வீட்டில் பொதுமக்கள் பார்வையிட காலை 9முதல் மாலை 6வரை அனைவரும் இலவசமாக பார்வையிடலாம் எனது வேண்டுகோள்படி காமராஜ் சிலைக்கு மாலை அணிவிக்க ஜெயலலிதா இரும்பு ஏணி படி அமைத்தார் நன்றி.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் வரலாற்றை ஐயா மறைந்து 25 வருடத்திற்கு பிறகு திரைப்படமாக தயாரித்து வெளியிட்டார் தோழர் அ.பாலகிருஷ்ணன் அவர்கள் இந்த படத்தில் காமராஜ் வேடத்தில் நடித்தவர் ரிச்சட்மதுரம் இவர் படித்தது பட்டிமன்ற புகழ் சாலமன் பாப்பையா அவர்களிடம் நானும் படித்தது நாசரேத் மர்காஷீஸ் பள்ளியில்தான் காமராஜ் படத்தை தயாரித்து வெளியிட்டது போல் மகாத்மா காந்தி திரைப்படத்தையும் தயாரித்து வெளியிட்டார். காமராஜ் படவீடியோ காமராஜ் 1000பட ஆல்பம் தயாரித்து வெளியிட்டார் அ.பாலகிருஷ்ணன் ஜூலை 15 காலை 7மணிமுதல் பகல் 1மணிவரை பெருந்தலைவர் நினைவாலயம் வரும் பலருக்கும் சர்க்கரை பொங்கல், டீயும் வழங்கி வருகிறார். மகாத்மா காந்திஜி செயலாளராகி செயல்பட்ட கல்யாணம் என்பவரை காரில் ஜூலை 15ம் தேதி காலை 9மணி அழைத்து வந்து 1மணிவரை காமராஜர் இல்லத்தில் இருப்பார் அவருக்கும் வரும் தலைவர்களுக்கும் நான் சால்வை அணிவிப்பேன். திருகல்யாணம் அவர்களுக்கு ஆகஸ்ட் 15ம் தேதி 100வது பிறந்த நாளாகும் கொரோனா அதிகரிப்பால் இந்த ஜூலை 15ல் ஐயா இல்லம் யார் வருவார்கள் என புரியவில்லை மதுரை பல்கலைக் கழகத்திற்கு காமராஜ் பல்கலை கழகம் என தமிழக அரசு பெயர் சூட்டப்பட்டது. வ.உ.சி.க்கு பிறகு தூத்துக்குடி, கொழும்புக்கு மத்திய மந்திரி ஜி.கே.வாசன் பயணிகள் கப்பலை துவக்கிவைத்தார் சத்திய மூர்த்தி பவனில் தீரர் சத்தியமூர்த்தி, காமராஜர், ஜி.கே.மூப்பனார் ஆகியோருக்கு முழுஉருவ சிலை வைக்க ஏற்பாடு செய்தார் சென்னை கப்பல் துறைமுகத்திலும் பெருந்தலைவர் சிலையை திறந்தார் இளைய தலைமுறை மாணவ செல்வங்களுக்கு தமிழகத்தில் பத்தாண்டு பெற்கால ஆட்சி செய்த தலைவர் காமராஜ் பற்றி அறிய மேல்நிலைப்பள்ளி, கல்லூரிகளில் பெருந்தலைவர் காமராஜ் முழுஉருவ சிலை வைக்க வேண்டி கேட்டு கொள்கிறேன்.

சீனாவில் உருவான கொரோனா உலக நாடு முழுவதும் பரவி பல கோடி பேர் மரணம் அடைந்துவிட்டனர் கொரோனாவில் அவதிபடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். நம் முதல்வர் தமிழக மக்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டுமென்று தீவிர நடவடிக்கை எடுத்துவருகிறார் செப்டம்பர் இறுதியில் எங்கள் ஊர் நாலுமாவடி குலதெய்வம் பாதகரையான் கோவில் கொடைவிழா நடைபெறும் அதற்கு தமிழகத்தில் கொரோனா இல்லாமல் மறைந்துவிடும் என நம்புகிறேன். என் சொல்லுக்கு எங்கள் ஊர்மக்களுக்கு நம்பிக்கை உண்டு என நம் இந்திய நாடார் முரசுக்கு சிறப்பு பேட்டி தந்தார் 6.6.2023ல். காமராஜர் தொண்டர் சூளைமேடு த.ராமச்சந்திரன்.

# அருமை அண்ணாச்சி



## கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைவர் வி.ஜி.பி.குழுமம்.

**அண்ணியார் வந்தார்....**

பிறந்தது முதல் துன்பங்களையே துணையாகக் கொண்டிருந்த அருமை அண்ணாச்சியின் வாழ்வில் முதன் முதலாக இன்ப ஒளி படரத் தொடங்கியது இங்கு தான். என்ன, நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்பது உனக்குப் புரிகிறதா? ஆமாம் நண்பனே, எங்கள் அருமை அண்ணியாரை அண்ணாச்சி முதன் முதலில்சந்தித்தது இங்கு தான். அண்ணாச்சி வேலை பார்த்த ரேஷன் கடை இருந்த அதே தெருவில் தான் அண்ணியார் வீடும் இருந்தது.

அண்ணியார் குடும்பமும் ஆச்சாரங்களில் ஊறிப் போன பிராமணர் குடும்பம்தான். அறிமுகமில்லாத ஆண்களைப் பெண்கள் பார்த்துப் பேசுவது கூடப் பாவம் என்று கருதக்கூடிய குடும்பம் அது. பொதுவாக நாட்டுநிலையே அன்று அப்படியிருந்ததால் அண்ணியாரின் வீட்டு நிலையும் அப்படியிருந்தது. ஆனால் அப்படிப்பட்ட கண்டிப்பான குடும்பச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த அருமை அண்ணி அவர்கள் கடையில் வேலை செய்யும் பையனைக் காதலித்திருக்கிறார்கள்! அதுவும் அவர்கள் சாதி ஆசாரப்படி ஒரு தாழ்ந்த சாதிப் பையனை உண்மையான காதலின் வலிமைக்கு வேறு உதாரணம் வேண்டுமா? இதில் வேடிக்கை என்னவென்றால் அண்ணாச்சியும் அண்ணியும் பார்வையால் பேசியிருக்கிறார்களே தவிர நேராக வாய்விட்டுப் பேசியதில்லையாம். அண்ணியார்வீட்டிலிருந்து தட்டெழுத்துப் பயிற்சிக்காகச் செல்லும்போது வழியில் அண்ணாச்சியைப் பார்ப்பார்களாம். கண்களின் சந்திப்பிலேயே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்களாம். அப்படிப்பட்ட புதுமையான முறையில்தான் அவர்கள் காதல் அரும்பியுள்ளது. பின்பு கடிதங்களின் மூலம் கருத்துப் பரிமாற்றம், அதன் பிறகு தான் சந்தித்துப் பேசத் துணிந்திருக்கிறார்கள்.



காதலர் இருவரும் கருத்து ஒருமித்து விட்டார்கள். கல்யாணம் செய்து கொள்வது என்ற முடிவுவரை சென்றுவிட்டார்கள். ஆனால் அண்ணியார் வீட்டில் அனுமதி பெற வேண்டுமே! அண்ணியாரின் அப்பாவோ மிகவும் கண்டிப்பானவர். அண்ணாச்சியை அண்ணி சந்தித்துப் பேசுகிறார் என்ற சந்தேகத்தாலேயே அவரை எச்சரித்தவர், இப்போது திருமணத்திற்குச் சம்மதிப்பாரா? ஆனால் எப்படியும் தாங்கள் திருமணம் செய்தே தீருவது என்பதில் அண்ணாச்சியும் அண்ணியும் உறுதியுடன் இருந்தார்கள்.

எதனைச் செய்தாலும் அருமை அம்மாவின் அனுமதியுடனேயே செய்யும் அண்ணாச்சி அவர்கள் அண்ணியைப் பற்றியும் இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளது பற்றியும் விரிவாகக் கடிதம் எழுதி அம்மாவின் அனுமதியைக் கேட்டிருந்தார். வேறு சாதி பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் வேதனைகள் ஏற்படக்கூடுமே என்ற எண்ணம் அருமை அம்மாவிற்கு இல்லாமல் இருந்திருக்காது. ஆனால் தன் மூத்த மகன் மீது இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையால், அவன் தவறு செய்யமாட்டான், அவன் எடுத்த முடிவு சரியாகத்தான் இருக்கும் என்ற உறுதியால் அண்ணாச்சியின் ஆசைக்குப் பச்சைக்கொடி காட்டிவிட்டார்.



முடிந்தால் பெற்றோர் சம்மதத்துடனேயே திருமணம் நடத்த முயற்சி செய், இல்லாவிட்டால் பெண்ணை இங்கு அழைத்து வா, முறைப்படி நாம் திருமணம் செய்வோம் என்று அருமை அம்மா அண்ணாச்சிக்கு கடிதம் எழுதினார்கள். அண்ணியார் வீட்டில் அனுமதியா? அது நிச்சயம் கிடைக்காது என்பது தெரிந்தவுடன் இருவரும் எங்கள் கிராமத்திற்குப் பயணம் செய்யத் திட்டமிட்டார்கள். அண்ணாச்சியின் மீதிருந்த அன்பாலும் நம்பிக்கையாலும் பெற்றோர்களுக்குத் தெரியாமல் இரவிலேயே வீட்டைவிட்டு வெளியேறினார் அண்ணியார் சென்னையிலிருந்து புகைவண்டியில் ஏறி இளங்காதலர் இருவரும் பாளையங்கோட்டைக்கு வந்து சேர்ந்தனர்.

அண்ணியாரை அழைத்துக் கொண்டு அண்ணாச்சி வருவது முன்பே எங்களுக்குத் தெரியும். அதனால் அவர்களை வரவேற்பதற்காக அருமை அம்மா, அத்தான், நான் மற்றும் ஊர்ப் பெரியவர் சிலரும் பாளையங்கோட்டை சென்றோம். அண்ணாச்சியையும் அண்ணியையும் அன்புடன் வரவேற்றோம். மகாலட்சுமியையே மணப்பெண்ணாக அண்ணாச்சி தேர்ந்தெடுத்திருப்பதாகப் பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள். அம்மாவிற்கும் எங்களுக்கும் அண்ணியை நன்கு பிடித்துவிட்டது.

அன்று பாளையங்கோட்டை பதிவாளர் அலுவலகத்தில் திருமணம் எளிமையாக நடந்தது. திருமணச் செலவு மொத்தமே 674/- ரூபாய்தான். அன்றைய விலைவாசி அப்படி. திருமணம் முறைப்படி முடிந்தது. அங்கிருந்து புதுமணமக்களைப் பள்ளிவாசல் என்ற ஊருக்கு அழைத்துச் சென்றோம். பின்பு வள்ளியூர் சென்று அங்கிருந்து வில்வண்டியின் மூலம் அழகப்பபுரம் சென்றோம்.

அண்ணாச்சி திருமணம் முடித்துவரும் செய்தி ஊரெங்கும் பரவியது. அண்ணியைப் பார்ப்பதற்கு, ஊரே கூடி விட்டது. உற்சாக மிகுதியால் என் போன்ற சிறுவர்களிடம் மதினி வந்துவிட்டாங்க. என்று நானே சொல்லிக் கொண்டு துள்ளிக்குதித் தேன். மகிழ்ச்சி வெள்ளத்தில் நாங்கள் அனைவரும் மிதந்தோம். ஆனால் அந்த மகிழ்ச்சியும் அதிக நாள் இருக்கவில்லையே! அது ஏன் என்பதை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். - தொடரும்............



சிகப்பு நாடா புலனாய்வு பத்திரிகையின் ஆசிரியர் தமிழ் புலவர் பி.ஆர்.ராமச்சந்திரன் அண்ணாச்சி அவர்களின் 9 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 3.7.2023 அன்று திங்கட்கிழமை காலை 10மணி அளவில் இருந்து மதியம் 1.1மணிவரைமலர் அஞ்சலி செலுத்தப்படுகிறது இடம் பிஆர் இல்லம் வேளச்சேரி.

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரபோகோ....

இந்த வைபவத்திற்கும் பொருத்தமான தினத்தை முன்னதாகவே குறிப்பிடுவர். கால் நாட்டுவதற்காக பனை அல்லது தேக்கு போன்ற நீண்ட நாள் வாழக்கூடிய மரத்தில் ஒரு நீண்ட கால் தயார் செய்வார்கள். இதற்குப் பொருத்தமானது மனைமரமே என்று கொள்ளப்படுகிறது. தேக்கு இரண்டாவது பட்சமாய்க் கொள்ளலாம். "பனை நட்ட பின் ஆயிரம் பட்ட பின் ஆயிரம்" வருடம் அழியாதிருக்கக் கூடியது.

சங்க காலத்தில் பாரி மகளிரான அங்கவை சங்கவை திருமணத்தில் கன்னிக்காலாக பனந்துண்டத்தை நாட்டியிருந்ததும், திருமணத்திற்கு வந்திருந்த மூவேந்தரும் ஔவையாரிடம் தமக்கு பனம் பழம் வேண்டுமென்று கேட்டபோது ஔவையார் -

"திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றார்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றியடிக்கண் கருத்து நுனி சிவந்து
'பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே"

எனப்பாடி மூவேந்தருக்கும் பனம்பழங்கள் வரவழைத்துக் கொடுத்த சங்ககாலச் செய்தி இங்கு ஞாபகப்படுத்துவதற்குரியது.

கால் நாட்டுவதற்கு குறித்த நேரத்தில் திருமணத்திற்கென பந்தலிட வேண்டிய பிரதான முற்றத்தின் கன்னி மூலையில், (தென் மேற்கு மூலையில்) கன்னிக்கால் மேளதாள வாத்தியத்துடன் நாட்டுகிறார்கள் கன்னி மூலையில், இக்காலை நாற்காலாகக் கொண்டு மணப்பந்தலை அமைக்கிறார்கள். இதே வேளையில் மணமேடை இடுதல் திருமணத்திற்கான நெல் அல்லது அரிசி அளத்தல். அடுப்புப் போடுதல் ஆகிய காரியங்களையும் தொடக்கம் செய்து வைப்பர். சாதாரணமாக நாடார் கன்னிப் பெண்கள் பருவமடைந்த பின் வீட்டுக்கு வெளியேப் போவதில்லை. எளிய குடும்பமாயின் கன்னிக்கால் நாட்டிய பின் மணப்பெண் வீட்டை விட்டு வெளியேக் கிளம்பமாட்டாள் சதா சூழ்ந்து திரிவார்கள். பொன்னுருக்கியபின், வரன் வீட்டிலிருந்து மணமகள் வீட்டிற்கும் வது வீட்டிலிருந்து வரன் வீட்டிற்கும் மஞ்சள், குங்குமம், புஷ்பம், இனிய பட்சணங்கள் முதலிய தாராளமாக பரிமாறிக் கொள்வார்கள்

**மணமகள்:-**

திருமணத்திற்கு முந்திய தினம் மணமகனுக்கு மிகவும் முகக்கியமான தினமாகும். பிரம்மச்சரியத்தில் ஈடுபட்ட மணமகனுக்கு அக்காலங்கலில் திருமணநாள் வரை சவரம் செய்து கொள்வதில்லை. இன்றுதான் முதன் முறையாக சவரம் செய்வது அனுமதிக்கப்படுகிறது. இக்காலங்களில் மயிர்களையா சம்பிரதாயம் இல்லாமல் இருந்த போதிலும் இந்த "முகச்சவரம்" எனும் சடங்கு பிரத்தியேகமாக நடந்தேறி வருகிறது. இதற்காக "குடிமகன்" எனும் நாடார் குலத்திற்குரிய சவரகன் இந்த பணியை (சடங்கை) நிறைவேற்றிவைத்து மணமகனை அழகுபடுத்தி நீராடச் செய்கிறான். தொடர்ந்து நல்லாடை உடுத்தி, கொட்டுமேளம் கோஷிக்க கடுக்கன், மோதிரம் ஆகிய ஆபரணாதிகள் அணிந்து மாப்பிள்ளையை அழுகுக்கோலம் பூணச்செய்கிறான்

ஆம்! இதன் முன் அவன் சிறுபிள்ளை, இனி அவன் குடும்ப பொறுப்புள்ள தலைமகன் - மாப்பிள்ளை! பெருமைக்குரிய பிள்ளை - அழகுப் பிள்ளை - திருமகள் திருவருள் பொருந்திய பிள்ளை! ஆதலால் இக்கணம் முதல் இவருக்கு அரச மரியாதைக் கொடுக்கப்படுகிறது. இவன் அசட்டுத்தனமாக நடந்து கொள்ளாதபடி "மாப்பிள்ளைத்தோழன்" என்ற பெயரால் அறிவுள்ள நண்பன் ஒருவன் அவனுக்கு திருமணம் முடியும் வரை மதியூக மந்திரி போன்று தோழனாகப் பொறுப்பேற்கிறான். இதனைத் தொடர்ந்து திருமணத்திற்கான ஆடை அணிகள் திருமாங்கல்யம், பெண்ணிற்கான முகூர்த்தப்புடவை முதலிய மங்கலப் பொருட்கள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டு அவைகளை மேள தாளத்துடன் வீட்டில் உள்ள இஷ்ட தெய்வங்களுக்கும், திருக்கோயில் சன்னதியிலும் கொண்டு வைத்து பூஜை நிறைவேற்றி இறையாசியுடன் மணமகன் இல்லத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

**மணமகள்:-**

திருமணத்திற்கு முந்திய தினம் மணமகளுக்கும் முக்கியமான தினமாகும். கன்னிப் பெண்களுக்கும் சுமங்கலிகளுக்கும் மத்தியில் குரவை ஒலியுடன் மேளதாளம் கோஷிக்க அவள் மங்கள ஸ்நானம் செய்விக்கப்படுகிறாள். பெண் வீட்டார் அக்கம் பக்கங்களில் உள்ள கன்னிப் பெண்களுக்கும் சுமங்கலிப் பெண்களுக்கும் வீடுதோறும் ஏராளமாக மஞ்சள் பொடி, சந்தனம், புஷ்பம் முதலிய பொருட்களை வாரிவழங்குகிறார்கள். அவர்கள் மத்தியில் மணப்பெண்ணை அலங்கரித்து கொட்டுமேளம் கோஷிக்க அவளை மறுநாள் இல்லத்து ராணியாகக்குவதற்குப் போற்றி கொலுவீற்றிருக்கச் செய்கிறார்கள். அவள் பெண்கள் கூட்டத்திற்கு மத்தியில் நாணிக்கோணி அமர்ந்திருக்கிறாள்

**கன்னி ஊஞ்சல்:-**

நாடார் குலப்பெண்கள் பருவடைந்ததும் அவர்கள் வீட்டிற்கு வெளியே வருவதில்லை. பிற ஆடவர் கண்களில் படுவதும் இல்லை. தன் வயதொத்த கன்னியருடன் அவர்கள் வாழும் வாழ்க்கை கன்னிமாட வாழ்க்கையாகும் அது. இதுகாறும் கன்னிமாடத்தில் வாழ்ந்த கன்னி நல்லாளுக்கு மறு தினத்தில் திருமணநாள். அன்றுடன் அவள் கன்னித்தன்மை தவிர்த்து இல்லத் தரசியாகிறாள். எனவே கொலுவீற்றிருக்கும் அக்கன்னி நல்லாள் தன் கன்னி வாழ்வில் கடைசி முறையாக கன்னி ஊஞ்சல் எறி இதர கன்னியரால் ஆடிப்பாடி ஊஞ்சலாட்டப்படுகிறாள். ஆம், மறு நாளாகி விட்டால் இனி அவளுக்கு இப்பருவம் ஏது? எனவே இவ்வைபவம் பெண்களுக்குள்ளாக கூடிக் களித்தாடும் கன்னி ஊஞ்சலாகத் திகழும். இந்நாட்களில் இக்கன்னி ஊஞ்சல் வைபவம் மறைந்துவிட்டது

இக்கன்னி ஊஞ்சல் மற்று சில சமூகத்தாரிடையே திருமண வேளையில் மணப்பெண் திருமண மேடை ஏறுமுன் மணப்பந்தலில் வைத்து "கன்னி ஊஞ்சல்" என்ற வைபவமாக நடத்துவதும் உண்டு.

**மணமேடை அலங்காரம்:-**

(திருமணம் மணமகள் இல்லத்தில் நடப்பதாக எண்ணிக்கொள்வோம்).திருமண நாளில் முகூர்த்த வேளை நெருங்குவதற்குள் மணவறை எனும் மணமேடை அலங்கரித்து வைக்கப்படுகிறது. மணவறையில் நாற்புறங்களிலும், புஷ்பத்தினால் சோடனை செய்யப்படுகிறது. மணமேடையில் குத்துவிளக்கு, பூரண கும்பங்கள், நிறைநாழி, புஷ்பம், சந்தனம் மற்றும் மங்கலப் பொருட்களும் பூஜைக்கு வேண்டிய தேங்காய், பழம் ஆகிய பொருட்களும் முளைப்பாறியும், அதற்கான நவதானியங்களும் ஹோமத்திற்குரிய சமித்துக்களும் (நெய், விறகு முதலியன) வந்து சேருகின்றன. புரோகிதர் அல்லது குருக்கள் வந்தமர்ந்து திருமணச் சடங்கிற்கான ஆயத்தங்களைச் செய்கின்றனர். பிரமன்கால் அல்லது அரசாணிக் கால் எனும் அரசமரக்கிளை அங்கு பிரதானமாக வைக்கப்படுகிறது. கும்பமாகிய பயிரை வளர்ப்பதற்கு முன் விவசாயத்திற்கு முக்கிய அடையாளமாகிய முளைப்பாறியில் உரிய நவதானியங்களை நல்ல நேரத்தில் வித்திடப்படுகிறது.

- தொடரும்....................

# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தேரடி தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.
போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

இந்து நாடார் பகுதி

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | நாகர்கோவில் | 30 | M.Phil | படித்துநல்லவேலை | 5 | 9444019698 | கடகம்-ஆயில்யம் | P905 | 15பவுன் |
| 2. | சாத்தான்குளம் | 43 | M A | மறுமணம் | 5.2 | 9381955966 | மேஷம்-பரணி | P906 | மறுமணம் |
| 3. | நாலுமாவடி | 41 | MBA | மறுமணம் | 5.4 | 9381093724 | தனுசு-பூராடம் | P907 | மறுமணம் |
| 4 | தூத்துக்குடி | 26 | M.Com,B.Ed | படித்துவேலை | 5.3 | 9940315742 | சித்திரை-துலாம் | P908 | - |
| 5 | தூத்துக்குடி | 29 | BBA | படித்தநல்லகுணமுள்ள | 5.5 | 9940382058 | மகரம்-உத்திராடம் | P911 | நேரில் |
| 6 | தூத்துக்குடி | 30 | B.Com,MBA | படித்துவேலை/தொழில் | 5.2 | 9791278915 | மிதுனம்-புனர்பூசம் | P912 | 20பவுன் |
| 7 | ராமநாதபுரம் | 24 | MBA | படித்துசென்னையில்வேலை | 5.3 | 9841926536 | கும்பம்-புரட்டாதி | P913 | 50பவுன் |
| 8 | தூத்துக்குடி | 23 | 12th | வேலை/தொழில் | 5.3 | 9566172939 | ரிஷபம்-ரோகிணி | P914 | 10பவுன் |
| 9 | நாகர்கோவில் | 30 | B.Sc | நன்குபடித்துவேலை | 5 | 9444019698 | கடகம்-ஆயில்யம் | P915 | 15பவுன் |
| 10 | தூத்துக்குடி | 26 | Pharm.D | படித்துவேலை | 5.4 | 9710575430 | மிதுனம்-திருவாதிரை | P916 | நேரில் |
| 11 | நாகர்கோவில் | 33 | 10th | படித்தநல்லகுணமுள்ள | 5.3 | 9444392925 | கன்னி-சித்திரை | P917 | 50பவுன் |
| 12 | தேனி | 26 | B.Com-CS | படித்துவேலை | 5.3 | 9444172722 | மேஷம்-அஸ்வினி | P918 | 40பவுன் |
| 13 | தூத்துக்குடி | 25 | M.Sc | படித்துவேலை | 5.4 | 8148843267 | மிதுனம்-மிருகசீரிடம் | P919 | 50பவுன் |
| 14 | தூத்துக்குடி | 30 | B.E | நன்குபடித்தஅரசுவேலை | 5.4 | 9944874005 | மரகம்-உத்ராடம்2 | P920 | நேரில் |
| 15 | திசையன்விளை | 35 | M.Sc | படித்துவேலைசொந்தவீடு | 5.4 | 9445970658 | கன்னி-உத்திரம்3 | P921 | நேரில் |
| 16 | தூத்துக்குடி | 36 | B.E | படித்துவேலை | 5.5 | 9003116312 | ரிஷபம்-ரோகிணி | P923 | 100பவுன் |

## C.S.I.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 30 | M.Sc,B.Ed,M.Ed | படித்துவேலை | 5.2 | சென்னை | 9750143051 | 445G | நேரில் |
| 2 | சிவகாசி | 24 | M.Sc | படித்துவேலை | 5.3 | சென்னை | 7092429525 | 446G | நேரில் |
| 3 | உடன்குடி | 23 | M.Sc | படித்தநல்லமணமகன் | 5.6 | சென்னை | 9840701995 | 437G | நேரில் |
| 4 | சென்னை | 27 | 10th | வேலை/தொழில் | 5.2 | சென்னை | 9841969737 | 438B | நேரில் |

R.C.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | 31 | BE-EEE | நன்குபடித்துவேலை | 5.2 | சென்னை | 9884512430 | 353G | 50+2 |
| 2 | திருநெல்வேலி | 28 | BA | படித்தபொறுப்புள்ள | 5.6 | சென்னை | 9176936635 | 344G | நேரில் |
| 3 | தூத்துக்குடி | 26 | MBA | படித்துவேலை | 5.3 | சென்னை | 9841344209 | 345G | 50பவுன் |
| 4 | பாளையங்கோட்டை | 24 | B.Sc | படித்தவேலை | 160 | சென்னை | 9488731707 | 346G | நேரில் |


# இலவசம்! இலவசம்! இலவசம்!!



பெரும் தலைவர் கு.காமராஜர்
அவர்களின் 121வது பிறந்த
நாளை முன்னிட்டு 15.07.2023
அன்று ஒருநாள் மட்டும்
பதிவு கட்டணம் இலவசம்.

~~பதிவு கட்டணம் 2000/- மட்டுமே~~

## இமயம் நாடார் திருமண தகவல் நிலையம்

No.1, ஸ்டேசன் ரோடு, சானிடோரியம், சென்னை - 47

**7299556591, 7299556592**



# நாடார் நவீன சுயம் வரம்

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மடத்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-2.11.1998, நிறம்-சிவப்பு, உயரம்-5.3, ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு- B.Com.,MBA., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள அல்லது பெரிய அளவில் தொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444416716, 9445073249, File No:-P-989-G

| | | | |
|---|---|---|---|
| சனி சந் | | | |
| வியா கேது | இராசி | | |
| | | | செவ் ராகு |
| லக் | புத | சூரி சுக் | |

| | | | |
|---|---|---|---|
| (வ) சனி | ராகு | (வ) வியா | |
| சூரி சுக் | அம்சம் | | |
| | | | |
| சந் | லக் | கேது | செவ் புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:சோழபுரம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-9.2.1998, ராசி-கடகம், நட்சத்திரம்-பூசம், நிறம்-சிவப்பு, உயரம்-5.5, படிப்பு-B.Tech., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9941417700. 9443871848, 9941417766. File No:P-845-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| வியா செகே | இராசி | | சந் |
| சூரி புத | | | லக் ராகு |
| சுக் | | | |

| | | | |
|---|---|---|---|
| செவ் | | லக் | |
| கே | அம்சம் | | |
| | | | சந் ரா |
| வியா கேது | சனி | | சூரி புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:கும்பகோணம், இருப்பிடம்-சென்னை, வயது-27, பிறந்ததேதி-21.6.1995, நிறம்-மாநிறம், ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, உயரம்-5அடி, படிப்பு-M.Sc., B.Ed., Teacher., Private., மாதவருமானம்-15,000 பெறும் இந்த மணமகளுக்கு, நல்ல குணம் மற்றும் நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:7871320320, 8190888383, 7871320320, File No:M-144-G.

| | | | |
|---|---|---|---|
| சந் | கேது | புத சுக் | சூரி |
| சனி | இராசி | | |
| | | | செவ் |
| | லக் வியா | ராகு | |

| | | | |
|---|---|---|---|
| | சனி | புத | சுக் கேது |
| லக் | அம்சம் | | |
| சந் | | | |
| ராகு | சூரி வியா | | செவ் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-உடன்குடி, பிறந்ததேதி-2.2.1992, ராசி-கடகம், நட்சத்திரம்-பூசம், நிறம்-சிவப்பு, உயரம்-153செ.மீ, படிப்பு-MCA., Accenture., Software Engineer, Bengaluru., மாதவருமாணம்-85,000 பெறும் இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9488725804, 9442925804, File No:M-146G

| | | | |
|---|---|---|---|
| | | | கேது |
| | இராசி | | |
| சூபுத சனி | | | வியா |
| சுசந் செராகு | லக் | | |

| | | | |
|---|---|---|---|
| சனி | | | சூரி |
| | அம்சம் | | புத ராகு |
| லக் கே | | | சுக் |
| சந் | செ | வியா | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:குலையன்கரிசல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, போரூர், பிறந்ததேதி-20.10.1997, வயது-25, நிறம்-மாநிறம், உயரம்-5.3, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-மிருகசீரிஷம், படிப்பு-B.E., (EEE)., இந்த மணமகளுக்கு, படித்த மணமகன் தேவை. தொடர்புக்கு:9841217989, 8220664430. File No:P-887-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | சந் | |
| கேது மா | இராசி | | |
| லக் வியா | | | ராகு |
| | செவ் சுக் | சூரி புத | |

| | | | |
|---|---|---|---|
| | கேது | | வியா |
| செவ் புத | அம்சம் | | |
| | | | சந் |
| சுக் மா | | சூசனி ராகு | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:கீழப்புதுக்குடி, அம்மன்புரம், திருச்செந்தூர் தாலுகா , இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-8.8.1992, ராசி-விருச்சகம் நட்சத்திரம்-கேட்டை, நிறம்-மாநிறம், உயரம்-5.6அடி, படிப்பு-B.Tech., I.T., Software Engineer., Chennai., மாதவருமானம்-70,000 பெறும் இந்த மணமகளுக்கு, B.E., படித்த வெளிநாட்டில் உள்ள மணமகன் தேவை. 9884004745, 9940164416. File No:M-145-G.

| | | | |
|---|---|---|---|
| மாந் | | செ | கேது லக் |
| | இராசி | | சூ புத |
| சனி | | | சுக் வியா |
| ராகு | சந் | | |

| | | | |
|---|---|---|---|
| | | செ ராகு | சுக் மா |
| | அம்சம் | | சனி |
| சந் சூரி | | | |
| | புகே லக் | வியா | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:பால்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-28.4.1997, நிறம்-சிவப்பு, உயரம்-5அடி, ராசி-தனுசு, நட்சத்திரம்-பூராடம், படிப்பு-B.Tech., (I.T.), Private Sector., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9840996091, File No:M-32-G.

| | | | |
|---|---|---|---|
| லக்பு கேசனி | சூரி சுக் | | |
| | இராசி | | |
| வியா | | | செவ் |
| சந் | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| புத | அம்சம் | | கேது |
| ராகு | | | சூசந் வியா |
| | லக் | செ சனி | சுக் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:ஆறுமுகநேரி, மேலவீடு, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-4.6.2000, நிறம்-சிவப்பு, உயரம்-5.2, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-M.Sc., இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல வசதியுள்ள வேலை (அ) தொழில் செய்யும் மணமகன் தேவை. 9841787884, 8144477884. File No:M-155-G.

| | | | |
|---|---|---|---|
| | சனி | சூசெ விசுக் | சந் புத |
| | இராசி | | ராகு |
| கேது | | | |
| | | | லக் |

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| சந் | அம்சம் | | சூரி ராகு |
| புவியா லக்கே | | | |
| | சனி | | செவ் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மணக்காடு, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-22.3.1998, வயது-25, ராசி-தனுசு, நட்சத்திரம்-பூராட்டம், நிறம்-மாநிறம், உயரம்-5.9, படிப்பு-B.Sc.,M.Sc., B.Ed., Teacher, மாதவருமானம்-20,000/- பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9176878473, 9176878497, File No:M-156-G.

| | | | |
|---|---|---|---|
| லக்சூ செசனி புத | | | |
| குருகே | இராசி | | |
| சுக் | | | ராகு |
| சந் | | | |

| | | | |
|---|---|---|---|
| குரு | | | |
| கே | அம்சம் | | சுக் |
| செவ் | | | சூரி சந் |
| புத சனி | கே | | சனி |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:ஏரல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.12.1994, வயது-28, ராசி-விருச்சகம் நட்சத்திரம்-அனுசம், நிறம்-மாநிறம், உயரம்-160செ.மீ, படிப்பு-B.SC., CS., IT., இந்த மணமகளுக்கு, ஏதாவது டிகிரி படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9790899979, 9941879470,. File No:M-955-G.

| | | | |
|---|---|---|---|
| லக் ராகு | | செ | சுக் |
| | இராசி | | |
| புத | | | சூரி |
| | சந் சனி | வியா | கேது |

| | | | |
|---|---|---|---|
| | கேது | | |
| சனி லக் | அம்சம் | | |
| புத | | | செவ் |
| சூரி | வியா சந் | சுக் ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்: படுக்கபத்து, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை மதுரவாயல்-95, உயரம்-5.5, நிறம்-சிகப்பு, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், பிறந்ததேதி-3.4.1997, படிப்பு-B.E., IT., கிராபிக் டிசைனர்., இந்த மணமகளுக்கு, B.E/ I.T கம்பெனி நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9841177356., 9360041734.

| | | | |
|---|---|---|---|
| சூசுக் கேசனி | புத | | |
| மாந் | இராசி | | |
| லக் சந்வி | | | செவ் |
| | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | மாந் | லக் புத | சந் |
| ராகு | அம்சம் | | வியா |
| | | | கேது |
| சூரி சுக் | | செ | சனி |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:ஏரல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-திருச்சி, உயரம்-, நிறம்-ன, ராசி-மேஷம், நட்சத்திரம்-பரணி, பிறந்ததேதி-1.12.1998, வயது-24, படிப்பு-MCA., Software Engineer., Company Name:Credo Healthcare Systems., இந்த மணமகளுக்கு, படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை.

| | | | |
|---|---|---|---|
| சனி (வ) | சந் | லக் | |
| கேது குரு | இராசி | | |
| | | | ராகு |
| | சூரி சுக் | புத | செவ் |

| | | | |
|---|---|---|---|
| | ராகு | குரு | புத |
| செவ் சனி(வ) | அம்சம் | | |
| சுக் | | | |
| | சூரி | கேது | லக் சந் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:பண்டாரபுரம், சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-1.2.1995, நிறம்-மாநிறம், உயரம்-5.5, ராசி-கும்பம், நட்சத்திரம்-அவிட்டம், படிப்பு-B.E., IBM Company., மாதவருமானம்-55,000 பெறும், இந்த மணமகளுக்கு, சென்னையில் நல்ல வேலையில் உள்ள (சொந்தஊர்: தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த) மணமகன் தேவை., 9444497083, 6369211606 File No:M-5-G.

| | | | |
|---|---|---|---|
| | கேது | | |
| சனி சந் | இராசி | | செவ் |
| லக்சூரி புத | | | |
| சுக் | வியா | ரா | |

| | | | |
|---|---|---|---|
| லக் செவ் | சுக் | | சூரி |
| புத ராகு | அம்சம் | | |
| | | | கேது |
| வியா சனி | | சந் | |

## C.S.I. கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:தூத்துக்குடி மாவட்டம், கொம்மடிக்கோட்டை, இருப்பிடம்-உள்ளகரம்,சென்னை, பிறந்ததேதி-11.8.1996, உயரம்-5அடி, நிறம்-மாநிறம், படிப்பு-B.SC., MBA., H.CL., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு, நல்ல குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9789867429, File No:RC-334-G.

## மறுமணம் R.C.கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:, இருப்பிடம்-சென்னை, சாலிகிராமம், சென்னை-93, பிறந்ததேதி-21.10.1994, நிறம்-, உயரம்-5.3,இ படிப்பு-B.Com., Builder, இந்த மணமகளுக்கு, படித்த நல்ல குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9840425192, 9600131536. File No:RC-352-G.




**பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு 121வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்.**

வே.சுபாகரன் உரிமையாளர்,போன்:24852128,24892154

# வேலன் ஸ்டோர்

உயர்ரக மளிகை பொருட்கள்

நெ.52, 10வது அவென்யூ,அசோக் நகர், சென்னை-83

அனைத்து பொருட்களுக்கும் 2% தள்ளுபடி விலை

டோர் டெலிவரி இலவசம்

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:வாகைவிளை, உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, எம்.ஜி.ஆர்.நகர், பிறந்ததேதி-02.9.1990, வயது-33, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், உயரம்-5.2, படிப்பு-MBA., இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9444179983.

| | | | |
|---|---|---|---|
| | | லக் செவ் | |
| | இராசி | | வி சு கேது |
| சந் ராகு | | | சூரி புத |
| சனி | | | |

| | | | |
|---|---|---|---|
| லக்செ சுக் | ராகு | புத | சந் |
| | அம்சம் | | |
| | | | சூரி |
| | | வியா கேது | சனி |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:அஜிதா. சொந்தஊர்-நாதன்கிணறு, திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-42, பிறந்ததேதி-24.6.1995, உயரம்-5.6அடி, நிறம்-மாநிறம், ராசி-மேஷம், நட்சத்திரம்-கார்த்திகை 1ஆம் பாதம், படிப்பு-B.Arch., M.Arch., வேலை-M.Arch., Management, Chennai, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து சென்னையில் பணிபுரியும், நல்ல வருமானம் பெறும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444452749, 9444317372.9790805050 File No:P-519-G.

| | | | |
|---|---|---|---|
| | சந் கே | புத சுக் | சூரி |
| சனி | இராசி | | |
| | | | செவ் |
| | குரு | ராகு | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | | புத சுக் |
| | | | |
| சூசந் ராகு | குரு | செவ் | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:திருநெல்வேலி, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-7.2.1996, வயது-26, நிறம்-மாநிறம், உயரம்-5அடி, ராசி-சிம்மம், நட்சத்திரம்-பூரம், படிப்பு-B.E., ectrical Communication., IT Company., மாதவருமானம்-40,000/- இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள நல்ல பழக்கம் உள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444425998, 9444125136, File No:P-764-G.

| | | | |
|---|---|---|---|
| சுக் கேது | மாந் | லக் | |
| சனி | இராசி | | |
| சூரி செவ் | | | சந் |
| புத வியா | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சனி |
| | அம்சம் | | |
| லக் | | | சூரிசு வியா |
| புத மாந் | சந் | | செவ் ராகு |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:ஆறுமுகநேரி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை,பிறந்ததேதி-1.5.1994, வயது-28, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-தனுசு, நட்சத்திரம்-பூராடம், படிப்பு-B.Com.,MBA., Process Lead ., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்றாக படித்து, நல்ல வேலையிலுள்ள மணமகன் நல்ல குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9962073583, 9176559876, File No:P-983-G.

| | | | |
|---|---|---|---|
| செவ் | சூரி புத | சுக் கேது | |
| சனி லக் | இராசி | | |
| | | | |
| சந் | ராகு | குரு | |

| | | | |
|---|---|---|---|
| | சுக் | | |
| குரு சனி | அம்சம் | | ராகு |
| கேது | | | சூரி |
| செவ் | சந் | லக் | புத |

## R.C. கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:ஆலந்தலை, திருச்செந்தூர் மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-11.11.1999, வயது-23, நிறம்-சிவப்பு, உயரம்-154செ.மீ, படிப்பு-M.Sc., Maths., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9962111618, File No:Rc-355-G

## C.S.I. கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:திக்கனம்கோடு, கன்னியாகுமரி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-1.5.1997, உயரம்-165செ.மீ, படிப்பு-B.E., (ECE)., Senior Quality Service Associate Amazon Chennai., இந்த மணமகளுக்கு, நல்ல குணமுள்ள நன்கு படித்த வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444289219, File No:CSI-448-G.

# இந்து நாடார் மணமகன் தேவை

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகரில் வசித்து வரும் பாரம்பரியமிக்க குடும்பத்தை சார்ந்த மணமகளுக்கு,தகுந்த நற்குணங்கள் கொண்ட அரசு துறையில் உயர் பதவி அல்லது சொந்தமாக தொழில், ( Industrialist, Manufacturer and Exporter,Businessman, Trading, Educationist ) அல்லது டாக்டர் மணமகன் தேவை.

**மணமகள் விபரம் :**

இராமநாதபுரம் - மதுரை - சென்னை நகரங்களில் தொழில் செய்யும் கௌரவமான குடும்பத்தை சேர்ந்த மணமகள்.

பிறந்த தேதி 16.8.1997

**வயது : 25, உயரம் : 170 Cm, நிறம் : சிவப்பு**

**படிப்பு : MBBS மேற்படிப்பு MD ( Final Year )**

**தொடர்பு கொள்ளவும்**

**87783 82122, 89034 13519.**

**File No:M-157-G.**







## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:உமரிக்காடு, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-25.10.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5அடி6அங்குலம், ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு-B.E., (Bio Medical., M.Sc., Counselling Psychology)., வெளிநாடு கம்பெனி, வருடம் வருமானம்-15,00,000பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9444126628, 9444648367, File No:P-764-G. e-mail:thiyagaraj.jeyaraman@gmail.com

| | | | |
|---|---|---|---|
| சந்சனி கே | | | |
| | இராசி | | |
| | | | செவ் |
| வியா | மாந் | சூபு லக் | சுக் ராகு |

| | | | |
|---|---|---|---|
| | செவ் ராகு | | |
| | அம்சம் | | |
| சுக் லக் | | | |
| சந் சூரி | | புகே மாந் | வியா சனி |

## அட்டை பட செய்தி என்.டி.ஆர்.பவுண்டேஷன் பொதுச்செயலாளர். எஸ்.பாலகிருஷ்ணன் இல்லத் திருமணம்...



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், வீரமாணிக்கம் கிராமம் திரு.நா.சண்முக சுந்தர நாடார்-திருமதி.ஜெயலட்சுமி அம்மாள் ஆகியோரின் மகன் வழிப்பேரனும், காயாமொழி கிராமம் திரு.பி.ராஜா ஆதித்தன்- திருமதி.காந்திமதி அம்மாள் ஆகியோரின் மகள் வழிப்பேரனும், சென்னை என்.டி.ஆர்.பவுண்டேசன் பொதுச்செயலாளர் திரு.எஸ்.பாலகிருஷ்ணன்-திருமதி பேபி அம்மாள் ஆகியோரின் புதல்வன் திருவளர்ச்செல்வன் எஸ்.பி.தினேஷ் B.E.,MBA., தூத்துக்குடி மாவட்டம், பால்குளம் கிராமம், திரு.எம்.ஜெகநாத நாடார்- திருமதி கட்டித்தங்கம் அம்மாள் ஆகியோரின் மகன் வழிப்பேத்தியும், செங்கல்பட்டு திரு.ஜே.பற்குணம் நாடார்-திருமதி.தனலட்சுமி அம்மாள் ஆகியோரின் புதல்வவி திருவளர்ச்செல்வி பி.அனிதா B.E., ஆகியோருக்கு 7.6.2023 அன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு செங்கல்பட்டு திருக்கழுங்குன்றம் சாலையில் நென்மேலி கிராமத்தில் அமைந்துள்ள அம்சம் மகால் திருமண மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. மணமக்களை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் வாழ்த்தி ஆசீர்வதித்தனர். திருமண நிகழ்ச்சிகளில் பெருந்தலைவர் மக்கள் கட்சித் தலைவர் என்.ஆர்.தனபாலன், நியூஸ்7சேனல் உரிமையாளர் வி.வி.வேல்முருகன், தமிழ்நாடு நாடார் சங்க தலைவர் முத்துரமேஷ், இந்திய நாடார்கள் பேரமைப்பு நிறுவனத்தலைவர் ராகம்சௌந்தரபாண்டியன், நெல்லை தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்க தலைவர் போரூர் திரு.வி.ஆனந்தராஜ் நாடார், செயலாளர் சந்திரசேகர பாண்டியன் நாடார், பொருளாளர் கே.ஏ.ரவிந்திரன், கமிட்டி மெம்பர்கள் ஆனந்த செல்வன் நாடார், ராபர்ட் நாடார், சங்கரவேல் நாடார் மற்றும் பலர் கலந்து கொண்டனர். திருநெல்வேலி தட்சிணமாற நாடார் சங்க சென்னை கிளை சேர்மன் செல்வராஜ் தலைமையில் நிர்வாகிகள், முடிச்சூர் வரதராஜபுரம் நாடார் சங்கம், கெருகம்பாக்கம் நாடார் சங்கம், குன்றத்தூர் பெரியார் நகர் நாடார் சங்கம் போன்றவற்றின் நிர்வாகிகள், என்.டி.ஆர்.பவுண்டேஷன் தலைவர் ஜெ.அர்னால்டு அரசு தலைமையில் 25க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள்,மேலும் என்டிஆர் பவுண்டேஷன் மகாராஷ்டிரா கிளையிலிருந்து திரு.புவனேஷ் அவர்கள், திரு.தெய்வக் குமார் அவர்கள், திரு.மும்பை செல்வராஜ் அவர்கள், தமிழ்நாடு கழிவு காகித வியாபாரிகள் சங்க தலைவர் பரத் பூஜாரா, பொருளாளர் பாலசுந்தரம் உள்ளிட்ட பதினைந்துக்கு மேற்பட்ட பெரு வணிகர்கள், தமிழ்நாடு வியாபாரிகள் சங்க பேரவை ஒருங்கிணைப்பாளர் எம்.அருண்குமார், தமிழ்நாடு வணிகர் மகாஜன சங்கம் நிறுவனத் தலைவர் ஆர்.சந்திரன்ஜெயபால், தினத்தந்தி முன்னாள் எடிட்டர் திரு.சுந்தரேசன், தினத்தந்தி பாண்டிச்சேரி மேனேஜர் சிவசுப்பிரமணியன், மாலை முரசு காசாளர் திரு.சுந்தரகுமார் ஆதித்தன், மகளிர் தொழில் முனைவோர் சங்க தலைவி திருமதி.கிருஷ்ணா ராதாகிருஷ்ணன், ரேவதி லேபல்ஸ் உரிமையாளர் ரேவதி, அகில இந்திய நாடார் பேரமைப்பு துணைத்தலைவர் திருமதி.பேச்சியம்மாள், ஆதம்பாக்கம் மதன் ஹோமியோ கிளினிக் டாக்டர் ஜெயக்குமார், செங்கல்பட்டு வியாபாரிகள் சங்கத் தலைவர் திரு.உத்தரகுமார் நாடார், ஆலந்தூர் நாடார் சங்கத் தலைவர் பி.கணேசன் நாடார், ஜெம் டிவி அதிபர் சீதாபதி மற்றும் தொழிலதிபர்கள், வணிகர்கள், சமூகப் பிரமுகர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்தனர்.


**ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்**

**மளிகை மொத்தம் , சில்லரை வியாபாரம்**

**Prop.S.ராமசாமி நாடார்,** Ph:22243263, Res:22671263, 9444150666.

**நங்கநல்லூர், பழவந்தாங்கல் வட்டார வியாபாரிகள் சங்க ஸ்தாபகர் மற்றும் நங்கநல்லூர், பழவந்தாங்கல் நாடார் சங்க தலைவர்.**

36, 4வது மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை-600 061.



# சிறுதானியம் பழகுவோம்!!

வழங்குபவர்: - திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398

ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. அதன்படி இந்த 2023ஆம் ஆண்டு "சிறுதானிய" ஆண்டாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளது ஐ.நா.பொதுச்சபை அதன் 75வது ஆண்டை சர்வதேச அளவில் மக்களுக்கு ஊட்ட சத்தை வழங்கும் விதத்தில் சிறுதானிய ஆண்டாக அறிவித்திருப்பது பாராட்டத்தக்கதே!

சிறுதானியம் என்றால் பலருக்குத் தெரிவதில்லை. ஆதி மனிதர் விலங்குகளின் மாமிசத்தையும், காய், கனி, கிழங்குகளையும் பச்சையாக உண்டு வாழ்ந்தனர் காலப்போக்கில் தானியங்களின் பயன்பாட்டைத் தெரிந்து கொண்டனர். அவை சோளம், கேழ்வரகு, கம்பு, தினை, சாமை, வரகு, குதிரைவாலி ஆகிய சிறுதானியங்களாகும். இவற்றை மாவாகவும், உணவாகவும் சமைத்து உண்டனர். இவை பெயரில் தான் சிறுதானியங்களே தவிர இவற்றின் பயன்களால் எப்போதும் இவை பெருந்தானியங்களே! இவற்றை நம் நாட்டில் மட்டுமல்லாது சீனா, மங்கோலியா, ரஷ்யா உள்ளிட்ட தெற்காசிய பிராந்தியங்களிலும் பயன்படுத்தி வந்துள்ளனர்.

வெப்பமண்டலப் பயிரான இவற்றைப் பயிரிட வளமான நிலமோ, வற்றாத நீரோ தேவையில்லை. சாதாரண புன்சை நிலமே போதுமானது. இரசாயன உரமோ, பூச்சிக் கொல்லியோ மின்சார உபயோகமோ அவசியமில்லை. இவற்றைப் பயிரிட தனிநிலம் தான் தேவை என்பதில்லை. இவை உழவர்களுக்கு ஊடுபயிராகவும், கலப்புப்பயிராகவும் வளர்ந்து உபரி வருமானம் தருபவை. இவற்றில் தானியம் தப்பினாலும் தட்டையாக விளைந்து கால்நடைகளுக்குத் தீவனமாகிறது. இவை மண் வளத்தைக் காக்கவும், மண் அரிப்பைத் தடுக்கவும் உதவும்.

சிறுதானியங்களில் அரிசியில் இருப்பதைப் போல கார்போஹைடிரேட் எனப்படும் மாவுச்சத்து மட்டுமே இல்லை மாறாக உடலுக்கு இன்றியமையாத புரதச்சத்து, செரிமானத்துக்கேற்ற நார்ச்சத்து, தாது உப்புக்கள், வைட்டமின்கள் போன்ற நுண்ணுட்டச்சத்துக்கள் நிறைந்த ஒரு காம்பேட் உணவாகும். இவற்றிலுள்ள மாவுச்சத்து இரத்ததில் கரையும் விகிதம் குறைவு எனவே இவை சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்றது. இவை சர்க்கரை நோயாளிகளின் நண்பன் எனப்படுகின்றன.



தினசரி ஒருவேளையாவது இவற்றை உணவில் சேர்ப்பது நல்லது. குறைந்த பட்சம் வாரம் இரு நாட்கள் எனத் தொடங்கலாம். முற்காலத்தைப்போல இவற்றால் களியோ, கூழோ, புட்டோ தான் செய்யவேண்டும் என்பதில்லை. தற்போது இட்லி, தோசை, இடியாப்பம், ஆப்பம், ஊத்தப்பம், கொழுக்கட்டை, பொங்கல், வடை, பிரியாணி என விதவிதமான உணவுகளைத் தயாரிக்கலாம். கிராமங்கள் மட்டுமின்றி நகரங்களிலும் கூட சிறுதானிய உணவகங்கள் செயல்படுகின்றன.

நெல் அரிசியை நோன்புக்கு மட்டுமே பயன்படுத்திய காலம் ஒன்று இருந்தது. நம்ப முடிகிறதா? நம் முன்னோர் நெல் அரிசி சோற்றையல்ல, சிறுதானியங்களையே உண்டனர். கம்பங்கூழ், கேழ்வரகுக் கூழுடன் உப்புக் கருவாடு பலவித துவையல்களைச் சேர்த்து ரசித்து, ருசித்து, உண்ட நம் முன்னோர் நோயின்றி நீண்ட நாள் வாழ்ந்தனர்.

தற்காலத்தில் நம் இளைய தலைமுறையினர் பீட்சா, பர்கர், ப்ரைடுரைஸ், நூடுல்ஸ், தந்தூரி சிக்கன் போன்ற Junk Food எனப்படும் உணவுகளை விரும்பி உண்கின்றனர். இவை ஆரோக்கியத்தையும், ஆயுளையும் குறைப்பவை என்பதை அவர்களுக்கு எடுத்துரைத்துச் சிறுதானிய உணவைப் பழக்குவோம். குழந்தைகள் விரும்பும் வகையில் விதவிதமான சிற்றுண்டிகளைத் தயாரித்து அளிப்போம். விரைவில் இவை நியாயவிலைக் கடைகளில் விநியோகிக்கப்படும். மாநகராட்சி ஆரம்பப் பள்ளிகளில் விநியாகிக்கப்படும். மாநகராட்சி ஆரம்பப் பள்ளிகளில் சிறுதானியம் மற்றும் பயன்பாடுகள் பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துகின்றனர். இராணுவ வீரர்களுக்கும் இவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஒன்றிய ஆயுதப்படை, தேசிய பேரிடர் படை வீரர்களுக்கு 30% சிறுதானிய உணவு வகைகள் வழங்கப்படும் என ஒன்றிய உள்துறை அமைச்சகம் தெரித்துள்ளது அமைச்சர், ஆளுநர் முதல் அனைவரும் சிறுதானியப் பயன்பாட்டை ஊக்குவிக்கின்றனர்.

எனவே நாம் சிறுதானிய உணவுகளை உணவில் சேர்க்கப் பழகுவோம். அதன் வழியாக நம் முன்னோர்களைப் போல் நோயின்றி நீண்ட நாள் வாழ்ந்து சிறந்த சமூதாயத்தை உருவாக்க முனைவோம்.




S.K.இராகவன் இராஜா ஏஜென்சி

asianpaints

Dealers in: Hardwares, Paints, Cements, Steel, Sanitarywares & All Building Materials

பிளாட் எண்:1, ஆண்டவர்நகர், பாரதிசாலை மெயின் ரோடு, இராமாபுரம், சென்னை-89

Ph:044-22491790, 22492340 ,Cell: 9841169098, 70100 00824

# உறவுகள்!

**தாஜ்மஹால் - ஒரு அன்பின் உறவே**

எல்லோருக்குள்ளும் உள்ளுணர்வு இருக்கிறது. உள்ளுணர்வுகளால் உன்னதம் படைப்போம். ஷாஜகானின் உள்மனது அவருள் மும்தாஜின் மீது காதலை வளர்த்தது. அந்த உன்னதக் காதல்தான் மும்தாஜ் மறைந்தபோது உலக அதிசயமாம் தாஜ்மகாலை உருவாக்கத் தூண்டியது! ஷேக்ஸ்பியரின் உள்ளக்கிடக்கையில் உதித்ததுதான் 'ரோமியோ ஜூலியட்' எனும் உன்னதக் காதல் காவிய இலக்கியம். மகாத்மா காந்தியின் உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடுதான் அவரை உலக உத்தமராக, மகானாக உலா வரச் செய்தது. உள்ளக் கிடக்கைக்கு உருவகம் கொடுத்து, அந்தக் கனவை நனவாக்க மனிதனுக்கு ஆண்டுகள் பல தேவைப்படும். அதனால் உள்ளக் கிடக்கைக்கான விதை விதைக்க ஏற்ற காலம், குழந்தை பருவத்தைத் தாண்டி ஒருவர் உலகில் வளரத் தொடங்கும் காலமாகும்.

இதைத்தான் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்று சொன்னார்கள். உலக சாதனையாளர்கள் தங்கள் சாதனைகளுக்கான விதைகளை விதைக்கத் தொடங்கிய காலத்தைத் திரும்பிப் பார்த்தால் அப்போது அவர்களின் வயது ஐந்தாகவோ, ஆறாகவோ இருந்தது தெரிய வரும். நமது ஊரை எடுத்துக் கொண்டால் உலக சதுரங்கச் சாம்பியன் விசுவநாதன் ஆனந்த் அவரது சதுரங்க விளையாட்டு வாழ்வைத் தொடங்கியது அவருக்கு நான்கு வயது இருந்தபோதுதான். அப்போது தாய்-தந்தையுடன் அவர் வாழ்ந்தது பிலிப்பைன்ஸ் நாட்டில் தந்தையின் பணி காரணமாக அங்கே வாழ்ந்தார்கள். அப்போது அங்குள்ள டி.வி.நிகழ்ச்சியின் மூலமாக சதுரங்கம் ஆடும் கலையை ஆனந்தின் அன்னையர் அவருக்குப் போதித்து வந்திருக்கிறார். அப்படித்தான் தனது நான்கு வயது முதற்கொண்டு அதனை ஆர்வமுடன் கற்கத் தொடங்கியிருக்கிறார் அவர்.

**சில பிரபலங்கள் உறவுகள்**

இப்படிச் சிறுவயதில் தமது பிற்காலச் சாதனைக்கான தொடக்கத்தை விதையாய் விதைத்து, பின்னாளில் பலனை அறுவடை செய்த சாதனையாளர்களே பெரும் சரித்திரம் படைத்த ஜாம்பவான்களாய்த் திகழ்கிறார்கள். இவர்களைப் பின்பற்றும் மக்கள் மனதில் பெரும் தாக்கத்தை இவர்களால் ஏற்படுத்த முடிந்திருக்கிறது என்பதே இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் வெற்றியாகும். சில புகழ்பெற்ற ஜாம்பவான்கள் வெற்றி பற்றி உதிர்த்த அனுபவங்களை இங்கே பார்க்கலாம்.

**1. ரத்தன் டாட்டா - டாட்டா சன்ஸ் குழுமம் தலைவர்:**

"வெற்றி பெற்றவர்களை நான் பாராட்டுகிறேன். ஆனால் அவர்களின் முன்னேற்றம் இரக்கமற்ற முறையில் ஏற்பட்டிருக்குமேயானால், அத்தகையவர்களை என்னால் பாராட்ட முடியுமே தவிர அவர்களை மதிக்க என்னால் இயலாது"

**2. திருபாய் அம்பானி:**

"உங்கள் கனவை நீங்கள் நனவாக்காவிட்டால், வேறு யாரும் தங்கள் கனவை நனவாக்க நீங்கள் உதவும் வகையில் உங்களைப் பணியமர்த்திக் கொள்வார்"

**3. நாராயண மூர்த்தி (இன்ஃபோசிஸ் நிறுவனத்தை இணைந்து நிறுவியவர்):**

"மரியாதை, அங்கீகாரம், பிரதிபலன் எல்லாமும் செயல்பாட்டிலிருந்து வருகின்றன."

**4. அசீம் பிரேம்ஜி (தலைவர், விப்ரோ):**

"எனக்கு அப்போது 21 வயது. அதற்கு முன் சில ஆண்டுகளைக் கலிஃபோர்னியாவில் உள்ள ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழக என்ஜினியரிங் கல்வியகத்தில் செலவழித்து விட்டேன். என்னிடம் எல்லோரும், பேசாமல் ஏதாவது ஒரு நல்ல வேலையில் அமர்ந்து விடு. சவால்கள் நிறைந்த எண்ணை நிறுவன தொழிலைத் தொடங்க வேண்டாம் என்றே அறிவுரை கூறினர். ஆனால் விளைவுகளைச் சந்திக்கும் முடிவை அப்போது நான் எடுத்தது நல்ல முடிவு என்று எண்ணி இப்போது மகிழ்ச்சியடைகிறேன். முக்கியமாக, தலைமைப் பொறுப்புணர்வு நம் மனதுக்கு உள்ளிருந்து வருவது ஆகும். நம்மை நாம் இழந்துபோனோம் என்று நாம் கருதும்போது ஒரு மெல்லிய குரல் நம் உள்ளத்துள் ஒலிக்கும். அது எங்கே நாம் செல்லவேண்டும் என நமக்குச் சொல்லும் அந்தக் குரலை நீங்கள் நம்பினால் உங்களை நீங்கள் நம்புகிறீர்கள் என்று பொருளாகும். (தொடரும்)




AB

Dr.M.Sundaralingam B.SC.,B.VSC.,

PH:24895266 CELL: 9444015277

ஆர்த்தி பிராய்லர்ஸ்

77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market) M.G.R.Nagar, Chennai-78.




செல்:9444484977, 9962454977, 044-25980239.

ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்



ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்

ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.

**ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும்.** நேரம்:காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை



S.ராஜையா நாடார்

சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்

168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு, (அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29

போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.

# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்

**ஒப்புதல் கிடைத்தது..**

அது தேசமாக இருந்தாலும் சரி.. அல்லது நேசமாக இருந்தாலும் சரி..

அவர்களின் அந்த கணக்கின் படிதான்.. நானும் இப்போது கேட்கிறேன்.. திரவுபதி.. என் பிள்ளைகள் ஐந்து பேருக்குமே சொந்தமாக வேண்டும்..



அதனால் எந்த பங்கமுமே வராது.. உங்களுக்கும் சரி.. உங்கள் மகளுக்கும் சரி..

ஐந்து வல்லவர்கள் அவளுக்கு சொந்தமானவர்கள் என்பது.. அவளுக்கும் அது ஒரு பலம் தானே..

இது பலம் சம்பந்தப்பட்ட விசயம் இல்லை மகாராணி.. மனம் சம்பந்தப்பட்ட விசயம்..

திரவுபதி இதை அருவருப்பாள்..

இருக்கலாம்.. ஆனாலும் மகாராஜா.. கசக்கிறது என்று அவள் இதை ஒதுக்கக்கூடாது.. காரணம் இது மருந்து..

உங்களுடைய கனவை மட்டுமல்ல.. என்னுடைய கனவையும் கூட.. இந்த கசப்பு ஒன்றினால் மட்டுமே நிறைவேற்றித் தர முடியும்..

இதனால் ஏற்படும் நன்மை உங்களுக்கும் எனக்கும் மட்டுமல்ல.. திரவுபதிக்குமே கிடைக்கும்..

அப்படி என்ன நன்மை அதில் இருக்கிறது..

இன்றைக்கு இல்லையென்றாலும் மகாராஜா.. என்றாவது ஒரு நாள்.. இதே அஸ்தினாபுரம் எங்கள் ஆட்சியின் கீழ் வரும்..

அப்படி வந்தால்.. எங்கள் கொள்கையின் படி பார்த்தால்.. யுதிஷ்டிரன் மட்டுமே அதற்கு மன்னனாக இருக்க மாட்டான்..

ஐந்து பேருமே அதற்கு மன்னர்கள்தான்.. அவர்கள் ஐந்து பேருக்குமே சம அதிகாரம்.. சம உரிமை.. சம அந்தஸ்து..

இப்படி எல்லாவற்றிலுமே.. சம பங்கு உள்ள மன்னர்களாகத்தான் அவர்கள் இருப்பார்கள்..

அவர்கள் ஐவருக்குமே திரவுபதிமட்டும்தான் பத்தினி என்றால்..

ஐந்து பேருக்குமே மகாராணி யார்.. திரவுபதி தானே.. திரவுபதி மட்டும்தானே..

மன்னர்களில் யார் இருந்தாலும் சரி.. இறந்தாலும் சரி.. மகாராணி திரவுபதிதான்.. ஆகவே மன்னர்களின் மாற்றம் வரும்.. மகாராணியில் மாற்றம் வராது..

அது திரவுபதிக்கு ஆதாயமான ஒரு விசயம்தானே..

எல்லாம் சரி மகாராணி.. ஒருவேளை அர்ச்சுனனை தவிர.. வேறு யாரையுமே மணக்க மாட்டேன் என்று திரவுபதி அடம் பிடித்தால்..



யுத்தம் வரும் மகாராஜா.. நாட்டில் அல்ல.. எங்கள் வீட்டில்.. ஏனென்றால் எங்கள் ஐந்து பிள்ளைகளுமே திரவுபதியை விரும்புகிறார்கள்..

ஒருவேளை அர்ச்சுனன் அதற்கு சம்மதிக்க மறுத்தால்..

மறுக்க மாட்டான்.. மறுத்தாலும் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்..

சரி.. இன்னொரு வழியில்.. வேறொரு முயற்சியை நாம் செய்து பார்க்கலாமா..

என்ன அது..

திரவுபதிக்கு சமமான இதே அந்தஸ்தோடு.. இன்னும் நான்கு பெண்களை நாம் தேர்வு செய்யலாமே.. மற்ற நான்கு பிள்ளைகளும் திருப்திப்படுகிற அளவுக்கு.. அவர்களுடைய திருமணத்தையும் நாம் செய்து முடிக்கலாமே..

அப்படி செய்தால்.. திரவுபதிக்கு வரக்கூடிய.. இந்த அவமானத்தை நாம் தவிர்க்கலாம்தானே..

இல்லை மகாராஜா.. அது எனது திட்டம் அல்ல.. இதுவரையில் என் பிள்ளைகளுக்கு நான் மட்டுமே வழி காட்டியாக இருந்தேன்..

இனி அந்த பொறுப்பை திரவுபதியிடம் ஒப்படைக்க நான் ஆசைப்படுகிறேன்..

ஐந்து மருமகள் ஒரு வீட்டுக்கு வரலாம்.. அவர்கள் சம அந்தஸ்தோடும் வரலாம்.. ஆனாலும் அவர்களால் பிரிவினை வருமே தவிர.. பிணைப்பு வராது..

பிணைப்பு என் பிள்ளைகளுக்குள் ஏற்படவில்லை என்றால்.. நீங்கள் இழந்த நாட்டின் இணைப்பும் வராது..

நிலைமையை புரிந்து கொண்டான் துருபதன்.. எனவே சொன்னான்.. உங்கள் கணக்கு எனக்கு புரிகிறது மகாராணி..

ஆனால் நிச்சயமாக உலகம் கேலி பேசும்..

அப்படி ஒருவேளை பேசினால் துரோணரின் எதிரே ஒருநாள் தலைகுனிந்து நின்றீர்களே.. கைதியாக..

அதை நினைத்துக் கொள்ளுங்கள்.. இந்த கேலியை உங்களால் தாங்கிக் கொள்ள முடியும்..

சரி என்பதுபோல் தலையை அசைத்தான் துருபதன்.. திருமணத்தை நீங்கள் சொன்ன மாதிரியே நடத்தி விடலாம் என்றும் கூறினான்.. (தொடரும்)


**விலைகுறைவு!** **R.Suresh** **Ph: 2226 6961, 22266962** **மனநிறைவு!**

# AMUTHA & CO



**Sony, L.G, TCL, SamSung, Onida, Sun sui, Akai, Philips, Panasonic, IFB, WhirlPool, Godrej, Kenstar, Kelvinator, Hitachi, Carrier, Voltas, Videocon, Electrolux, Tatasky, Big Tv, Aritel, Sun Direct, ULTRA, Sowbaghya, Amirtha, Akshaya, Lakshmi, Preethi, ButterFly, Usha, Khaitan, Crompton, Orient, Almonard, Havells**



**1, Venkatesan Street, Shanmugam Road, Tambaram West, Chennai-45.**

## விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம் திருமண தகவல் மையம்

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம்

பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).

**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர், செல்:9486555373, 8610212126.

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377.



19. "என் மனதில் உள்ளதைக் கேட்கிறேன்.... ஒளிக்காமல் பதில் சொல்வீர்களா?"

"கே...........கேளுங்கள்......"

ஏ.சி.அறையிலும் சாவித்திரிக்கு வியர்த்து அரும்பியது. என்னவோ விபரீதம் விளையப் போகிறது என்ற உள்ளுணர்வே அவளை அதிர்ச்சியுறச் செய்தது!

"உங்கள் கணவரை இனி திரும்பவந்தால் ஏற்றுக் கொள்வீர்களா?"

அவனைப்பற்றி கேட்டதும் அவளுக்குள் தீ பற்றிக் கொண்டது.

"அவனையா....? அந்த அயோக்கியனையா.....? அவன் மீது நான் வைத்த அன்பு அபரிதமான கரிசனம் எல்லாவற்றையும் காலில் போட்டுக் கசக்கினானே...அவனையா......?" சீற்றம் கண்களில் கனன்றது.

"அவரிடம் விவாகரத்து வாங்கத் தயாரா நீங்கள்?"

"ஏன் வாங்க வேண்டும்? வாங்கி என்ன லாபம்?"

"இருக்கிறது. அதனால் சொல்கிறேன்."

"என்ன இருக்கிறது......?"

"விவகாரத்து வாங்கினான்ல சுதந்திரமாய் ஆகிவிடலாமில்லையா?"

"ஆகிவிட்டால்.....?"

"சொல்லட்டுமா?"

"சொல்லக்கூடியதை மட்டும் சொல்லுங்கள் சார்....."

"நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். உங்களுக்கு சம்மதமா சாவித்திரி....."

"சார்.......?!

"நான் உங்களை நேசிக்கத் துவங்கிவிட்டேன். என் மனதில் பிறந்த முதல் காதல் இது. என்னை ஏற்றுக் கொள்வீர்களா?"

"சார்....." சலனமில்லாமல் அழைத்தாள்.

"சொல்லுங்கள்...." யாசிக்கும் பாவனை.

"நான் என் வேலையை ராஜினாமா செய்கிறேன். எனக்கு உங்கள் வேலையே வேண்டாம்!" கரம் குவித்தாள். அலட்சியம் அவள் பேச்சிலும் பார்வையிலுமிருந்தது. ஒரு புழுவைப் பார்ப்பதுபோல அவரைப் பார்த்தாள்.

"சாவித்திரி...! நான் பேசியது தவறா?"

"நீங்கள் பேசியதில் தவறில்லை சார்.....! நான் வேலைக்குவந்ததுதான் தவறு. ஆண்கள் எல்லோருமே பெண்கள் என்றால் போகப் பொருளாய்..... பலகீனம் நிறைந்த ஏமாளிகளாய்த்தான் நினைப்பார்கள் என்பதற்கு நீங்களும் விதிவிலக்கல்ல என்று நிரூபிக்கின்றீர்கள். சந்தோசம். எனக்கு உங்கள் வேலையே வேண்டாம்!"எழுந்தாள்.

"சாவித்திரி....ப்ளீஸ்....... நில்லுங்கள்!" தன் இருக்கையை விட்டு எழுந்தோடி வந்து அவள் முன்னே நின்றார் எம்.டி.

"ஏன் நிற்க வேண்டும்? என்னைப் போகவிடுங்கள்".

"என் வாழ்க்கையில் நான் எடுத்த தவறான முடிவும் , தகாத ஆசையும் இது ஒன்றுதான். அதற்காக நான் வெட்கப்படுகிறேன். வேதனைப்படுகிறேன். போதுமா?"

"பெரிய வார்த்தைகளெல்லாம் எதற்கு சார்? எனக்கு வேலை வேண்டாம்!"

"வேலை வேண்டாம் என்றால் அது சாதாரண விசயம். ஆனால் இந்த நிலையில்... வேலையில்லாவிட்டால் என்ன செய்வதென்ற இக்கட்டில் என் வார்த்தைகளே உங்களைத் தெருவில் நிற்கச் செய்தால் அந்த பாவம் என்னைச் சும்மா விடாது! ப்ளீஸ்... அவசரப்படாமல் நான் செல்வதைக் கேளுங்கள்!"

"..............."

"என் அலுவலகத்தில் சுமார் முப்பது பெண்கள் வேலை செய்கிறார்கள். யாரிடமும் நான் இப்படி மனம் பறிகொடுத்தோ, மனம்விட்டோ, மன்னிப்பு கேட்டோ அறியேன். உங்களுக்கு நன்மை செய்வதாய் நினைத்துத் தவறு செய்துவிட்டேன். எனக்காக ஒரு உதவி...

"என்ன.........?"

"இங்கேயே வேலை பாருங்கள். உங்களிடம் இனி நான் பேசவே மாட்டேன். போதுமா?"

"இல்லை சார்! நீங்கள் பேசாவிட்டாலும், பேசிவிட்ட வார்த்தை எனக்கு இங்கே இருக்க முடியாத ஒரு வேற்றுமை உணர்வை ஏற்படுத்தும். ப்ளீஸ்... நான் வருகிறேன்!"

"ஆல்ரைட்! ஒரு மாதம் மட்டும் இங்கே தொடர்ந்து வேலை செய்யுங்கள். இது மே மாதம். ஜூன் மாதம் பள்ளிகளில் ஆசிரியர் உத்தியோகம் காலியாகும். என் செல்வாக்கை பயன்படுத்தி நிச்சயம் உங்கள் கல்வித் தகுதிக்கேற்ப வேலை வாங்கித் தந்துவிடுகிறேன். நீங்கள் நிம்மதியாய் நல்ல உத்தியோகத்தில், யாரிடமும் கை கட்டி நிற்காமல் வேலை பார்க்கலாம். அது வரை இங்கேயே வேலை பார்ங்கள்."

"..........."

"என்னால் யாரும் துன்பப்படக்கூடாது., உங்களுக்கு ஒரு மாற்று வழி ஏற்பாடு செய்யவாவது எனக்கு அனுமதி கொடுங்கள். மறுத்தால் இதய நோயாளியான எனக்கு நீங்களே மருத்துவமனையில் ஒரு பெட் ரிசர்வ் பண்ணிவிட்டமாதிரியாகிவிடும்." குற்ற உணர்வும், உதவும் நோக்குமாய் குரல் கரகரக்கக் கூறினார்.

சாவித்திரிக்கு அவர் மீது ஒரு பக்கம் மரியாதை. ஒரு பக்கம் சந்தேகம். யோசித்தாள்.

இதைவிட .. இவரைவிட பாதுகாப்பாய் ஒரு முதலாளி கிடைப்பது கடினம். எனவே இவரிடம் ஒருமாதம்......அடுத்த வேலை கிடைக்கும்வரை வேலை பார்ப்பதே நல்லது என்ற எண்ணம் வந்தது.

"சரி வேலை பார்க்கிறேன்........."

"நன்றி.....ரொம்ப நன்றி!" திருப்தியுடன் அவளை அனுப்பிவைத்த நிறுவனர் தன் இருக்கையில் வந்தமர்ந்தார்.

மனம் சிந்தித்தது.

பளிச்சென ஒரு திட்டம் அவருக்குள் உருவானது.

"சார்.... தபால்!" தபால்காரர் வீசி எறிந்துவிட்டுப் போன அஞ்சல் உறையினை ஓடிப்போய் எடுத்து வந்தாள் சுஜாதா.

"அது என்ன கடிதம்?" அனிதா கேட்டாள்.

"உள்நாட்டுக் கடிதம் தான்." சிரித்தாள்.

"விட் அடிக்காதே. யார் எழுதியது என்று பார்...." அனிதா அருகில் வந்தாள்.

"அதைத்தான் பார்க்கிறேன். அனுப்பியவரின் முகவரியே இல்லை." சுஜாதா.

"சரி, நமக்குள் ஒரு பந்தயம்..." அனிதா.

"என்ன?"

"கடிதத்தைப் பிரிக்காமலேயே இது யாரின் கடிதம் என் று கண்டுபிடிக்கவேண்டும்."

அனிதா..

"ஓ........! கடிதத்தில் எழுதப்பட்ட முகவரியினைப் பார்த்துத் துருவினாள்.

"அண்ணியின் கடிதமோ......?"

"நீ சொல்லாதே. நான் கண்டுபிடிப்பேன்"

"என்னடீ பெண்களா கண்டுபிடிக்கப்போகிறீர்கள்?" அம்மா அங்கு வந்து சேர்ந்தாள்.

"கடிதம் வந்திருக்கிறதம்மா........."

"இதற்குத்தானா? பிரித்துப் படி"

"பிரிப்பதற்கு முன் எங்களுக்குள் ஒரு பந்தயம்?"

"என்ன டீ பந்தயம்?"

சொன்னார்கள்.

"அதெல்லாம் நீங்கள் ஏன் கண்டுபிடிக்கப் போகிறீர்கள்? நானே சொல்லிவிடுகிறேன். எங்கே..........கொண்டுவா பார்க்கலாம்..."

சுஜாதா முனகியபடியே அம்மாவிடம் கடிதத்தைத் தந்தாள்.

அம்மா வாங்கிப் பார்த்தாள். முகவரியிலுள்ள எழுத்துக்களின் சாய்ந்த கோடுகள் அது தன் மகன் ரகுவரனின் எழுத்துக்களே என பளிச்செனச் சொல்லியது.

சொன்னாள்.

பிரித்துப் பார்த்தார்கள்.

அவன்தான்...

ரகுவரன் தான் எழுதியிருந்தான்.

"என்னைப் பழிவாங்க வேண்டுமெனக் காத்திருந்து என் காதலை அழித்து, காதலியை விரட்டி, கல்யாணம் என்ற பெயரில் ஒரு நெஞ்சழுத்தக்காரியை.... ஒரு ஏமாந்தவளை.... எனக்குப் பிடிக்காதவளை என் தலையில் கட்டிய அப்பா, அம்மா என்ற இருபேருக்கும் ரகு எழுதிக் கொள்வது..."

அதற்குமேல வாசிக்காமல் அனிதா அம்மாவைப் பார்த்தாள். அம்மாவின் கண்களில் அதிர்ச்சியும், குழப்பமும் தெரிந்தன.

"கேட்டியா அம்மா உன் மகன் மனதில் இருக்கும் வஞ்சகங்களை.....?"

"நான் ஒவ்வொரு நேரமும் அவனைப்பற்றி என்னென்ன கணக்குப் போட்டேனோ...அந்தக் கணக்குகளில் இம்மியும் பிசகாமல்தான் இருந்திருக்கிறான்.!"

"............"

"அனிதா சொன்னானே...! அண்ணன் நடிக்கிறான். அண்ணியின் வேலையை விட்டால் சிக்கல் வரத்தான் வரும் என்று சொன்னாளே...!" சுஜாதா வருத்தம் தோயச் சொன்னாள்.

"சரி, கடிதத்தைப் படித்து முடி..." அம்மா அனிதாவைத் தூண்டினாள்.

"நீங்களெல்லாம் ஒரு மவுனக் கூடு கட்டி, அந்தக் கோட்டிற்குள் நின்று, என்னை எப்படி வெல்லலாம் என்பதில் தீரமும் தீவிரமும் காட்டினீர்கள். என்னை உயிருக்குயிராய்க் காதலித்த திவ்யாவைத் திறமையாக எனக்கு எதிராகத் திருப்பிவிட்டீர்கள். அப்பொழுது நான்பட்ட அவமானம்.... ஏமாற்றங்கள் எப்படிப்பட்டவை என்பது உங்களுக்குத் தெரியாது.

நான் யார்...?

என் மனதில் ஒன்றை நினைத்தால் அதை முடிக்காமல் விடுவேனா.........?

காத்திருந்தேன்.

நாடகம் தயாரித்தேன். நடித்தேன். அந்தப் பைத்தியம் சாவித்திரியின் மீது அன்பைக் கொட்டுவது போல் பாவனைகள் செய்தேன். இயல்பில் நெஞ்சழுத்தம் நிறைந்த அவளை அன்பால் மட்டுமே வெல்ல முடியும் என்ற கணிதத்தைத் தெரிந்து,சரியாகக் காய்களை நகர்த்தினேன்.

அவள் என் நடிப்பில் மயங்கினாள். மயங்கி வீழ்ந்தாள். எனக்காக எதையும் இழக்கும் நிலைக்கு அவளைக் கொண்டு வந்தேன். வேலை ஒன்று இருந்ததால்...தன் வீட்டோடு... அல்லது உங்களோடு தங்கினால் என் வன்மம் தீராதல்லவா...? அவளில்லாமல் நான் நிமிட நேரங்கூட வாழமாட்டேன் என சாகசமாய்ப் பேசினேன். இடையில்தான் எத்தனை தடங்கல்கள்...? நீங்களும் அவளும் என் நடிப்பில் நன்கு அயர்ந்துவிட்டபின்னும் அனிதா மட்டும் விழித்துக் கொண்டேயிருந்தாள் என்பது போல் ஒரு ஐயம். அவளின் பேச்சு எடுபடாமலிருக்க அந்த ஏமாளி சாவித்திரியிடம் நான் எவ்வளவோ கவனமாய்... கணிசமாய் நடித்தேன்... நடந்தேன். வெற்றியும் பெற்றேன். சென்னை வந்தேன். ஒரு ஒதுக்குப் புறத்தில் அவளை இருத்திவிட்டு, என் வேலையை நான் ராஜினாமா செய்தேன். என் திவ்யா எங்கிருக்கிறாள் என்பது எனக்கு மட்டுமே தெரியும். அவளைத் தேடிநான் புறப்பட்டுவிட்டேன். இனி அந்த உங்கள் மருமகள், சென்னையில் பட்டினியால்... பசியால்... தன் உடலை விற்பதற்கு அல்லது தற்கொலை செய்து கொள்வதற்குத் தான் முன் வந்தாக வேண்டும்.

ஏனென்றால்... அவளின் நகைகள் அனைத்தையும் நானே எடுத்துக்கொண்டு போகிறேன். இனி அவள் யாரைத் தேடியும் போகமாட்டாள். நெஞ்சழுத்தமுள்ள அவளையும் நம் வீட்டிற்கு வரவோ, நம் சொத்தில் சொந்தம் கொண்டாடவோகூடாது என அவளின் சுய கவுரவத்தையே அவளைச் சுற்றிக் கட்டுக்கயிறுகளாக்கினேன். எனவே அவள் நம் வீட்டிற்கு வரவே மாட்டாள்.




R.S.SANTHANAM

Sri Brammasakthi Amman Thunai Sri Sudalaimadaswami Thunai

R.S.SANTHANAM

ரேவதி ஹார்டுவேர்ஸ்

Dealers in: Cement, Steel Quality Bricks, Sand, Blue Metal and Building Material Suppliers.

Stockist : Coramandel, ultra Tech, Zuari / Priya Cement

38/24-A, Poonamallee Road, Ekkattuthangal, Chennai-32. Ph:22252948, 22250015 Cell: 9840042948.

உங்கள் இல்லத்தில் உடனே திருமணம் நடைபெற வேண்டுமா?

Prop.K.A.Raman Nadar

Sri.R.M.T.திருமண தகவல் மையம்



கைராசியான ஸ்தாபனம் மற்றும் இந்து, R.C, C.S.I. நாடார் வரன்கள் அமைத்து தரப்படும். MD, MBBS, M.E, M.SC, M.C.A மற்றும் IAS, IPS, VIP வரன்களுக்கு மில் தொழில் அதிபர் வரன்களுக்கு அணுகவும்.

106, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை-26.போன்:45588957, செல்:9380791999, 9841329471. E-mail:ramannadar2004@yahoo.co.in Web:www.srirmt.com

# மார்ஷல் A.நேசமணி நாடார்




Marshal A Nesamony Birthday 12-06-1895
ஏ நேசமணி

Uploaded: Jun 12, 2020
228 Views - 18 Likes

குமரித்தந்தை எல்லை மீட்பு போராளி, தமிழ்தேசிய சிந்தனையாளர் மலையாள ஆதிக்கத்தை எதிர்த்து வெற்றிகண்டவர் ஐயா மார்சல் நேசமணி அவர்களுக்கு அவருடைய பிறந்த நாளில் புகழ் ...

(திரு.ஜெயமோகன் தொகுத்து வெளியிட்ட அறம் என்னும் புத்தகத்தில் "வணங்கான் நாடார் எழுதிய பகுதியிலிருந்து).

1.நாகர்கோவில் நீதிமன்றத்தில் எதிரில் இருந்த அம்புரோஸ் டீ கடையில் நாடார்கள் மட்டும் தான் வருவார்கள். மங்களா தெருவைச் சேர்ந்த சில நாடார்கள்தான் வக்கீலுக்கு படித்திருந்தார்கள். 12.7.1921ம் நாள் செவ்வாய்கிழமையன்று காட்டு நாடான் மாதிரி வக்கீல் உடையை சுழற்றி போட்டா பத்து பனையை ஏறி பயினி எடுக்கும் திறன்கொண்ட சுமார் 26வயதுள்ள பள்ளியாடியைச் சேர்ந்த அப்பாவுப் பெருவட்டர் என்பவரின் மகன் நேசமணி, திருவனந்தபுரம் சட்டக்கல்லூரியில் பி.எல், முடித்து நாகர்கோவில் பாரில் வக்கீலாகப் பதிவு செய்து முதல் நாளாக காலை 11மணியளவில் அம்புரோஸ் டீகடையில் உட்கார்ந்து "சூடாட்டு ஒரு சாயா எடுல மக்கா" என்றார். டீ குடித்தபின் வக்காலத்து பேப்பர்களுடன் நாகர்கோவில் நீதிமன்றத்திற்குள் நுழைந்தார்.

2.நீதிமன்றத்துக்குள் நேசமணி சென்ற முதல் நாளே பெரிய பிரச்சனை ஏற்பட்டது. கையில் வக்காலத்து பேப்பர்களுடன் அவர் நீதிமன்றத்தில் நுழைந்தார். நீதிமன்றத்திற்குள் ஏழெட்டு நாற்காலிகளும், நான்கு முக்காலிகளும் போடப்பட்டிருந்தன. முக்காலிகள் ஜீனியர்களுக்கு என்பது பேச்சு வழக்கானாலும், நாடார்கள் முக்காலிகள் ஜீனியர்களும், நான்கு முக்காலிகளும் போடப்பட்டிருந்தன. முக்காலிகள் ஜீனியர்களுக்கு என்பது பேச்சு வழக்கானாலும், நாடார்கள் முக்காலிகளில் தான் அமரவேண்டும் என்பது ஒரு வழக்கமாகப் பேணப்பட்டது. நேசமணி நேராகச் சென்று ஒரு நாற்காலியில் அமர்ந்தார். வழக்குக்கு வந்த அரசு வழக்கறிஞர் எம்.சிவசங்கரன் பிள்ளை, அவர் அமர்ந்திருப்பதைக் கண்டு முகம் சுளித்துத் திரும்பிச் சென்றுவிட்டார். நேசமணி அருகே எவருமே அமரவில்லை. அரைமணிநேரம் தானே தனியாக அமர்ந்திருப்பதை அவர் உணர்ந்த போது, ஏதோ தப்பாக இருப்பதைத் புரிந்து கொண்டார். - தொடரும்.........

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின்121வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!
கே.பி.துரைராஜ். செல்:7358736272, 7299136586
DURAI VILAS SWEETS
எங்களிடம் தரமான கடலை மிட்டாய், பொரி வகைகள் தயாரித்து கொடுக்கப்படும்.
கிடைக்கும் இடம்: 67/37, சண்முக சுந்தரம் தெரு, முத்தமிழ் நகர், சாலிகிராமம், சென்னை-93.









ராஜ்பவன் (Retd) திரு.P.S.பீட்டர் சகாயநாதன், திருமதி.M.P.ஆரோக்கியமேரி இல்லத் திருமண விழா!!
மணமக்கள்:பி.எஸ்.லூர்துமேரி லாவண்யா DCSE., BCA., M.SC., (Cyber Forensics & IT)
திரு.சி.அரவிந்திரன்,DECE., B.E.,MBA., (Finace), மணநாள்:8.6.2023, இடம்: சின்னமலை புனித ஆரோக்கிய அன்னை ஆலயம். வருகை தந்து மணமக்களை வாழ்த்திய அனைவருக்கும் நன்றி!! நன்றி!!!




# உன் சிந்தனை உனது வெற்றி

- முனைவர் சா.தா.நோவா **செல்:9443303456,**

**முடிவெடுத்தபின் குழப்பம் வேண்டாம்**



உன்னதமான இலட்சியத்தை நோக்கி நடக்கும் சிலர் அவ்வுயர்ந்த இலக்கை அடைய தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் செலவிட தயாராய் இருப்பர். ஏனெனில் வாழ்வது ஒரு முறைதான். இந்த இலட்சியம் உலக நலனுக்கு பயன் தருமா அல்லது நமக்கு ஆத்ம திருப்தியும், அழியாப் புகழையும் தருமா என்று சிந்தித்து இறங்க வேண்டும்.

பெரிய வெற்றியை நோக்கிப் பயணம் செய்யும்போது சிறுசிறு தடைகள் குறுக்கே வரும். கொஞ்சம்கூட அதைத் திருப்பிப் பார்க்காதே.

பெரியதோர் இலட்சிய உலகில் நிலைத்து நிற்பதற்கு எதையும் எதிர்த்து நிற்கலாம்.

**மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார். செவ்வி அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார் கருமமே கண்ணாயினார் என்பது தமிழ் வேதமல்லவா!**

அதிக நேரத்தையும் காலத்தையும் நீங்கள் தேர்ந்தெடுத்த லட்சியத்திற்கே செலவிடுங்கள். அதுதான் உங்களுக்கு பெரிய வெற்றியைத் தேடித் தரும்.

முனைவர் மு.வரதராசனார், சிறு சிறு நிகழ்ச்சிகளுக்குப் போவதில்லை. எத்தகைய இனியவர்கள் என்றாலும் காலத்தை வீணடிக்கும் எந்தக் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ள மாட்டார். பெரியதோர் இலட்சிய உலகில் நிலைத்து நிற்பதற்குச் சில சில வாய்ப்புகளை புறக்கணிப்பதில் தவறில்லை என்பது அவரது கருத்தாகும்.

அவர் எழுதிய நூல்கள், எழுப்பிய மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் இன்றைக்கும் அவர் புகழ் பாடுகின்றதே!

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் ஏதாவது ஓர் இலட்சியத்தை நோக்கி செயலாற்ற வேண்டும். ஆரம்பத்தில் இதைச் செய்வதா? அதைச் செய்வதா? என்ற தடுமாற்றம் கட்டாயம் வரத்தான் செய்யும். ஆனால் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தபின் மறுபடியும் வேறு எதையாவது எண்ணி குழப்பம் அடையக் கூடாது.

**தடைக்கற்களை தரைமட்டமாக்கு**

நாளை, நாளை என்ற முடிவு எடுத்த எவனும் எந்த ஒரு காரியத்தையும் ஒரு நாளும் செய்ததாக சரித்திரம் இல்லை.

நாளை என்பது இல்லாதது, இலட்சியத்தில் வெற்றி காண வேண்டும் என்றால் நல்ல வாய்ப்புகள் தானாக கிடைக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்களோ!

நெப்போலியனைப் பார்த்து ஒருவர், "இன்னும் வாய்ப்புகள் கிடைத்தால் மேலும் பல நாடுகளை வெற்றி கொண்டிருப்பீர்களோ? என கேட்டபோது நெப்போலியன் 'வாய்ப்பா'? அதை நானேதான் எனக்காக உண்டாக்கியது" என்றாராம். தனது வெற்றிக்கும் தோல்விக்கும் தானே பொறுப்பு.

எனவே வாய்ப்புகளை நாமேதான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாய்ப்பை முறையாக செயல்படுத்தினால் நமது இலட்சியத்தில் எளிதாக வெற்றி அடையலாம்.

தடைக்கற்களை நாம் தாண்டி வந்தாலும் இனியும் கடந்து வர இருப்பதாலுந்தான் நாம் விலங்கிலிருந்து வேறுபடுகிறோம்.

போராட்டமே வாழ்க்கை

நிலவில் கால் பதித்த பிறகு

"It's small step for me"என்றானே அமெரிக்க விண்வெளி வீரன் நீல் ஆம்ஸ்ட்ராங் அவனுக்கு ஏற்பட்ட தடைக்கற்கள் ஒன்றா? இரண்டா? ஓராயிரமல்லவா உருவாகியிருக்கக்கூடுமே? ஆனாலும் அவன் கால்கள் ஓய்ந்தனவா? அவன் மனம் மயங்கிடவில்லையோ?

"சந்திரனை கண்டது மனிதசக்தி
சரித்திரத்தை மாற்றியது மனிதசக்தி
இந்திரன்தான் விண்ணகத்தின் அரசன்
என்ற இலக்கணத்தை மாற்றிது மனிதசக்தி"

"இந்த கீழ் ஆற்றல் நிலை மற்றும் மேல் ஆற்றல் நிலைக்கோட்பாடு" உலகின் எல்லா இயக்கங்களுக்கும் பொருந்தும். (தொடரும்)

# தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!! Aachi

# தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்

**உணவு உலகத்து அதிசயங்களும்... ஆச்சரியங்களும்...**

நாசரேத் வரலாற்றுக்கு வாழ்க்கைப்பட்ட பூமி. 200 ஆண்டுகளுக்கு முன்பே தெய்வீக சிந்தனையாளர்கள் அங்கு காலடி எடுத்து வைத்து, நாசரேத்துக்கென்று தனி வரலாற்றை உருவாக்கி விட்டார்கள். வரலாறுபடைத்த அந்த பூமியில் பிறந்ததால்தானோ என்னவோ பத்மசிங் ஐசக்குக்கும் வரலாற்று பாடத்தின் மீது ஆர்வம் அதிகம். அதனால் எல்லாவிதமான வரலாற்று விஷயங்களையும் தேடிப்பிடித்து படிப்பது அவர் வழக்கம்.

நாசரேத் அந்த காலத்தில் விவசாய பெருங்குடி மக்களால் சூழ்ந்திருந்தது. பத்மசிங் ஐசக்கும் சிறுவயதில் விவசாய பணிகளை மேற்கொண்டிருக்கிறார். அதனால் விவசாயத்தின் நெளிவு சுளிவுகள் அவருக்கு தெரியும். விவசாயிகளின் கஷ்டங்களும் அவருக்கு புரியும்.

மற்ற துறைகளை சார்ந்தவர்கள் மீது அவருக்கு இருக்கும் மதிப்பைவிட விவசாயிகள் மீது அவர் வைத்திருக்கும் மரியாதை மிக அதிகம். ஏன்என்றால் அவர்கள் ஊருக்கே சோறிடும் உன்னதமானவர்கள். அவர்கள் இல்லாவிட்டால் உணவு இல்லை.

இந்த உலகம் உயிர்களால் ஆனது. உயிர்கள் அனைத்தும் உணவினால் ஆனவை. உணவு இல்லாவிட்டால் உயிர்களே இல்லை. அதனால்தான் கடவுள் மனிதர்களை படைக்கும் முன்பே அவர்களுக்கான உணவை இந்த உலகத்தில் உருவாக்கிவிட்டார். அதை தேடிப்பிடிக்கவும், நல்லது எது-கெட்டது எது என்று பகுத்து உணரவும் மனிதனுக்கு அறிவையும் கொடுத்தார்.




உணவின் உன்னதத்தை உணர்ந்த பத்மசிங் ஐசக், அதன் ரகசியங்களையும், அதிசயங்களையும் தெரிந்துகொள்ள உணவின் வரலாற்றை தேடிப்பிடித்து படித்திருக்கிறார். பி.எச்டி செய்யும் ஒரு ஆய்வாளரைப் போன்று, உணவின் வரலாற்றில் ரொம்பவும் ஆழ்ந்து போயிருக்கிறார். அவர் கற்றுக்கொண்ட விஷயங்களில் முக்கியமானவற்றை பேசலாம் என்று முடிவு செய்தோம்.

அன்றைய அலுவல்களை எல்லாம் முடித்துவிட்டு, இரவு உணவையும் ருசித்துவிட்டு அதன் சுவையில் சற்று மெய்மறந்திருந்த பத்மசிங் ஐசக்கிடம் உணவு உலக வரலாறு பற்றி பேசத் தொடங்கினேன். சுவாரஸ்யமாக அருவி போல் அவர் தகவல்களை கொட்டினார்...



"ஆதி மனிதனுக்கு இயற்கைதான் பகுத்தறிவை புகட்டியது. மழை வந்து, 'இதுதான் நீர்' என்று காட்டியது. அது நிலத்தில் விழுந்து புல் பூண்டுகள் முளைத்தன. செடி, கொடி, மரங்கள் பூத்தன, காய்த்தன! காயும், கனியும் இதுதான் என்பதை இயற்கைதான் உருவாக்கி, மனிதனுக்கு காட்டிக்கொடுத்தது. அவைகளைதான் மனிதன் சாப்பிட்டான். அதனால் ஆதி மனிதன் முதலில் பச்சையாக சாப்பிடத்தான் தெரிந்து வைத்திருந்தான்.

தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் காத்துக் கொள்வதற்காக, தாக்க வந்த மிருகங்களை அவன் கொன்றான். ஆனாலும் அதில் சிலவற்றை உணவாக தின்னலாம் என்பது அப்போது அவனுக்கு தெரிந்திருக்கவில்லை.

காய்கறி, பழங்கள், பச்சிலைகளை அவன் தின்று வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில், ஒருநாள் அவனுக்கு தீயை இயற்கை அறிமுகம் செய்தது. எப்படி தெரியுமா?

திடீரென்று காட்டுத் தீ பற்றிக் கொண்டது. மனிதன் உயிர் பிழைக்க ஓடினான். தீ, காட்டின் ஒரு பகுதியை அழித்துவிட்டு ஓய்ந்தது. 'எனக்கு காய்கனிகளை தந்த மரங்களை அழித்துவிட்டாயே!' - என்று தீயை மனிதன் திட்டிக்கொண்டே, அழிந்த பகுதிகளை ஏமாற்றத்தோடு பார்த்துக்கொண்டிருக்க, அவன் மூக்கை அதுவரை தொடாத மணம் ஒன்று தொடுகிறது. அருகில் செல்கிறான். முயல் ஒன்று வெந்துகிடக்கிறது. மான் ஒன்று கருகிக்கிடக்கிறது.

அவனுக்கோ நல்ல பசி. வெந்து கிடக்கும் முயலோ 'என்னை சாப்பிட்டுப் பாரேன்' என்று சொல்வதுபோல் உமிழ் நீரை சுரக்கச்செய்கிறது. என்ன ஆனாலும் ஆகட்டும் என்று ஆதி மனிதன் முதலில் முயல்கறியை சுத்தப்படுத்தி தின்கிறான். அவனுக்கு ஒன்றும் ஆகவில்லை. ருசி நன்றாக இருந்தது. தன்னை சார்ந்த மனிதர்களுக்கெல்லாம் கூச்சல் போட்டோ, குலவையிட்டோ முயல்கறி மகிமையை உணர்த்தினான். (தொடரும்)





கீழ ஈரால் அருள்மிகு காமாட்சி அம்மன் துணை

எம்.எஸ்.முத்துவேல் நாடார்,
போன்:9443742889. 7708701159.

**சரவணன் ரியல் ஏஜென்சிஸ்**

**காமாட்சி ஸ்டோர்ஸ்**

**தலைவர் மாமல்லபுரம் வட்டார நாடார் சங்கம்**

நிலம் வாங்க விற்க லேஅவுட் புரோமோட்டர் எண்:118/1, டி.கே.எம்.ரோடு, மாமல்லபுரம், பின்கோடு-603104.




N.R.N.Group போன்:044-26790587

**பிரியா டிப்போ**

**கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.**

2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.





GP **கோபால் பிளாஸ்டிக்**

**Dealers in :** எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டிரியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33



S.இராஜகோபால்

**RS பிளாஸ்டிக்**

உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்
நெ.16, உய்யாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.



S.ஜெயராஜ்



**ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்**

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**
**செல்9445171819, 044-22253484.**
2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை-32.





N.R.P.செந்தில் நாடார், செல்:9841038856,

**N.R. பட்டுராஜன் டிரேடர்ஸ்**

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி, தள ஓடு, கடப்பா கல், சுண்ணாம்பு,
M.Sand, P.Sand. கிடைக்கும். **Email: senthilnrp@gmail.com**
4, ஆற்காட் ரோடு, கணபதி நகர், போரூர், சென்னை-116.

# வெற்றிப்படிக்கட்டு



வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)

## சூழ்நிலைக்கேற்ப மாறுபடும் நன்மை, தீமைகள்!

"முன்னே போனால் கடிக்கும், பின்னால் போனால் உதைக்கும்" என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள் இது ஒரு மாதிரியான இக்கட்டானச் சூழ்நிலையில் சிக்குபவர்களுடைய நிலையை விளக்கிச் சொல்வது. சரியா, தவறா என்று கேட்பார்கள். நாம் சரி என்று சொன்னாலும் தவறாகிவிடும். தவறு என்று சொன்னாலும் தவறாகிவிடும். இப்படிப்பட்ட நேரத்தில் என்ன செய்தால் நம்மால் இந்தப் பிரச்சனையிலிருந்து மீள முடியும் என்று சிந்தித்துச் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

ஏசுநாதரின் வாழ்வில் நடந்த பிரபலமான ஒரு சம்பவம். ஏசுநாதரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மக்கள் அவரைப் பின்பற்றத் தொடங்கினார்கள். ஆனால் அதிகாரவரம்பில் இருந்தவர்களோ பழைய வேத நெறிகளுக்குப் புறம்பாகப் போதிக்கிறார் என்று அவர் மீது குற்றம் சுமத்தினார்கள். இதற்கென்றே குற்றம் சாட்டும் நோக்குடன் ஏசுநாதரைப் பின் தொடரும் அதிகார வர்க்கக்கூட்டம் ஒன்று இருந்தது. ஒரு நாள் உடலை விற்று வாழும் விலைமாது ஒருத்தியை ஒரு ஊரே ஒன்று கூடி கல்லால் அடித்துக் கொல்ல முயன்றது. ஏசுநாதர் முன்பாக இந்த அநீதி நடந்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எண்ணியது அதிகார வர்க்கம்.

'இந்தப் பெண்ணை அடிக்காதீர்கள்' என்று ஏசுநாதர் சொன்னால் "பழைய வேத நெறிகளுக்கு முற்றிலும் எதிரானவர்" என்று அவர் மீது பழி போட்டு குற்றவாளியாக்கலாம். அல்லது அதை மீறிக் குற்றவாளி என்பதால் 'அடியுங்கள்' என்று கூறினால், இத்தனைகாலம் அவர் போதித்த கருணை, இரக்கம், மன்னிப்பு எல்லாமே பொய் என்று கூறி ஏசுநாதரின் மீது பழி சுமத்த அந்தக் கூட்டத்தினர் துடித்தனர்.

அவர்களது மன எண்ணத்தைப் புரிந்து கொண்டார் ஏசுநாதர். உண்மையான ஒரு ஞானிக்கு இக்கட்டான சூழ்நிலை என்பது கிடையாது. அவர்கள் சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் உள்ளவர்கள். ஏசுநாதரின் வாய்மொழியை எதிர்பார்த்துக் கூட்டம் நின்றது ஏசு பிரானோ சாந்தமாக அவர்களைப் பார்த்து. "இந்தப் பெண் மீது கல்லை விட்டெறியுங்கள், ஆனால் இதுவரை உடலாலும், மனதாலும் ஒரு பாவமும் செய்யாதவன் எவனோ? அவன் கல்லெறியட்டும் என்று எதிர்ப்பாளர்களின் எதிர்பார்ப்பைத் தகர்த்தெறிந்தார். அப்பொழுது அந்தப் பெண் ஏசுவின் காலடியில் விழுந்து "நான் பாவம் செய்தவள், கல்லால் அடித்து கொல்லத் தக்கவளே. மேன்மைக்குரிய தாங்களே என்னைத் தண்டியுங்கள்" என்று வேண்டினாள்.

உன்னைத் தண்டிக்கும் அதிகாரம் எனக்கு இல்லை. அது என் வேலை இல்லை. உன்னை நீ உணர்ந்து கொள் கடவுளிடம் உன் குறைகளைச் சொல்லி பிரார்த்தனை செய் என்று கருணை உள்ளத்துடன் சொல்லி விட்டுப் போனார். இதுதான் வெற்றியாளனுக்குத் தேவைப்படும் சிந்தனை. இக்கட்டான நேரம் என்றால் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

இது போலத்தான் புத்தரிடம் ஒரு பெண் தன் இறந்த குழந்தையைப் பிழைக்க வைக்க வேண்டும் என்று பிடிவாதமாக வேண்டிய போது புத்தர் அந்த பெண்ணுக்குப் புரிய வைக்க மரணம் இல்லாத குடும்பத்தில் கடுகு வாங்கி வரச் சொன்னார். அப்படி கடுகு வாங்கச் சென்ற பெண்மணிக்கு அவளது அனுபவங்களே மரணம் என்பது தவிர்க்க முடியாதது என்பதை உணர வைத்தது.

புத்தர் மகானாக இருந்தாலும் பாசத்துடிப்பில் சிந்திக்காமல் அடம் பிடிக்கும் அந்தப் பெண்மணியைச் சாத்வீகமான முறையில் அனுபவரீதியாக உணரவைத்த புத்திசாலித்தனம் அவருடைய கருத்தை அந்தப் பெண்மணியை ஏற்றுக் கொள்ள வைத்தது. இதுதான் இக்கட்டான சூழ்நிலை வரும் பொழுது வெற்றியாளர்கள் சிந்தித்துச் செயல்படும் வழிமுறை. (தொடரும்)





# S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A

**Correspondent**

## Koilpillai Mat.Hr.sec.School

65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.
Ph:044-22492489. 22492286, Cell:9840715246.
Email:samuelathisayaraj@gmail.com



ஸ்ரீ பொன் படைப்போர் ஐய்யனார் துணை

காமராஜர் 121வது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்!

# ஸ்ரீ ஈஸ்வரி ஸ்டோர்

அரிசி வகைகள் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
இங்கு மாட்டுத் தீவனம் கிடைக்கும்.



உரிமை:ஆர்.கருப்புசாமி

5/19, அனுமந்தபுரம் ரோடு, சிங்கபெருமாள் கோயில், செல்:9944926488, 9941946422, 8012694685, 9003271615.



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின்121வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!

R. ARUMUGAM, 9840233872. S.PRABAKARAN, 9962665162.

# AMUDHAA HOTEL

No:68-D, Valmiki Street, Thiruvamiyur, Chennai-41.
NO:22, Kannagi Street, Anbalagan Nagar, Taramani, Chennai-113

கல்வி கண் திறந்த காமராஜர் அவர்களுக்கு 121வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்!



# G.ARAVIND TRADERS

வெங்காயம் உருளை மொத்த வியாபாரம்
K-1, Periyar Veg. Market,
Koyambedu, Chennai-92. Cell:9840676004.



ஜி.கணேஷ்

கல்விக்கண் திறந்த காமராஜரின் 121வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்!!!



SJM

Ph: 2535 7787
044-42157787.

# S. JAYA MURUGAN METALS

*Dealers: Aluminium Vessels*

**# 10. Paramasiva Chetty Street,**
**Parktown Chennai-3**



S. Jayapal Nadar

# மானாடும் மானாட்டாரும்:கி.பி.1600 விடியலிலிருந்து-3

-டாக்டர் ஆ.தசரதன். செல்:9444169603.

கி.பி.1600ஆம் ஆண்டிலிருந்துதான் சான்றோர் குல நாடார்களின் பல வகையறாக்களின் வரலாறு கல்வெட்டுகள், கதைப்பாடல்கள், செப்பேடுகள் போன்ற ஆவணங்களால் அடையாளப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக இவ் அடையாளங்கள் சில இருந்தாலும் கி.பி.17ஆம் நூற்றாண்டுத் தொடக்கமே இவை கண்டறியப்பட்டுள்ளன.

செம்பிராப் பணிக்கன் எனும் ஆட்சியாளனின் தண்ணீர்த்தொட்டி தர்மம் மானாட்டில் கி.பி.1600இல் ஏற்பட்டதை அடுத்து வலங்கைச் சான்றோர்குல வீரர் எழுநூற்றுவரின் போர் சாகசங்கள் பாடப்பெற்ற வலங்கைமாலை என்ற வரலாற்று ஆவணம் அதே மானாட்டின் சுந்தராச்சி அம்மன் கோவிலில் அரங்கேறியது.

இவ்விரு ஆவணங்களுக்கு அடுத்த நிலையில் கி.பி.1606 இல் பாடப்பெற்ற வெங்கலராசன் வில்லுப்பாட்டுக் கதை இவனுடைய பிற்பகுதி நிகழ்வு மானாட்டில்தான் நடந்தது என்கிறது அதனால் இக் கட்டுரையின் தலைப்பை ஒட்டி வெங்கலராசனின் பிற்பகுதி வரலாறு கி.பி.16ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் நடந்திருந்தாலும் பொதுமக்களிடம் பரவியது 1606க்குப் பின் தான். அகத்தீசுவரம் ஆறுமுகப் புலவரே இப்பாட்டை இயற்றியவர்.

மானாட்டில் அரங்கேறிய வலங்கை 700 வீரர் வரலாற்றைக் கூறும் வலங்கை மாலையில் வலங்கை உய்யக் கொண்ட சான்றோர் குலப் பெருமக்கள் சிலருடைய வரலாறும் விரவி வருகின்றது. இவர்கள் பற்றி இனிவரும் இதழ்களில் இடம்பெறும்.

வலங்கை உய்யக் கொண்டாரிலும் மேம்பட்ட தெலுங்குச் சோழர்களான, விஜயநகர வேந்தர்களுக்கு உட்பட்டிருந்த, தமிழ்ப்பாகத்து மகாமண்டலேசுவரர்களில் மானாட்டில் வாழ்ந்த வெங்கலராசன் எனும் பெருமகன் பற்றி இந்திய நாடார் முரசின் ஜூலை மாத இதழில் எழுதி வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில் தெலுங்குச் சோழர்களில் பலர் தமிழ்ப்பாகத்தில் மகா மண்டலேசுவரர்களாக இருந்தாலும் வெங்கலராசனே கல்வெட்டு மற்றும் கதைப்பாடல் ஆவணங்களால் அடையாளப்படுவதோடு அவன் கூட்டத்தாரும் இன்றளவும் ஆங்காங்கே பரவலாக இருந்துவருவதும் காரணமாகும்.

மேலும் இந்த வெங்கலராசன் வீர சேகர சோழன் என்ற தெலுங்குச் சோழனின் மகனும் ஈழத்தில் கண்டியிலிருந்து ஆட்சி செய்த அச் சோழ மன்னனின் வாரிசும் ஆனபடியால் ஓர் ஆட்சிப் பின்புலத்திலிருந்து அவன் வந்ததால் ஏற்படுகின்ற வரலாற்றுப் பின்புலம் சான்றோர் குல வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

ஈழநாட்டில் ஒல்லாந்தரின் சதியால் மறைந்த வீரசேகர சோழனுக்குப் பின் வெங்கலராசனும் அவன் தாயாரும் கப்பலில் வந்து பஃறுளி ஆற்றின் முகத்துவாரத்தில் வெங்கலக்கோட்டை கட்டி வாழ்ந்ததாகத் தொடங்கும் வில்லுப்பாட்டுக் கதை. அப்பகுதியிலிருந்து வெங்கலராசன் மாநாட்டில் குரும்பூர் அருகே குடியேறிக் கோட்டை கட்டி வாழ்ந்ததாகக் கதையைக் கொண்டு செல்கிறது அப்பாட்டு. மூத்த மகளின் இறப்புக்குப் பின் மானாட்டிலாவது மனநிம்மதியுடன் வாழலாம் என்ற வெங்கலராசனின் வாழ்க்கை இளைய மகள்மீது பொய்க் குற்றம் சாட்டி மானபங்கம் செய்ய முற்பட்ட மேனாட்டான் என்ற ஆட்சியாளன் காரணமாகக் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டான் வெங்கலராசன் என வில்லுப்பாட்டு முடிவடைகிறது.

16ஆம் நூற்றாண்டின் மையப்பகுதிக் காலத்தில் வாழ்ந்ததாக அறியப்பட்ட வெங்கலராசனின் வாழ்க்கையை வில்லுப்பாட்டில் கி.பி.1606இல் பாடியுள்ளார் ஆறுமுகப்புலவர். இதில் வரலாற்று உண்மை எந்த அளவு உள்ளது என்பது ஆய்வுக்குரியது.

குமரிப் பகுதியில் வெங்கலராசனையும் அவன் தாயாரையும் உன்னிக்கேரளவர்மன் கைதுசெய்ததாகவும் பிரான்சிஸ் சேவியர் ஈடாகத் தங்கத்தை வெங்கலராசனிடமிருந்து பெற்று விடுவித்ததாகவும் குறிப்பு உள்ளது.

வெங்கலராசன் தெலுங்குச் சோழன் என்பதாலும் அவன் தந்தையும் தெலுங்குப் பகுதி ஒன்றின் ஆட்சியாளனாக இருந்து ஈழத்திற்கு விசய நகரத்தார் தொடர்பாகச் சென்றதாலுமே வெங்கலராசன் தமிழ்ப்பாகத்து மகாமண்டலேசுவரனாக நியமனம் பெற்றிருக்கலாம்.

இந்த நியமனத்துக்குப்பின் கி.பி.1544இல் சேரன்மாதேவியில் உள்ள சென்னராய சுவாமி திருக்கோவிலில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டில் வெங்கலராசன் இடம்பெற்றுள்ளான் இது பிலவ ஆண்டினது. இது தெலுங்குக் கல்வெட்டாகும். ஏர்வாடி ஊரைச் சேர்ந்த திம்மய்யன் என்ற பிராமணன் செய்த குற்றத்திற்காக அவனைச் சாதிப்பிரஷ்டம் செய்தனர். அவனுடைய நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, திருவெங்களநாதர் கோவிலுக்கு வழங்கினர் வழங்கியவர்கள் இராமராஜ விட்டள தேவ மகாராசாவின் காரியத்துக்குக் கர்த்தரான வேலம்பாட்டி வெங்கல தேவ மகாராசனும் மகா மண்டலேசுவரர் இராமராச சின்ன திம்மய தேவ மகாராசாவின் காரியத்துக்குக் கர்த்தரான கொல்லி ராமப்ப நாயுடு, பசவப்ப நாயுடு என்பவர்களும் ஊராரும் ஆவர்.

ஆக, இளம் வயதில் 1544ல் வெங்கலராசன் ஆட்சி அதிகாரத்தில் இருந்தது தெரியவருகிறது. விஜயநகரத்துச் சார்பாளன் என்பதால் அவனிடம் வடுகப் படை இருந்தது. வடுகப் படை பாண்டியர்களுக்கு எதிரானதாகும்.

கி.பி.1547ஆம் ஆண்டு இந்த வடுகப்படையுடன் வந்த வெங்கலராசன் கயத்தாறு அருகே உள்ள இளவேலங்கால் என்ற பகுதியில் கயத்தாற்று அரசனான வெட்டும் பெருமாள் பாண்டியனுடைய காலாட்படையான கொண்டையங்கோட்டை மறவர்களுடன் போரிட்டு அவர்களில் பன்னிருவரைக் கொன்றான். இந்தச் செய்தி அப்பகுதியிலுள்ள இளவேலங்கால் நடுகற்களிலிருந்து அறியப்படுகிறது.

வெட்டும் பெருமாள் என்றால் பாண்டியன். வெட்டுமாவேலி என்றால் மறவன். இந்த வெட்டும் பெருமாள் பாண்டியனுக்குத் திருநெல்வேலிப் பெருமாள் என்ற பெயரும் உண்டு. இப்போருக்குப்பின் அப்பாண்டியன் உன்னிக் கேரள வர்மனுடன் கூட்டு சேர்ந்தான் என்ற செய்தியும் உண்டு. இந்தக் கயத்தாற்றுப் பாண்டியனைப் பற்றி அந்தகக் கவி வீரராகவ முதலியார் கயத்தாற்றரசன் உலா என்ற நூலைப் பாடியுள்ளார். ஆனால். அந்த நூல் கிடைக்கவில்லை.

திருக்குறுங்குடியில் விசயநகரத்து வேந்தர்களான இராயர்கள் அமைத்த ஆலயங்களில் அணிலீஸ்வரம் கோயிலும் ஒன்று. கி.பி.1555-ஆம் ஆண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு வெங்கலராசன் தொடர்பாக அங்குக் காணப்படுகிறது. "விட்டலதேவ மகாராசா காரியத்துக்குக் கர்த்தரான வேலம்பாட்டி வெங்கலதேவ மகாராசா என அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஆந்திரப் பகுதியில் காளகஸ்தி அருகே உள்ள வேலம்பாட்டியே வெங்கலராசனின் பூர்வீக ஊராகும். தன் ஊர்ப்பெயரை முன்னொட்டாக வைத்துக்கொண்ட வெங்கலராசன் ஏனைய தெலுங்குச் சோழ மகா மண்டலேசுவரர்களைப் போல் மகாராசா என அழைக்கப்பட்டுள்ளான்.

ஈழம், குமரி, ஏர்வாடி, திருக்குறுங்குடி, சேர்மாதேவி, இளவேலங்கால் எனும் பகுதிகளோடு வரலாற்றுத் தொடர்பு கொண்டிருந்த வெங்கலராசனின் சில கால வரலாறு மானாட்டுடன் தொடர்புள்ளதாக கி.பி.1606இல் பாடப்பெற்ற வில்லுப்பாட்டு தெரிவிக்கின்றது. வில்லுப்பாட்டில் வரலாற்றுக் கூறுகள் எத்தனை விழுக்காடுகள் இருக்கும் என்பதும் ஆய்வுக்குரியது.

தெலுங்குச் சோழ குலத் தோன்றலாகவும் வலங்கைச் சான்றோனாகவும் மகாமண்டலேசுவரனாகவும் படைத் தலைமை பூண்டவனாயுமிருந்த வெங்கலராசசோழனின் வாழ்க்கையை விரித்துப் பாடிய வில்லுப் பாட்டுக்கும் கல்வெட்டுகள் மற்றும் ஆவணங்கள் கூறும் வாழ்க்கை வரலாற்றுக்கும் வேறுபாடுகள் உள்ளன. வெங்கலராசனின் முடிவு அவலமுடிவாக இருந்ததாக வில்லுப்பாட்டு கூறுகின்றது. வெங்கலராசனின் இருப்பிடமும் பிற மானாட்டார் இருப்பிடங்களும் தேரி மண்மாரியால் தூர்ந்து போயிருக்கலாம். அதனாலேயே அவன் தன் கூட்டத்தாருடன் வெளியேறியிருக்கலாம்.

விசய நகரத்து ஆதரவுடன் பணியாற்றிய

வெங்கலராசன், அவ்வாதரவு குறைந்து மதுரை நாயக்கர்களின் செல்வாக்கு தென்பாண்டி நாட்டில் மிகுந்த காலக்கட்டத்தில் வாழ்ந்ததால் நாயக்கர்களின் புறக்கணிப்புக்கு ஆளாகியிருந்திருக்கலாம்

வெங்கலராசன் கி.பி.16ஆம் நூற்றாண்டின் மையத்தில், ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முற்பட்டு வாழ்ந்திருந்தாலும் அவனுடைய வெங்கலக் கோட்டையின் இடிபாடுகள் பஃறுளி ஆற்றின் முகத்துவாரத்தருகில் உள்ளன எனச் சான்றுகள் கூறுகின்றன.

வெங்கலராசன் கூட்டத்தார் குமரிப்பகுதிகளிலும் தென்பாண்டிப் பகுதிகளிலும் வாழ்ந்துவருவது கண்டறியப்பட்டுள்ளது. இவர்களில் யாராவது அவனுடைய வரலாற்றைத் தெரிந்து தொகுத்தால் அவ்வலங்கைச் சான்றானின் சமூகப் பண்பாட்டு வரலாறும் பிறவும் தெற்றென விளங்கும் சான்றோர் குலத்தினர் வரலாற்றுக்கு முத்தாய்ப்பாக விளங்கும்.


உரிமை:S.MAXY Praise The Lord 9444580976 9962843074

மெசியா பிளாஸ்டிக்

பழைய பிளாஸ்டிக் மொத்த வியாபாரம்

(பழைய பிளாஸ்டிக் மொத்தமாகவும், சில்லரையாகவும் வாங்கப்படும்)



எண்:285/2ஏ2 இந்திரா நகர், கனராவங்கி எதிரில், சேலையூர், சென்னை-73.


# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு


தொகுப்பு ஆசிரியர்:சு.செந்தமிழ்ச் செல்வன்
செல்:98412 26856.


## 8.நாடார்களின் பிரிவுகள்



நாடார் சமூகத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து திரு.எட்கர் தர்ஸ்டன் (Edkar Thurston) என்பவர் தன்னுடைய "தென்னிந்திய சாதிகளும், பழங்குடிகளும்" (1909) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அவை:

1).கருக்கு பட்டையர், 2).மேல்நாட்டா, 3)நட்டாத்தி, 4).கொடிக்கால், 5).கள்ள சாணார்

1).கருக்கு பட்டையர்:

கருக்கு பட்டையர் என்ற இந்த சாதியினருக்கு "கருக்கு மட்டையர்" என்ற வேறுபெயரும் உண்டு. "கருக்கு"என்பதற்கு " கூரிய முனை" எனப் பொருள். "மட்டை" என்பதற்கு பனைஓலையின் தண்டு" என்று பொருள். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் பனைத் தொழில் செய்து வந்ததால் இப்பெயர் ஏற்பட்டது.

கல்குளம், விளங்காடு வட்டங்களில் வசித்த நாடார்கள் "கருக்கு மட்டை" என்ற பட்டப் பெயரால் அழைக்கப்பட்டனர்.

கருக்கு மட்டையன் என்ற பெயரில் அழைப்பது கண்ணியக் குறைவாகக் கருதப் பட்டதால் "கருக்கு பட்டையன் "என்று வேறு பெயரில் அழைக்கப்பட்டனர். "பட்டையம்" என்ற சொல்வாளைக் குறிக்கும். ஆகவே கருக்கு பட்டையனை கூரிய வாளை உடையவர் என்றும் அழைத்தார்கள்.

கருக்கு பட்டையார் என்ற இந்தப் பிரிவுக்கு "மாநாட்டான்" என்றொரு வேறு பெயரும் உண்டு. இது மாபெரும் நாடு என்று பொருள்படும்."மாநாடு" என்ற ஊர் திருச்செந்தூருக்கு நான்குமைல்களுக்கு அப்பால் அமைந்து உள்ளது. இவ் வகுப்பினர் இந்த இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது.

இந்தப் பிரிவினருக்கு வேலை செய்பவர்களாகவும், பல்லக்கு தூக்குபவர்களாகவும் இருந்தவர்கள் "கல்லா" என்று அழைக்கப்பட்டனர். சாதி வரலாறு எழுதிய சில அறிஞர்கள் இந்த சாதியை "மாற நாடார்கள்" என்றும் குறிப்பிடுகின்றனர். இவர்கள் பாண்டியர்களின் வழி வந்தவர்கள் என்று விளக்கி உள்ளனர். (நாடார் சமூக வரலாறு -குலசேகர ராஜ் 46 நாடார்களில்உள்ள ஐந்துபிரிவுகளில் 80% பேர் கருக்கு பட்டையர்கள் ஆவர். இவர்களை "நிலமைக்காரர்கள்" என்றும் அழைப்பார்கள் . இதில் பனைத் தொழிலாளர்களும் அடங்குவார்கள்.

நாடார்கள் மத்தியில் "அ" பிரிவு மற்றும், ஆ பிரிவு என்று இரு பிரிவுகள் இருந்தது. அதில் "அ" பிரிவைச் சேர்ந்தவர்கள் கருக்கு பட்டையர்கள்.இவர்கள்தான் அசல் நாடார்கள். மற்ற நான்கு கிளைப் பிரிவைச் சார்ந்தவர்கள் "ஆ" பிரிவு நாடார்கள் ஆவர்.

2) மேல் நாட்டார்:

சேரர்கள் வழி வந்த நாடார்கள் பாண்டிய நாட்டில் குடியேறி மேற்குத் தொடர்ச்சி மலையோரம் வாழ்ந்து வந்தார்கள். தென் திருவிதாங்கூரிலும், நெல்லை மாவட்டம் மேற்குப் பகுதியிலும், பெரும்பான்மையாக அம்பாசமுத்திரம் பகுதிகளிலும் வசித்து வந்தனர். தென்காசி, சங்கரன் கோவில், ஸ்ரீ வைகுண்டம், நாங்குநேரி ஆகிய பகுதிகளிலும் சிலர் வசித்து வந்தனர்.

பாண்டியர்களின் செப்பேடுகளிலும், தளவாய்புரம் செப்பேட்டிலும் "நாடார்" என்போர் "மாசில்லாக் குடியினர்" என்று சொல்லப்படுகிறது. மாசிலாவன் குடியில் தோன்றியவர் என்பது குற்றமற்ற அரசகுடி எனத் தெளிவாகிறது.நாடன், நாட்டார் என்பது ஆட்சிப் பொறுப்பின் சிறப்பால் கிடைத்த பெயராக இருக்கலாம்.

மேல் நாட்டார்களை, திரு பேட்ஸ், "மேநாட்டான்" என்று குறிப்பிடுகிறார். மேல் நாடு என்பதற்கு "மேற்கத்திய நாடு" என்று பொருள்.

3) நட்டாத்தி:-

பாண்டியர்கள், சோழர்கள் இணைப்பின்வழி வந்தவர்கள் "நட்டாத்தி நாடார்கள்" என்று புராணச் சான்றுகள் குறிப்பிடுகின்றன.

